ஓம்

திருச்சிற்றம்பலம்

செந்தமிழ்ச் செல்வி

திருநெல்வேலித் தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தினின்றும்

திங்கள்தோறும் வெளிவருவது

சிலம்பு ௯	மெய்கண்டான்யாண்டு-௭௱௬ மாசித்திங்கள் 1928௵ பிப்ரவரி—மார்ச்௴	பரல் ௨

திருச்சிற்றம்பலம்

கற்றாங் கெரியோம்பிக் கலியை வாராமே
சேற்றார் வாழ்தில்லைச் சிற்றம் பலமேய
முற்றா வெண்டிங்கண் முதல்வன் பாதமே
பற்றா நின்றாரைப் பற்றா பாவமே.

'கற்றாங்கு எரியோம்பி' என்றதனால் கற்றதன் பயன் எரியோம்புதலாம் என்பது பெறப்படும்.

எரிபெருக்கி அவ்வெரியினைச் சிவபெருமான் திருவுருவமாகக்கொண்டு வணங்குதலின், எரியோம்புதல் கடவுள் வணக்கத்துக் காயிற்று. இறைவனைத் தீப்பிழம்பின் வாயிலாக வணங்கும் வணக்கம் தமிழ்ச்சைவராவார்க்குப் பண்டு தொட்டே நிகழ்ந்து வருகின்றது.

இறைவன் திருவுருவத்துக்கு அடையாளமாகிய எரியினை அவியாதபடி பாதுகாத்தலால் எரி 'ஓம்பி' எனப்பட்டது. அதாவது எரி வளர்த்தல். கலி - செருக்கு. இஃது இப்பொருள் தருதலைப் "பருமம் களையாப் பாய்பரி கலிமா" என்னும் **நெடுநல்வாடை** யடியினாற் (௧௭௮) கண்டு கொள்க. இங்கு அது மலத்துக்கு வந்தது. 'பற்றா பாவமே' என்று பின்னர்ப் பன்மை வாய்பாட்டான் வருதலின், கலியை என்றதற்கு ஆணவ

மலத்தையும் அதன் விளைவான மாயை இருவினை மலங்களையுங் கொள்க. செற்றார் - செற்ற அந்தணர். இது வினையாலணையும் பெயர். மூன்றாம் பிறைத் திங்களையே சிவபெருமான் அணிந்தாராதலின் 'முற்றாவெண்திங்கள்' என்றார்.

பற்றா நின்றாரை - பற்றுகின்றாரை. ஈது உள்ளத்தாற் பற்றுதல்.

இவ்வருட்பாடலின் கருத்தைக்

"கற்றாங்கு அறிந்துஅடங்கித் தீதொரீஇ நன்றுஆற்றிப்
பெற்றது கொண்டு மனம்திருத்திப் - பற்றுவதே
பற்றுவதே பற்றிப் பணிஅறநின்று ஒன்றுஉணர்ந்து
நிற்பாரே நீள்நெறிச்சென்றார்"

என்னுங் **குமரகுருபர அடிகளின்** திருமொழி அதன் சொற்பொருட் குறிப்புகளோடு கதுவி நிற்றல் இங்கு நினைவு கூரற்பாலது.

"கற்றாங்கு எரியை ஓம்பிக் கலியை வாராமே செற்றவர்கள் வாழ்கின்ற தில்லைச் சிற்றம்பலத்தின்கண் மேய முற்றாத வெண் திங்களையுடைய முதல்வனது பாதமே பற்றுகின்றாரைப் பற்றா பாவமே" என்று உருபு முதலியவைகளை விரித்து வகைப் படுத்துக்கொள்க.

கற்றறிந்தாரேத்துங்கலி

[திரு. பு. க. முத்துசாமிப் பிள்ளையவர்கள்]

கலித்தொகைக்குக் கற்றறிந்தார் ஏத்தும் கலி என அடை கொடுத்து மொழிந்தஆன்றோர் அதனை முற்றிலும் நன்குணர்ந்தே அவ்வடைமொழியைக் கூறியிருத்தல் வேண்டும். பிற்றை ஞான்றைப் புலவர்கள்போலாது இயற்கை நலங்களைத் தாம் கண்டவாறே எடுத்துரைக்கும் பெற்றி பண்டைப் புலவர் மாட்டு மட்டுமே காணப் பெறுவ தொன்றாம். இயற்கை நலங்களையே ஒரு சிறிதும் வழுவாது எடுத்துரைக்கும் எட்டுத் தொகையி னுள்ளும் கலித்தொகைக்குள்ள சிறப்பு ஏனையவற்றிற் காணப் படா. தமிழ்த்தாயின் பலப்பல அணிகலனுள்ளும் இவ்வணி கலனே அத்தாய்மகளுக்கு மிகுந்த மகிழ்தரக்கூடியதும், தலை வன் தலைவியர் மனவியற்கையை உள்ளவாறே தெள்ளத் தெளிய எடுத்துரைப்பதும், பிறமொழி கலவாப் பேரணிகல னுவதும் ஆகும். இதன் நயத்தை உள்ளுதொறும் உள்ளுதொறும் கல்

நெஞ்சும் உருகுமென்றே நினைக்கின்றேம். இவ்வாசிரியர் நல்லந்துவனார் காலம் வடமொழி கலக்கப் பெறாத தூய தமிழ்க் காலம். தமிழ்மணம் இந்நூலில் யாண்டுஞ் செறிந்து கமழுதலை இதனைப் படிப்போர் நன்கு அறிவர். இவர் இயற்கையொடு ஒட்டிக் கூறும் இயற்கை மிக வியக்கற்பாலது. ஒர்ட்ஸ் உவர்த் (Words worth), தென்னிசன் (Tennison) போன்ற பாட்டெழுத வல்ல ஆங்கில ஆசிரியர்களெல்லாம் இவருக்கு எட்டுணையும் ஈடாகார்.

தமிழின் சிறப்பும் அதன் நுண்மையும் அருமையும் இடந்தொறும் மிளிர இவ்வாசிரியர் பாட்டியற்றும் மாண்பு மற்றை ஆசிரியர்களிடத்துக் காண்டல் அரிது.

அன்பர்கள் பார்த்து இன்புறுதற்கு இவ்வாசிரியரின் பாட்டு ஒன்றை ஈண்டுத் தருகின்றேம்.

"பால்மருள் மருப்பின் உரல்புரை பாவடி
ஈர்நறுங் கமழ்கடாத் தினம்பிரி ஒருத்தல்
ஆறுகடி கொள்ளும் வேறுபுலம் படர்ந்து
பொருள்வயிற் பிரிதல் வேண்டும் என்னும்
அருளில் சொல்லும் நீசொல் லினையே
நன்னர் நறுநுதல் நயந்தனை நீவி
நின்னிற் பிரியலென் அஞ்சல் ஓம்பென்னும்
நன்னர் மொழியும் நீமொழிந் தனையே
அவற்றுள், யாவோவாயின மாஅல் மகனே
கிழவர் இன்னோர் என்னாது பொருள்தான்
பழவினை மருங்கில் பெயர்பு பெயர்பு உறையும்
அன்ன பொருள்வயிற் பிரிவோய் நின்இன்று
இமைப்புவரை வாழாள் மடவோள்
அமைக்கவின் கொண்டதோள் இணைமறந்தே."

இஃது இவ்வாசிரியரால்,

"உருகண் ஓம்பல் தன்னியல் பாகலின்
இரியதாகுந் தோழிகண் உரனே."

என்னும் தொல்காப்பிய இயலுக்கு எடுத்துக் காட்டாக மொழியப்பட்டது.

இச்செய்யுள் தலைமகனாற் பிரிவுணர்த்தப்பட்ட தோழி அவனை நெருங்கிக் களவுக் காலத்து ஒழுக்கம் எடுத்துக் காட்டலால் தெளிவுபட மொழிந்ததூஉம் பொருளது நிலையின்மையும் அவளது ஆற்றாமையும் கூறிச் செலவு மறுத்தது.

இப்பாட்டின் பொருள் :—பாலை ஒத்த கொம்பினையும், உரல் அடியை ஒத்த நிலத்தில் பாவும் அடியினையும், குளிர்ந்து நறியவாகக் கமழும் மதத்தினையும் உடைய இனத்தைப் பிரிந்த யானை வழியைக் காவல்கொண்டு நிற்கும் வேறுகிய நிலத்தைப் போய்ப் பொருள் தேடுகின்ற இடத்தே இவளைப் பிரிந்திருத்தலை நெஞ்சு விரும்புமென்று சொல்லும் அருளில்லாத சொல்லையும் நீசொன்ஞய் ? எம்மை விரும்பி நன்மையையுடைய நறிய நுதலை நீவி நின்னிடத்தினின்றும் பிரியேன், நீ அஞ்சுதலைத் தவிர்வாய் என்று சொல்லும் நன்மையையுடைய சொல்லையும் நீ சொன்ஞய், மயக்கத்தினுடைய மகனே அவ்விரண்டினுள் உண்மையிடத்தன யாவைதான் அறிகின்றிலேன் நீ தேடுகின்ற பொருள்தான் இத்தன்மையோர் நமக்கு உரியரென்று கருதாதே பிறரிடத்து நின்ற நல்வினையாலே மீண்டு மீண்டு சென்று தங்கும். நின்னையின்றிக் கண்ணிமைத் தொழில் நிகழும் காலத்தின் எல்லையும் உயிர் வாழாத மடவோளுடைய மூங்கிலினுடைய அழகைத் தன்னிடத்தே கொண்ட தோளிரண்டினையும் மறந்து அத்தன்மைத்தாகிய பொருள் தேடுகின்ற இடத்தே இவளைவிட்டுப் பிரிந்திருப்பாய் என்பதே.

இச்செய்யுள் சுருங்கிய அடிகளான் இனியவாய் நிறைந்த பொருளினதாய் இருக்கும் பெற்றி நவில்தொறும் நவில்தொறும் இன்பம்தந்து நிற்றல் பெரிதும் போற்றற்பாலது. ஓவியப் புலவன் சாயல்பெற எழுதிய வடிவ வேறுபாடுபோல எடுத்துக் கொண்ட பொருளைக் கண்ணெதிரே நுட்பமாய்த் தெரிந்து நிற்கும் பான்மை பெரிதும் வியக்கற்பாலதொன்று.

வேற்றுப்புலம் போதல் வேண்டாமென்னும் கருத்தால் அப்புலத்தில் இனம்பிரி ஒருத்தல் நிற்றலைச் சுட்டிக் கூறினுள். அஃது இனத்தைப் பிரிந்திருத்தல் தக்கதன் ருயினுற்போல நீயும் எம்மைப் பிரிந்துறைதல் தகாதென்னும் குறிப்புத் தோன்றக் கூறினுளு மாயிற்று.

முன் என்னைக் கண்டஞான்று தலையளிசெய்து அருளுடையையாய் மொழிந்த நீ இஞ்ஞான்று அருளில் கூற்றை மொழிகின்றனையே என்னும் வருத்தத்தால், மால் மகனே எனக் கூறினுள். பொருள் நிலையாமை குறித்துக் கூறியிருக்கும்

"கிழவ ரின்னேர் என்ஞது பொருள்தான்
பழவினை மருங்கில் பெயர்பு பெயர்பு உறையும்"

என்னும் அடிகள் பெரிதும் நினைவு கூரற்பாலன.

"நின்னிற் பிரியலென் அஞ்சல் ஓம்பென்னும்
நன்னர் மொழியும் நீமொழிந் தனையே."

என்னும் அடிகளோடு

"அளித்தஞ்சல் என்றவர் நீப்பின் தெளித்தசொல்
தேறியார்க் குண்டோ தவறு"

என்னும் **திருக்குறள்** அடிகள் ஒப்பிட்டு நோக்கற்பாலன.

தமிழ் இலக்கியம்
TAMIL LITERATURE

வெற்றி வேற்கை

VETTRI - VERKAI

(holding in his hand the spear of Victory.)

[திரு. T. B. கிருஷ்ணசாமி முதலியாரவர்கள், M. A., B. L.]

பிரணவப் பொருளாம் பெருந்தகை யைங்கரன்
சரணவற் புதமலர் தலைக்கணி வோமே.

Set we upon our head the sacred lotus-feet of the Five-armed God (Ganesh), who is the essence of the Pranava or world creating sound "AUM."

வெற்றி வேற்கை வீர ராமன்
கொற்கை யாளி குலசேகரன் புகல்
நற்றமிழ் தெரிந்த நறுந்தொகை தன்னால்
குற்றம் களைவோர் குறைவிலா தவரே.

The ruler of Korkai, the glory of the race of the Pandyas, holder of spear of victory, Vira Rama, has writ this NARUNTHOKAI (miscellany or collection of good things) in sweet tamil.

May it help its readers to reform themselves and live prosperous lives.

From the opening words of the poem.

1. எழுத்தறிவித்தவன் இறைவனாகும்.
The teacher of letters is the Lord.

2. கல்விக் கழகு கசடற மொழிதல்
Faultless speech is an essential of good learning.

3. செல்வர்க் கழகு செழுங்கிளை தாங்குதல்.
It is gracious of the rich to support their kindred.

4. வேதியர்க் கழகு வேதமு மொழுக்கமும்.
Knowledge of the Vedas and an exemplary conduct are expected of the Brahmans.

5. மன்னவர்க் கழகு செங்கோன் முறைமை.
Absolute justice adorns kingship.

6. வணிகர்க் கழகு வளர்பொரு ளீட்டல்.
To earn more and more wealth is the pride of the merchant.

7. உழவர்க் கழகு உழுதூண் விரும்பல்.
To eat the fruits of agriculture is the pride of the farmer.

8. மந்திரிக் கழகு வரும்பொரு ளுரைத்தல்.
To forsee is the virtue of a statesman (Minister).

9. தந்திரிக் கழகு தறுகண் ணாண்மை.
To be brave and unshaken in any emergency is the virtue of the captain.

10. உண்டிக் கழகு விருந்தோ டுண்டல்.
It is gracious to eat with guests.

11. பெண்டிர்க் கழகெதிர் பேசா திருத்தல்.
Not to contradict is a virtue in women.

12. குலமகட் கழகுதன் கொழுநனைப் பேணுதல்.
To nurse her husband is characteristic of the well-born wife.

13. விலைமகட் கழகுதன் மேனி மினுக்குதல்.

Adorning her body is characteristic of the prostitue.

14. அறிஞர்க் கழகு கற்றுணர்ந் தடங்கல்.

Moderation in all things is the virtue of the wise.

15. வறிஞர்க் கழகு வறுமையிற் செம்மை.

Rectitude in poverty is the virtue of the poor.

16. தேம்படு பனையின் திரள்பழத் தொருவிதை
வானுற வோங்கி வளம்பெற வளரினும்
ஒருவர்க் கிருக்க நிழலாகாதே.

Though each big seed of the close grown bunches of the Palmyrah, sprouts forth and shoots high into the sky ; it casts no shade in which any could rest.

17. தெள்ளிய ஆலின் சிறுபழத் தொருவிதை
தெண்ணீர்க் கயத்துச் சிறுமீன் சினையினும்
நுண்ணிதே யாயினும் அண்ணல் யானை
அணிதேர் புரவி ஆட்பெரும் படையொடு
மன்னர்க் கிருக்க நிழலா கும்மே.

The seed of the Banyan is smaller than the egg of the smallest fresh-water fish ; And yet, when it grows into a tree, it casts a shade in which may rest Kings with their four-fold armies, elephants, chariots, horse and foot-soldiers.

18. பெரியோ ரெல்லாம் பெரியரு மல்லர்
சிறியோ ரெல்லாம் சிறியரு மல்லர்.

The Big are not great ; nor are the small mean.

சொற்பொருள் வேறுபாடு

[திரு. S. அனவரதவிநாயகம் பிள்ளையவர்கள் M. A., L. T.]

(௫-ம் சிலம்பு ௫௪௯-ம் பக்கத் தொடர்ச்சி.)

'கோமய' என்னும் ஆரியச்சொல் பசுவின் சாணமென்னும் பொருளது. அது தமிழில் இலக்கியத்தில் அப்பொருளிலேயே வருதலுண்டாயினும் உலக வழக்கில் கோசலம் அல்லது கோ மூத்திரமாகிய பசுவின் நீர் என்னும் பொருளில் வருகின்றது. கோமியமென மருவியும் வழங்கும்.

'தல்லீ' என்னும் ஆரியச் சொல் யுவதி யென்னும் பொருளது. அது தெலுங்கில் தாய் என்னும் பொருளில் வரும். மலையாளத்தில் தாய் அல்லது கிழவி என்னும் பொருளில் வரும். தள்ள என்பதும் இச் சொல்லே. மலையாளச் சொல்லுக்கு மூலம் தமிழ்த் 'தள்' ளாவிருத்தல் கூடும்; அதுவே வயது முதிர்ந்தார்க்கு ஓரியல்பாகும் தள்ளாமைக்கும் பிறப்பிடம். ஆதலால் இவ்வாரியச்சொல் திராவிட மொழிகளிலிருந்து கடன் வாங்கப்பட்டதோ என்றெண்ணவேண்டி யிருக்கிறது.

'த்ருஷ்டி' என்னும் ஆரியச்சொல் பார்வை என்னும் பொருளது. தமிழ்த்தற்பவமாகிய திருஷ்டிக்கு அப்பொருளும் உண்டாயினும் கண்ணேறு அல்லது கண்ணூறு என்னும் பொருள் பெருவழக்கா யிருக்கின்றது. இப்பொருளில் வருங்கால் அது 'கண்திருஷ்டி' யென்று வழங்குவதேயன்றி 'கந்திட்டி,' 'கந்தட்டி' என்று மருவியும் வழங்கப்பெறும். 'திருஷ்டி கழித்தல்,' 'திருஷ்டி சுற்றிப் போடுதல்' முதலிய வழக்குக்களையுங் காண்க. இத்திருஷ்டி தோஷத்தையே கண்ணெச்சிலென்றும் கண்மிச்சிலென்றுஞ் சொல்வர்.

'நிஜ' என்னும் ஆரியச்சொல் உடன்பிறந்த என்னும் பொருளில் முதலில் வழங்கிப் பின், உடன்பிறந்த இயல்பு இறுதி வரை நிற்குமாகலின் நிலையான என்னும் பொருளில் வழங்குவதாயிற்று. தமிழில் 'நிஜம்' அல்லது நிசம் என்பது மெய்ம்மை யென்னும் பொருளில் வழங்கும் ஸத்ய என்னும் ஆரியச் சொற்குப் பரியாயமாய் வழங்குகின்றது. தெலுங்கு கன்னட மொழிகளிலும் 'நிஜம்' மெய்ம்மை உண்மை யென்னும் பொருளிலேயே வரும்.

'பக்ஷ' என்னும் ஆரியச்சொல் சிறகு, பக்கம், கக்ஷம் முதலிய பொருள்களில் வருமாயினும் தமிழிலுள்ள அன்பு என்னும்

பொருள் பட்சம் என்னும் தற்பவத்துக்குப் புதியதே. கக்ஷி யைச் சேர்ந்தார் தங்ககக்ஷியை அபிமானித்தல் இயல்பேயாத லால், பக்ஷத்துக்கு இப்பொருள் வந்திருக்கவேண்டும். 'பக்ஷ மாய் நடத்துகிறான்' முதலிய வழக்குக்களில் கக்ஷி ஞாபகமே நமக்கு இருப்பதில்லை.

'பரிதாந' என்னும் ஆரியச்சொல் பண்டமாற்று, வைப்பை மீண்டு மளித்தல் என்னும் பொருள்களில் வரும். தமிழில் பரிதானத்துக்கு வழக்கு முதலியவற்றில் நீதிப் பிறழ்வுக்கு நிமித்தமாகும் கைக்கூலி பொருளாகின்றது. கைக்கூலி என் னும் பொருள் பண்டமாற்றிலிருந்து எளிதாகப் பெறப்படும். கூலியும் தாளமும் அவை பெறுவோனிடத்திலுள்ள இழி குணத்தை நன்கு தெரிவிக்கின்றன.

'பரிஹார' என்னும் ஆரியச் சொல் நீக்குதலென்னும் பொருளது. தமிழில் அது தீங்கு வராமற் றடுக்கும் உபாயத் தையும் தீங்கு நேர்ந்துழி அது மாற்றும் வழியினையும் குறிக்க வழங்கப்படும். தோஷபரிகாரம், திருஷ்டிபரிகாரம் முதலிய வற்றிற் காண்க. அதற்கு உபாயமென்னும் பொருள் குறுகி உடற் பிணியை யொழிக்கும் மருந்தென்னும் பொருள்வர, பரி காரி என்னும் சொல் 'பண்டிதன்' போல அம்பட்டன் என் னும் பொருளில் வழங்குவதாயிற்று. இது பரியாரி என மரு வியும் வழங்கும்.

'பைத்திக' என்னும் ஆரியச்சொல் பித்த சம்பந்தமான தென்னும் பொருளது. தமிழில் தற்பவமாகிய பைத்தியம் வெறி, கோட்டி என்னும் பொருளில் வரும். பித்த மிகுதியே பைத்தியத்தை யுண்டாக்குமென்று சொல்லுவ ரன்றே.

'ப்ரமாத' என்னும் ஆரியச்சொல் தவறு, அஜாக்கிரதை யென்னும் பொருள்களில் வரும். தமிழ்த் தற்பவமாகிய பிர மாதம் தீங்கென்று பொருள்பட்டுப் பின் பாதகமென்னும் பொருளில் வந்து இறுதியாக "மரணப்ரமாத நமக்கில்லை" என்னும் அருணகிரிநாதர் வாக்கிற்போல ஆபத்தென்னும் பொருளில் வழங்கலுற்றது.

'ஸங்கோச' என்னும் ஆரியசசொல் சுருக்கம், திகில் என்னும் பொருள்களையுடையது. தமிழ்த் தற்பவமாகிய சங் கோசத்துக்கு இப்பொருள்களில்லை. ஆயினும் அதற்குள்ள கூச்சமென்னும் பொருளைச் சுருக்கத்தோடு பொருத்தலாம். கூச்சம் பின்வாங்குதல் தானே, அவ்வியல்பு காணுமிடத்து

உடல் முதலியவற்றை யொடுக்கல் காணப்படுகின்ற தன்றோ. தாவரங்களிலும் சில செடிகள் தொடுங்கால் பொறுமல் இலை சுருங்குதல் கண்கூடே.

'சிக்ஷா' என்னும் ஆரியச்சொல் கற்றல், கற்பித்தல் என்னும் பொருள்களில் வரும். தமிழ்த் தற்பவமாகிய சிட்சைக்கு அப்பொருள் அருகி வருகின்றது. குழந்தைகள் இசை கற்றலைச் சிக்ஷை அல்லது சிட்சை என்கின்றோம். ஆயினும் பெரு வழக்காயிருப்பது சிறைத் தண்டனை முதலிய தண்டனை யென்னும் பொருளே. சிக்ஷி அல்லது சிட்சி என்னும் வினை தண்டி என்னும் பொருளிலேயே வரும். முற்காலத்தில் கற்பித்தலுக்கும் தண்டித்தலுக்கும் நெருங்கிய சம்பந்த முண்மை தெளிவு. இக்கால 'கிண்டர்கார்டன்' முறைக்குமாறாகப் பிள்ளைகளுக்கு உபாத்தியாயரென்றால் நடுக்கமே. அற்ப காரணத்தை முன்னிட்டும் காரணமின்றியும் உபாத்தியாயர்கள் பிரம்பை யுபயோகித்தனர். பாடசாலைக்கு அதிகாலையிற் செல்பவர்களும் 'ஏறுன்' ஒருவனைத் தவிரப் பிரம்படி பெறுதலுண்டன்றோ! எனினும் குரவர் தண்டித்தல் மாணவர் திருந்தும் பொருட்டே யென்னும் கொள்கை யுண்மைபற்றித் திருத்த நோக்கமாகத் தண்டித்தலென்னும் பொருளில் வந்த சிட்சை பின் எவ்வகைத் தண்டனையையும் குறிக்க வழங்கப்பட்டது. முறையாகக் கற்பித்தல் என்னும் பொருளில் சிட்சை என்னும் சொல் சிட்டை என மருவியும் வழங்கும். சிஷ்டன் என்பதன் தற்பவமாகிய சிட்டன் என்பதனோ டுறழ்வால் இச்சொல் உண்டாயிருத்தல் கூடும்.

'ஸேவா' என்னும் ஆரியச்சொல் ஊழியம், தொண்டு, வழிபாடு என்னும் பொருள்களில் வரும். தமிழ்த் தற்பவமாகிய சேவை இலக்கியத்தில் அப்பொருள்களில் வருவதுண்டு. உலக வழக்கில் 'கருடசேவை' யென்பதற்குக் கருடவாகனத்தின்மேல் விஷ்ணு ஊர்தலைக் காண்டல் என்பதே பொருளாகின்றது. 'மாயாதி சேவையும்' என்னும் தொடரிலும் இதுவே பொருள். சேவை இப்பொருளில் சேர்வை யென்று திரிந்தும் வழங்கும். 'ஸேவை ஸாதித்தல்' என்னும் சம்பிரதாய வழக்கிற்கும் காட்சி தருதலே பொருளாகும்.

'ஸோம' என்னும் ஆரியச்சொல் சந்திரன் என்னும் பொருளது. தமிழ்த் தற்பவமாகிய சோமனுக்கு அப்பொருள் உண்டேயாயினும் பொதுவாக வஸ்திரமும் சிறப்பாக அரை வஸ்திரமும் சோமனெனப் படுகின்றது. ஒன்றன்பாலாகிய வஸ்திரத்தைக் குறிக்கும் சொல் னவ்விறுதி பெற்றிருத்தல் தமிழ் மரபிற்கு ஒத்ததன்று. அதனாலேயே குழந்தைகள் வேஷ்டியை

யென்று சொல்லவேண்டிய விடத்துச் சோமத்தை யென்கின்றனர். அப்பொழுது சோமமே எழுவாயாகும். 'ஸோம' என்னும் சொல்லே இரண்டு பொருளிலும் வந்ததென்று உறுதியாக உரைக்கலாகாது. வந்ததென்று கொள்ளின் வஸ்திரம் சந்திரன் போல் வெண்மையா யிருத்தலால் அப்பொருள் வந்ததென்க. முதலில் அவ்வாறு பொருள் ஏற்பட்டிருத்தல் கூடுமாயினும் இக்காலத்து அழுக்கு வஸ்திரமும் சோமனெனவேபடும். முன் கூறியதுபோலச் சோமன் அரை வஸ்திரத்தையே சிறப்பாகக் குறிக்கின்றது. சோமன் ஜோடு, சோமனங்க வஸ்திரம் என்னும் வழக்குக்களுங் காண்க. 'சந்திரன் இந்திரனுனன்' என்னும் சொற்றொடரும் இவ்விடத்து நோக்கற்பாற்று. சந்திரன் சோமனுக்குப் பரியாயமாய் வஸ்திரத்தைக் குறித்தது. இந்திரன் ஆயிரங் கண்ணுடையிருத்தல் போல வஸ்திரம் ஸஹஸ்ரகந்தல் என்பதை உவமை காட்டியது. மற்று, வஸ்திரம் என்னும் பொருளில்வரும் சோமன் 'ஸோம' என்பதன் தற்பவமே என்று சொல்ல வேண்டுவதில்லை. பட்டு வஸ்திரமெனப் பொருள் படும் 'க்ஷௌம' என்னும் ஆரியச் சொல் தமிழில் சௌமமென மாறும், க்ஷாத்ரம் க்ஷாமம் முதலிய சொற்கள் வழக்கில் மாறுதல்போல. பின் கௌதமன் கோதமனெனத் திரிதல் போலச் சௌமன் சோமனென்றாகும். இவ்வாறு திரிதல் பாகத மொழிகட்கே யொக்குமாயினும் தமிழிலும் அருகிக் காணப்படுகின்றது.

'ஸ்த்ரீதந' என்னும் ஆரியச் சொல் ஸ்திரீ தனக்கே யுரிமையாகப் பெற்றுள்ள சொத்தைக் குறிக்கும்; தந்தை, தாய், உடன்பிறந்தாள் கணவன் முதலியோராற் பெறப்படுவன வெல்லாம் அதனாற் குறிக்கப்படும். தமிழ்த் தற்பவமாகிய சீதனம் பெண் மணமாகிக் கணவன் வீட்டுக்குப் போகுங்கால் உடன் கொண்டு செல்லும் பொருள்களையே சிறப்பாகக் குறிக்கும். நில முதலிய கொடுக்கப்பட்ட சொத்துக்களைக் குறிப்பதுமுண்டு. இச்சொல்லை 'ஸ்ரீதனம்' என எழுதல் பிழை.

சொற்பொருள் வேறுபாடுணர்த்தப்பட்ட ஆரியச் சொற்கள்

ஆசார்ய	பாடக	பரிதி	தல்லீ
ஆஜ்ஞா	பசு	பவித்ர	த்ருஷ்டி
கர்ம	ப்ரயோஜந	யோஜந	நிஜ
காலக்ஷேப	பாஷா	ஆபாஸ	பக்ஷ

காஷ்ட	மத	கவிராஜ	பரிதாந
க்ருஹஸ்த	வணிஜ்	நாரீ	பரிஹார
கீர்வாண	வாதிந்	நிர்வாண	பைத்திக
கோஷ்டி	விசார	அதிஸய	ப்ரமாத
அஸ்திபாரம்	வேஷ்டி	அபராத	ஸங்கோச
தீர்த்த	வ்யாபார	அபஸ்மார	சிக்ஷா
தண்டபாணி	ஸம்ஸார	அப்ராணிந்	ஸேவா
தாஸ	ஸாதந	அப்யந்தர	ஸோம
தாஸீ	ஸ்தல	அவஸர	ஸ்த்ரீதந
நிஷ்டா	அம்ருத	ஆயத்த	
பண்டித	தண்டிகா	கோமய	

பிழை திருத்தம்.

சிலம்பு ௫

பக்கம்	வரி	பிழை	திருத்தம்.
௨௱௯	௧௧	‘ க்ருஹஸ்த ’ என்றற் ெருடக்கத்தன வேறு பகுதியாக வருதல் வேண்டும்.	
௨௱௰	௬	அறிந்தோர்	அறிந்தோர் சொல்வர்.
௩௱௩	௧	‘ தாஷ ’	‘ தாஸ ’
,,	௭	மாதா	மாதரா
,,	௧௪	உரைப்பதில்லை	உரைப்பதற்கில்லை
,,	௧௮	திரம்	திரம் உறுதி
௩௱௪	௧௮	தியான்	தியாயன்
,,	,,	>	<
௪௧௫	௨	எங்கள்	நங்கள்
,,	௯	சுபா சுப	சுபாசுப
,,	௧௭	ப்ரஜோஜநமு	ப்ரயோஜநமு
,,	௧௯	சுபா சுப	சுபாசுப
௫௪௫	௰	‘என்னும்’ என்பதன்பின் ‘இரண்டு சொற்களையும் ஒரே காலத்தில் நினைக்கும் பொழுது உறழ்வால் நிரம்மணம் தோன்றிற்று என்றலே பொருத்தமுடைத்து. அம்மணம் என்னும்’ என்டதைச் சேர்க்க.	
,,	௧௯	‘ அதிஸ்ய ’	‘ அதிஸய ’
,,	௩௪	தரா	தார
௫௪௬	௧௫	உன்னிடம்	உள்ளிடம்

அத்துவித உண்மை ஆராய்ச்சி

[திரு. மா. வே. நெல்லையப்பப் பிள்ளையவர்கள் B. A.,]

(சிலம்பு ௬, பரல் ௧, ௩௨-ம் பக்கத் தொடர்ச்சி)

அத்துவிதம் என்பது இறைவன் உயிர்கள் ஆகிய இரு வேறு அறிவுப் பொருள்களுக்கும் எப்பொழுதும் இயல்பாய் உள்ளதாகிய ஒற்றுமைத் தொடர்பு. இந்தத் தொடர்பை மக்களாகிய நாம் வாழும் உலகவாழ்வு நெறியில் எம்மட்டும் அறிந்து உணர்ந்து, அறிந்துணர்ந்தவழி ஒழுகுகின்றோமோ அம்மட்டும் இறைவனுடன் ஒற்றுமைப்பட்டு அவனது அருளைப் பெறுகின்றோம்.

இந்த அத்துவித உண்மையை நாம் உலக நெறியில் நமது சிற்றறிவுக்கு எட்டியமட்டும் இரண்டு வழியில் ஆராய்ச்சி செய்யலாம். ஒன்று இறைவன் உயிர்களுடன் தொடர்புபட்டு நிற்கும் நிலையில் நாம் அறிவது. மற்றொன்று உயிர்கள் இறைவனுடன் தொடர்புபட்டு நிற்கும் நிலையில் நாம் அறிவது. முதலாவது நாம் முன்னையவழியில் அத்துவித உண்மையைப்பற்றி ஆராய்வாம்.

இறைவன் உண்மை அறிவின்ப வடிவினன் (சச்சிதானந்த ரூபன்) இந்த உண்மையை ஒருபொருள்வழக்கர் (கேவலாத்துவிதிகள்) இருபொருள்வழக்கர் (துவைதிகள்) அடைபொருள் வழக்கர் (விசிட்டாத்துவிதிகள்) ஆகிய மூன்று வழக்கர்களும் கூறுகின்றனர். இரண்டன்மைவழக்கரும் (சுத்தாத்துவிதிகள்) இந்த உண்மையைக் கூறுகின்றனர்.

பூவண்ணம் பூவின் மணம்போலமெய்ப் போத வின்பம்
ஆவண்ண மெய்கொண் டவன்றன்வலி யாணை தாங்கி
மூவண்ண றன்சந் நிதிமுத்தொழில் செய்ய வாளா
மேவண்ண லன்னான் விளையாட்டின் வினையை வெல்வாம்.

என்று திருவிளையாடற்புராணத்தில் சிவவணக்கம் கூறியிருத்தல் காண்க.

இறைவனது உண்மை அறிவு இன்ப வடிவில் உண்மை வடிவு ஒன்றுநிலைக்கும் அறிவுவடிவு வேறுநிலைக்கும் இன்ப வடிவு உடனிலைக்கும் இயைந்துளது. நாம் ஒரு பொருளையாயினும் ஒரு உயிரையாயினும் அதன் பண்பினாலேயே உலகில் அறிகிறோம். நாம் இறைவனையும் நமதறிவளவில் அவனது பண்பினாலே அறிதல்வேண்டும். இறைவனுக்கு உண்மை அறிவு

இன்பம் ஆகிய மூன்றும் பண்புகளாயுள்ளன. மூன்று பண்புகளையும் விரித்து ஆறு பண்புகளை யுடையவனாகவும் (பகவன்) எட்டுப் பண்புகளை யுடையவனாகவும் (எண்குணத்தான்) இறைவனைக் கூறுதலுமுண்டு. எட்டுப் பண்புகளும் ஆறு பண்புகளும் மூன்று பண்புகளி லடங்கும். இறைவன் இவ்வாறு உண்மை, அறிவு, இன்பம் என்னும் மூன்று பண்புகளையும் உடையவனாயிருக்க அவனை நாம் மேலேகூறிய மூன்று நிலைகளிலும் வைத்து அவனை அறியாமல் இரண்டன்மைவழக்கர் தவிர ஏனைய மூன்று வழக்கர்களும் கூறுகிறபடி ஒரு நிலையில் வைத்து அறிதல் எப்படி முடியும்? உண்மை என்னும் பண்பினால் நாம் இறைவனை என்றுமுள்ள பொருள் (நித்தியப்பொருள்) என்று அறிகின்றோம்; அறிவு என்னும் பண்பினால் நாம் அவனைப் பேரறிவினன் அல்லது முற்றுணர்வினன் என்று அறிகின்றோம்: இன்பம் என்னும் பண்பினால் நாம் அவனைப் பேரின்பன் (ஆநந்தன்) என்று அறிகின்றோம். சார்ந்த வண்ணமாதற் றன்மையையுடைய மக்கள் இறைவனது உண்மைப்பண்பைச் சார்ந்து பிறப்பு இறப்புகளினின்று நீங்கி என்றும் இருக்கும் வாழ்வை (நித்திய வாழ்வு immortality) அடைதல் வேண்டும்; அவனது அறிவுப் பண்பைச் சார்ந்து உலக அறிவாகிய சிற்றறிவினின்று நீங்கிப் பேரறிவை அடைதல் வேண்டும், அவனது இனபபண்பைச் சார்ந்து உலக இன்பமாகிய சிற்றின்பத்தினின்றும் நீங்கிப் பேரின்பத்தை அடைதல் வேண்டும். இம்மூன்று பண்புகளும் அத்துவித மூன்று நிலைகளைப்போல ஒன்றுக்கொன்று மிக்க தொடர்புடையன. அறிவினாலே மக்கள் உலகில் உண்மையை ஒரு புடையாயாவது அறிதல் கூடும். உண்மையை இவ்வாறு அறிதலே அறிவாகும். அறிவினாலேயே இன்பம் அடைதல் கூடும். உண்மையன்றி அறிவு நிகழாது; அறிவு அன்றி உண்மை நிகழாது. உண்மையைச்சார்ந்த அன்பு அன்றியும் அறிவு அன்றியும் இன்பம் நிகழாது. மூன்று பண்புகளும் இவ்வாறு மிக்க தொடர்பு உடையனவைகளா யிருப்பினும் அவைகளை எல்லாம் ஒன்று சேர்த்து அறிதல் நமது சிற்றறிவுக்கு இயல்வதன்று. வேறு வேறாய்ப் பிரித்துத்தான் நாம் அவைகளை அறிதல் கூடுமானது. உண்மை இப்படி யிருப்பதை நாம் உற்று நோக்கினால் இரண்டன்மைவழக்கர் கூறும் மூன்று நிலைகள் அடங்கிய அத்துவிதமே நமது அறிவில் விளங்கும்படியாயுள்ள உண்மை என்றும், ஏனைய மூன்று வழக்கர்கள் கூறுகிற ஒவ்வொரு அத்துவிதமும் அறிவிற்குப் பொருத்தமில்லாத உண்மை என்றும் நாம் எளிதில் அறிந்துகொள்ளலாம். நமது அறிவளவில் பொருந்தியுள்ள உண்மையே நமக்கு உண்மையாகுமன்றி

அறிவுக்குப் பொருந்தாது எவராயிருப்பினும் பிறர் கூறுவதை வலுவில் நம்புகின்ற உண்மை நமக்கு உண்மை யாகாது.

இனி உண்மை அறிவு இன்பம் ஆகிய இறைவனது பண்புகள் மூன்றாயிருத்தலினோடு ஒவ்வொரு பண்பும் உலகநெறியில் மூன்று வகைகளாய்ப் பிரிந்து தோன்றுதலையும் நாம் அறிகின்றோம். நாம் உலகில் அறியும் உண்மை எல்லாம் பொய் கலந்த உண்மை அன்றித் தனித்த முழு உண்மை யாகாது. பொய் என்பது இங்கே விளங்குதலின்மை. ஒருண்மையை நாம் எம்மட்டும் உலகப்பொருளைச் சார்ந்தும் உயிர்ப்பொருளைச் சார்ந்தும் அறிகிறோமோ அம்மட்டும் அது பொய் ஆகின்றது; எம்மட்டும் நாம் அவைகளினின்றும் நீங்கி அறிகிறோமோ அம்மட்டும் அது உண்மை ஆகின்றது. ஆகவே நாம் உலகில் பொய், உண்மை, பொய் உண்மை என மூன்று வகைகளிலும் உண்மையை அறிகின்றோம். பொய் உண்மை பொய்யுண்மை என மூன்று வகைகள் நாம் காண்பதுபோல அத்துவிதத்திலும் ஒற்றுமை, (அபேதம்) வேற்றுமை (பேதம்) வேற்றுமை யொற்றுமை (பேதா பேதம்) என்னும் மூன்று நிலைகள் காண்கின்றோம். ஒற்றுமையும் வேற்றுமையும் சேர்ந்து வேற்றுமை யொற்றுமை நிலை ஆதல்போலப் பொய்யும் உண்மையும் சேர்ந்து பொய்யுண்மை வகை ஆகின்றது. இவ்வாறே நாம் உலகில் அறியும் அறிவிலும் அறிவு, அறியாமை, அறிவறியாமை என்றும் மூன்று வகைகளும் இருக்கின்றன. நாம் உலகில் நுகரும் இன்பத்திலும் இன்பம், துன்பம், இன்பதுன்பம் என்னும் மூன்று வகைகளும் இருக்கின்றன. உண்மைக்குக் கூறியதை அறிவுக்கும் இன்பத்திற்கும் பொருந்தக் கூறிக்கொள்க.

பொருட்சார்பும், உயிர்ச்சார்பும் முற்றிலும் விட்டு இறைவனை முற்றிலும் உயிர்கள் சார்ந்தபொழுது அவர்களிடத்தில் பொய்யும் உண்மையும் நீங்கி முழு உண்மையும் அறிவு அறியாமையும் நீங்கிப் பேரறிவும் இன்பமும் துன்பமும் நீங்கிப் பேரின்பமும் விளங்கி இறைவனுடன் அத்துவித நிலையை அடைவார்கள். இவ்வாறு உயிர்கள் அத்துவித நிலையை அடைதற்கு உண்மை அறிவு இன்பம் என்னும் இறைவனுடைய மூன்று பண்புகளுக்கும் தொடர்பாயுள்ள ஒன்றுநிலை, வேறுநிலை, உடனிலை ஆகிய மூன்று அத்துவித நிலைகளும் வேண்டப்படுவன ஆகும்.

உயிர்கள் இறைவனுடன் தொடர்புபட்டு நிற்கும் நிலையில் நாம் அறியும் மற்றொரு வழியில் வைத்து எழுதும் அத்துவித உண்மை ஆராய்ச்சி உரை அடுத்த கட்டுரையில் இறைவன் திருவருளுளதாயின் கூறப்படும். (தொடரும்.)

திருக்காளத்திக் காட்சி

[திருவளர் செல்வி. நாகை. நீலாம்பிகை அம்மையார்]

உலக இயற்கைக் காட்சிகளைக் கண்டு மகிழுமாறும் இறைவனை வணங்குமாறும் திருக்காளத்திக்குச் சென்றோம். அவ்வூரினுள்ளே செல்லச் சாயுங்காலம் ஏழுமணியாய் விட்டது. தங்குமிடத்திற்காகச் சத்திரங்களைத் தேடினோம். முடிவில் பார்ப்பனரல்லாதார் ஒருவரால் நன்றாகக் கட்டப்பட்ட சத்திரம் ஒன்றுக்குப்போய், இரண்டிரவு தங்கச் சிறிது இடம் கிடைக்குமா என்று சத்திரக் காவலாளராக வைக்கப்பட்டிருந்த பார்ப்பனரைக் கேட்டோம். அதற்கவர் விரைந்து வந்து "ஓ! இங்கே பிராமணர்களுக்கு மட்டுந்தான் இடங் கொடுக்கப்படும்; சூத்திரர்களுக்கு இடம் இங்கே கொடுக்க முடியா" தென்று சிறிதும் இரக்கமின்றி வன்னெஞ்சத்தோடு கூறிவிட்டு உடனே உள்ளே போய் விட்டார். பிறகு நாங்கள் எங்கே செல்வதென்றறியாமல், வண்டிக்காரன் குறிப்பிட்ட சத்திரத்திற்காயினும் போகலாமென்று அவ் விருண்ட நேரத்தில் போகும்போது, எங்கட்கிருந்த மனநிலையை இங்கே எடுத்துச் சொல்லவேண்டுவதில்லை! வண்டிக்காரன் குறிப்பிட்ட சத்திரத்தண்டை வண்டியை நிறுத்தும் போது, சத்திரத்தினின்றும் ஒருவர் திடீரென ஓடிவந்து முன் பின் அறியாமல் முகமன் கூறி மிக அன்போடு வரவேற்று, 'எத்தனை நாளாகிலும் நீங்கள் நமது சத்திரத்தில் தங்கியிருக்கலா' மென்று கூறி எங்களை உள்ளே அழைத்துச் சென்றார். இவர் பார்ப்பனரல்லாதார். இச்சத்திரமானது பார்ப்பனரல்லாதார் ஒருவரால் புதிதாகக் கட்டப்பட்டது. இதில் வேண்டிய வசதிகளெல்லாம் பொருந்தி இருந்தன. இச்சத்திரத்திற்கு மேல் மாளிகையும் உண்டு. இன்னும் இச்சத்திரம் யாங்கள் விரும்பியபடி கோயிலுக் கருகாமையிலும் இருந்தது. முன், அப்பார்ப்பனச் சத்திரக் காவலாளர் கூறிய கொடிய சொற்களாலும், செய்கைகளாலும் கொதிப்பேறிய எங்கள் மனமானது, பின் பார்ப்பனரல்லாத இச்சத்திரக் காவலர் கூறிய இனிய சொற்களால் சில்லென்று குளிர்ந்தது.

அச்சத்திரத்தில் அன்றிரவு தங்கி விடியற்காலை வேளையில் ஏழுமணிக்கு அங்கே ஒன்றன்மேல் ஒன்றாயும், தொடர்பாயும் உள்ள பல மலைகளைச் சென்று கண்டோம். அவற்றுள் ஒன்றின் மேற் போய் அம்மலைச் சூழலின் நடுவே காணப்பட்ட ஓர் அழகிய ஒரு பள்ளத்தாக்கினைப் பார்த்து அதில் இறங்கிப் போனோம். அப்பள்ளத்தின் அழகிய நிலப்பரப்பானது ஏறக்

குறைய ஒருகல் சுற்றளவு உள்ளதா யிருந்தது. அவ்வழகிய நிலப்பகுதியைப் பாதுகாப்பதற்கு அமைத்துவைக்கப்பட்ட மதிற் சுற்றைப்போல அம்மலைச் சுழல்கள் தோன்றின. அப் பள்ளத்தாக்கின் நடுவே அழகிய படித்துறைக ளமைந்த ஒரு பெரிய குளமும், பழையநாளிலே அமைக்கப்பட்ட தொன் றுயக் காணப்பட்டது. அக்குளத்தின் தண்ணீர் பளிங்கு போல் தெளிந்திருந்தது. அதன் நீர்மட்டத்தில் அங்கு மிங்கும் படர்ந்து மிளிரும் அழகிய தாமரை இலைகளின் மீது வெண்மையான கொக்குகள் அமர்ந்துகொண்டு, தம்மை உணவுக்காக இரக்கமின்றிச் சுட்டுக் கொல்லும் கொடிய மாந்தர் அங்கு வருவதின்மையால் சிறிதும் அச்சமின்றி மகிழ்ந்திருந் தன. அக்குளத்தின் நடுவே பழமையாகக் கட்டப்பட்ட ஓரழகிய சிறு மண்டபம் இருந்தது! அதன்மேல் காட்டுப் பூஞ்செடிகள் மிக நெருங்கி வளர்ந்திருந்தமையும், அச்செடிகளிற் கொத்துக் கொத்தாகப் பூத்திருந்த பல நிற மலர்களின்மேல் சிறு சிறு தேன் குருவிகள் சரேலெனப் பறந்துவந்து அப்பூக்களின் இனிய தேனைப் பருகிக் கொண்டிருந்தமையும் எங்கள் உள்ளத்தைக் கவர்ந்தன. இன்னும் அம்மண்டபத்தின்மேல் விளிம்புகளி லுள்ள புதைகளில் சாம்பல் நிறம் வாய்ந்த புறுக்கள் கூட்டங் கூட்டமாய் இருந்தன. அப்புறுக்களிற் சில தாய்ப் புறுக்கள், தாம் பொரித்த குஞ்சுகளைப் பாதுகாக்கும்படி தத்தம் கூடுகளி னருகே அச்சமின்றி வரிசை வரிசையாக இருந்து காத்துக் கொண்டிருந்தன. அப்போது ஆண் புறுக்கள் வெளியே எங் கெங்கோ சென்று அலைந்து திரிந்து தம் உணவைச் சுருக்கி இரைதேடி, அவ் விரையை மிகவுங் கருத்தோடு அலகில் கௌவிக் கொண்டு விரைந்து வந்து வாய் திறந்தபடியாய் எதிர் நோக் கும் தம் குழவிகட்குத் தந்து அவைகளின் பசியை 'ஆற்றின. அங்குள்ள கூடுகள் ஒன்றில் ஒரு தாய்ப் புறுவுக்குப் பல குஞ்சு கள் இருந்தன. அவைகள் பெரியனவாக இருந்தமையின் ஆண் புறு வெளியே சென்று கொண்டுவந்து தந்த உணவு அவைகட் குப் போதவில்லை ; அதனாற் குஞ்சுகள் இரைச்சலிடக் கூட்டி னருகே காவலிருந்த தாய்ப்புறுவும் விரைந்து தன் கணவனோடு பறந்து செல்வதைக் கண்டு யாங்கள் முதலில் வருத்தமுற்றே மாயினும், சிறிது நேரத்தில் அத் தாய்ப்புறுவும் இரையெடுத்து வந்து அவற்றின் வாயில் ஊட்டிப் பசி தணித்ததனைப் பார்த்து வியப்பும் அடைந்தோம். அவ்வளவு பகுத்தறிவையும், அன் பையும் அப்பறவைகட்கும் தந்துதவிய எல்லாம் வல்ல இறைவ னது அருட்பெருக்கத்தையும் இரக்கத்தையும் நினைந்து நினைந்து உருகினேம்!

இனி அப்பெரிய குளத்தின் கரையில் நிறைந்து நின்ற
மாமரங்களும், நாவல் மரங்களும், விளாமரங்களும் குளிர்ந்த
நிழலைத் தந்தன. அந்நிழலிலிருந்து யாங்கள் சிறிது இளைப்பா
றிக் கொண்டிருந்தபோது, ஓர் இனிய பறவைக் குரலோசை
யைக் கேட்டோம். அவ்வோசை எங்கிருந்து வருகின்றதென்
பதை அறிய அங்கு மிங்கும் மரங்களினூடே உற்று நோக்கி
னோம். அப்போது யாங்கள் அமர்ந்திருந்த பாறையினருகே
இருந்த மரத்தின் ஒரு சிறிய கிளையிலிருந்த ஒரு புள்ளிக் குயிலி
னது ஓசையே அதுவென்றறிந்து மகிழ்ந்தோம். பின், மாணிக்க
வாசகப் பெருமான் குயிலினங்களைக் கூவிச் சிவபிரானைக்
குழைந்து குழைந்து உருகிப் பாடிய குயிற்பத்தையும் பாடி
னோம். பிறகு அங்கே எம் எதிரிலிருந்த அவ்வாவியின் நீரைப்
பருகியபின் அக்குளத்தில் வெயிலின் ஒளியில் மினு மினுவென்று
துள்ளித் துள்ளிப் பிறழ்ந்து ஓடும் கயல் மீன்களை ஒரு வேட்டு
வப் பெண் கையாற் பிடிக்க எவ்வளவோ முயன்றும், ஒருகால்
அவை அவள் கையிலகப்பட்டும், பிறிதொருகால் உடம்பின்
வழு வழுப்பில் அவள் கைகளினின்றும் வழுவியும் ஓடின. இக்
காட்சிகளை நோக்கியபின் கீழேயுள்ள காளத்தி இறைவர்கோயிலை
அடுத்துள்ள ஒருமலை முகட்டை நோக்கி ஏறிச் சென்றோம்.
அம்முகட்டை அடைந்தபோது, அங்கே பரந்த ஒரு மேட்டு
நிலத்தின்மேல் மிகப் பழைய காலத்தே, அதாவது இரண்டாயிர
ஆண்டுகட்கு முன்னரே கட்டப்பட்ட ஒரு சிறு கோயிலும், அக்
கோயிலில் இறைவன் ஒளி வடிவினது அடையாளமாக வைக்கப்
பட்ட அருட்குறியும் இருக்கக் கண்டோம். அவ் வருட்குறி
யைத் திருமுழுக்காட்டப் பார்ப்பனக் குருக்கள் அக்கோயிலுக்கு
வருவதில்லை என்பதறிந்து மிக மகிழ்ந்தோமாயினும், யாங்கள்
இதனை முன்னமே அறிந்திருந்தால் முன் குறித்த குளத்தினின்
றும் பூவும் நீரும் கொண்டுவந்து அருட்குறிக்குத் திருமுழுக்
காட்டிப் பூவும் சூட்டி யிருக்கலாமே என்று நினைந்து வருந்தி
னோம். அவ் வழகிய சிறு கோயில் ஒரு பெரிய ஆலமரத்தின்
கீழ் அமைந்ததாகும். அக்கோயிலினுள்ள அருட்குறியை அன்
பினாற் குழைந்து குழைந்து உருகி வழிப்பட்ட கண்ணப்ப நாய
னாரது மிகப் பழைய திருவுருவம் அமைந்த மற்றொரு சிறுகோ
யிலும் அதனருகே யிருந்தது. மக்களின் சேர்க்கையும் அவரது
தீச்செயலும் அணுகப்பெறாது, தனித்து உயர்ந்த ஒருமலை யுச்
சியில் இறைவனது அடையாளத்தையும், அவனை உண்மை யன்
பால் வழிபட்ட அடியவர் உருவத்தையுங் காண்பது, சொல்ல
இயலாத ஓர் அன்பினையும் உருக்கத்தினையும் எம் உள்ளத்தே
தோற்றுவித்தது. உயர்ந்தோங்கும் இத்தகைய தனியிடமே
கடவுள் உவந்திருத்தற்கு ஏற்றதென்பதும் எமக்குப் புலனா

யிற்று. இறைவனை வணங்கத் தக்க தனியிடத்தைக் கண்டதும் நெஞ்சங் குவிந்து ஆறுதல்பெற்று அவனை வணங்கிப் பாடி வழுத்தினோம். அந்நேரத்தில் யாங்கள் வானுலகத்தில் கடவுளோடு இருப்பதாகவே எண்ணப் பெற்றோம். இவ்வாறு உலக நினைவினின்றும் சிறிது விடுபட்டிருந்தேமாயினும், பின் சிறிது நேரத்திற்கெல்லாம் மறுபடியும் எப்படியோ பையப்பைய உலக நினைவு வரப்பெற்றோமாய்க் கடவுளையும் கண்ணப்பரையும் வணங்கிப் பிரிந்து பின் கீழ்நோக்கி இறங்கினோம்.

இவ்வாறு நாங்கள் இறங்கி வரும்போது, அங்கங்கே சிறிது நேரம் நின்று நின்று அம்மலையின்கீழ்த் தோன்றும் அரியகாட்சியின் அழகை வியந்து உரையாடினோம்! கீழ் உள்ள பெரிய சிவபிரான் கோயிலானது ஓரழகிய ஆற்றங்கரையின் மீது அமர்ந்து, மேலிருந்துகாணும் எமக்குச் சிறிய அளவினதாய்த் தோன்றியது. ஓர் ஊரை உண்டாக்குவதற்கு முன் ஓவியக்காரன் அப் பெரிய ஊரினளவை ஒரு சிறிய கடிதத்தில் வரைந்து காட்டினால், அத்தோற்றமானது எவ்வளவு சிறிதாக நம் கட்புலனுக்குக் காணப்படுமோ, அதைப்போலவே அப்பெரிய ஊரும், சிவபெருமான் கோயிலும் சிறுத்து விளங்கின. பின் ஆங்காங்கு அவ்வூருக்குப் புறம்பே பயிரிடப்பட்டிருக்கும் பச்சைப் பசேலென்ற வயல் நிலங்கள் பச்சைப் பட்டாடை விரித்தாற்போல் பகலவன் கதிரொளியால் மினுமினுப்புடன் விளங்கின. பின்னும், அவ்வூரின் கோயிலுக்கு அருகே கதிரவன் ஒளிவிட்டுத் திகழும் பொன்முகலியாற்றின் தோற்றமானது ஒரு வெள்ளிக் கம்பிபோல் காணப்படுவதாயிற்று. இன்னும், அவ்வாற்றின் இடை இடையே நீரைத்தடுத்து மடைகளின் வழியே வயல்கட்கு நீர்ப் பாய்ச்சும் மள்ளர்களும், மற்றொரு பக்கத்தே அறுப்பறுத்த நிலங்களில் மேயும் ஆடுமாடுகளும் சிறு சிறு பாவைகள் போல் தோன்றுவ ஆயின.

இங்ஙனமெல்லாம் இறைவன் அருமையாகப் படைத்த இயற்கைத் தோற்றங்களைப் பார்த்துக்கொண்டே கீழிறங்கி மலையினடிவாரத்திற்கு வந்து சேர்ந்தோம். அம் மலையடிவாரத்தின் பக்கத்தே வேட்டுவர் குடிசைகள் பற்பல இருந்தன. யாங்கள் மலையினின்றும் வந்து களை தீரும்பொருட்டு அங்கிருந்த ஒரு மரத்தடியிற் றங்கினோம். அப்போது அங்கிருந்த குடிசைகளி லொன்றிலிருந்து ஆண் மயிலொன்று வெளிவந்து தன் அழகிய தோகையை விரித்து ஆடியது. ஆ! அத்தோகையில் நீலமும் பச்சையும் கலந்த கண்கள் வெயிலொளியில் மினு மினுவென்று மிளிர்ந்தன. யான் பிறந்து அதுகாறும் காணாத அப் புதுமையை இன்னும் நினைவுகூர்ந்து மகிழ்கின்றேன். பின்

அடுத்த நாள் விடியற்காலையிலே மலையடிவாரத்தி லிருக்கும் பழைய காளத்தியப்பர் கோயிலுக்குச் சென்று இறைவனை வணங்கி அக்கோயிலின் கருங்கற் சுவர்களிலுள்ள நுண்ணிய வேலைப்பாடுகளைக் கண்டு வியப்புற்றோம். பின் சத்திரத்திற்கு வந்து உணவுசமைத்து உண்டபிறகு, என் பெற்றோர் இளைப் பார மேல்மெத்தைக்குச் சென்றனர். யானோ உறங்குவதற்கு விருப்பமில்லாமல், என் தம்பியோடு, அச்சத்திரத்தின் பின்புறத் திற் சென்றேன். அங்கே யிருந்த ஒரு பெரிய அரசமரத்தின் மேல் பத்துப் பதினைந்து குரங்குகள் மரக்கிளைகளில் தாவித் தாவி விளையாடிக்கொண்டிருந்தன. இவ்விளையாட்டைப்பார்த்துக் கொண்டிருந்தபோது, அக்குரங்குகள் பரபரப்போடு கீழிறங்கி, எங்களுக்குப் பத்தடித் தொலைவில் நின்றுகொண்டு, கைகளை நீட்டி உணவுப் பண்டங்கள் கேட்டன. உடனே யான் விரைந்து ஓடி ஓர் ஏனத்தில் சோற்றுடன் திரும்பினேன். யான் கொண்டு வந்ததனை அக்குரங்குகளின் அருகேசென்று கொடுக்க அஞ்சிச், சோற்றைக் காட்டிக் கூப்பிட்டேன். உடனே, அக்குரங்குகளிற் சில அச்சமின்றிக் கிட்டே வந்து கை நீட்டின. ஆனால், யான் உணவை அவைகளின் கைகளில் தருவதற்கஞ்சிக் கீழேவைத்து விட்டு அப்புறம் வந்துவிட்டேன். அவை அவ்வுணவை உண்ட பின் மரங்களில் ஏறின. யான் உணவு தருதலைப் பார்த்துக் கொண்டிருந்த தாய்க்குரங்குகளிற் சில, தம் குட்டிகளோடு என் எதிரே ஓடிவந்து தம் கைகளை நீட்டி இரங்கிய முகத்தோடு என் முகத்தை உற்றுநோக்கி உணவு கேட்டன. யான் அதன்பின் அச்சம் தெளிந்து அவைகளின் பக்கத்தே போய், அவைகளின் கைகளில் சோற்றை அள்ளி வைத்தேன். அத்தாய்க் குரங்கு கள், தாம் முதலில் அச்சோற்றை உண்ணாமல் தத்தம் வயிற்றடி யில் பற்றிக்கொண்டிருக்கின்ற தத்தம் இளங்குழவிகட்குத் தந்து பிறகு உண்டன. இவ்வாறு மேற்கூறிய அழகிய தோற்றங்க ளைக் கண்டு களிப்போடு அன்றிரவும் அச்சத்திரத்திலே தங்கி விடியற்காலையிலே காளத்தித் தங்குநிலைக்குப் போய்ப் புகை வண்டி ஏறி வீடுவந்து சேர்ந்தோம்.

வள்ளுவரும் பல்லுயிரும்

[திரு. மு. சி. பூரணலிங்கம் பிள்ளையவர்கள் B. A., L. T.]

வள்ளுவர் என்பது திருக்குறளருளிய திருவள்ளுவரேயாம். பல்லுயிர் என்றதனால் ஓரறிவுயிர் முதல் ஆறறிவுயிரீறுக எல்லா வுயிர்களையுங் குறிக்கும். தொல்காப்பியர் புல்லும் மரனும் ஓரறி வினவே யென்றும், நந்தும் முரளும் ஈரறிவினவே யென்றும், சிதலும் எறும்பும் மூவறிவினவே யென்றும், நண்டும் தும்பியும் நான்கறிவினவே யென்றும், மாவும் மாக்களும் ஐயறிவினவே யென்றும், மக்கள் தாமே ஆறறிவுயிரே யென்றும் உயிர்களைப் பகுத்துக் கூறியிருத்தல் உற்று நோக்கத்தக்கது. முதன் முத லில் ஓரறிவுடையன புல்லும் மரமும் என்றனர். இவ்விரண்டிற்கு முள்ள வேறுபாட்டினைப்,

"புறக்கா ழனவே புல்லெனமொழிப
அகக்கா ழனவே மரமென மொழிப"

என்று விளக்கியுளார். இவற்றைத் தாமெடுத்தாளும் பொருளை விளக்குவான்பொருட்டு உவம வாயிலாக வழங்கியுளார். உவ மத் தோற்றம் எங்ஙனமெனின் வினை, பயன், மெய் (உருப்பு), உருவென்ற நான்கே வகைபெற வருமென்றனர். உவமையும் பொருளு மொத்தல்வேண்டு மென்பது விதி. புல் யாதெனின் தோடு, மடல், ஓலை, ஏடு, இதழ், பாளை, ஈர்க்கு, குலை முதலியன. மரத்திற்குரிய சொற்கள் இலை, முறி, தளிர், தோடு, சினை, குழை, பூ, அரும்பு, நனை (மொட்டு, கள், தேன்) என்பன. புல்லில் தினையும் கரும்பும், செடியில் வள்ளியும் நெருஞ்சி (முள்) யும் குறளில் காணப்படுகின்றன.

தினை-உருவிற் சிறிய பொருள். 'தினைத்துணை நன்றி செயி னும்' 'தினைத்துணையாங் குற்றம் வரினும்' 'தினைத்துணையும் ஊடாமை வேண்டும்' 'எனைத்துணையராயினுமென்னும் தினைத் துணையுந்தேரான் பிறனில் புகல்': இவற்றில் தினை சிறிய அளவு என்ற பொருளில் வந்துளது.

கரும்பு-இனிமையுள்ளது. அது சிதைக்கப்படின் இனி மையை அளிக்கும். கீழ் மக்களும் அத்தகையரே. "சொல்லப் பயன்படுவர் சான்றோர், கரும்புபோல் கொல்லப் பயன்படுங் கீழ்."

வள்ளி-இக்கொடியின் வேரைப் பிடுங்கி யெறியின் அது வாடும். எது போன்று? 'ஊடியவரை உணர்த்தாமை வாடிய வள்ளி முதலரிந் தற்று' என்றனர் நாயனார்.

நெருஞ்சி-இம்முட் செடியின் பழம் உவமையாக வழங்கப் பட்டுளது. 'அனிச்சமும் அன்னத்தின் தூவியும் மாதரடிக்கு நெருஞ்சிப் பழம்'. அனிச்சமும் அன்னத்தின் தூவியும் மெலிய வாயினும், மாதரடிக்கு நெருஞ்சிப் பழத்தின் முள் போலத் துன்புறுத்தும்.

குன்றி-இதன் காய் மூக்கில் கறுமையுடைத்து. ஏனைய பாக மனைத்தும் செக்கச் சிவப்பாயு மிருத்தலியல்பு. நெஞ்சத்திற் கொள்ளும் சினம் கறுமையாக முகப்புறத்திற் றோன்றும், 'புறங் குன்றிக் கண்டனைய ரேனும் அகங்குன்றி மூக்கிற் கரியாருடைத்து'

புதர்-தூறு, அடி. அடர்ந்த செடிகளின் தூறில் மறைந்து வேட்டுவர் புட்களின்மேல் அம்பு எய்வர். அதுபோன்று தவ வுருவம் மேற்கொண்டு இழிவான தொழில்களைச் செய்யும் போலித் துறவிகளைக் கண்டித்துளார். 'தவமறைந்து அல்லவை செய்தல் புதன் (ர்) மறைந்து வேட்டுவன் புட்சிமிழ்த் தற்று.'

மரங்களில் இந்நாட்டிற் பெரும்பான்மையாக எங்கணுங் காணப்படுவன ஆல், அரசு, பலா, புளி, வேம்பு, முதலியன. இவற்றைத் தனிப்பெயர்களால் வழங்காமல் பயன் மரம், வற்றல் மரம், மருந்து மரம், நச்சு மரம் என்று பாகுபாடு செய்துளர். வல்லவன் கையில் உள்ள பணம் நன்மையைப் பயக்கும். எது போன்றெனின் பழமரம் ஊர் நடுவில் பழுத்தால் அனைவருக் கும் பயன்படும். தீவழியி லுண்டாகிய செல்வம் தீவினையையே இழைக்கும். பிறருக்குப் பயன்படாது. தீண்டப்படவு மாட் டாது. அகத்தில் அன்பு இலையாயின் உயிர் வாழ்க்கை சிறப் படையாது. சிறப்படைவது அருமை. எதுபொக்கதெனின் கடுமையான (இறுகிய) பாறையிலுள்ள மரம் பட்டுப்போய்த் தளிர் விடுவது போலாம். 'அன்பகத் தில்லா வுயிர்வாழ்க்கை, வன்பாற்கண் வற்றல் மரந்தளிர்த் தற்று'. பயனைத்தரும் மரம் எத்தன்மையது? 'பயன்மரம் உள்ளூர்ப் பழுத்தற்றாற் செல்வம் நயனுடையான்கட் படின்','நச்சப்படாதவன் செல்வம் நடுவூருள் நச்சு மரம்பழுத் தற்று. மணிவாசகனார் 'தாம் வளர்த்ததோர் நச்சுமாமர மாயினுங் கொலார்' என்றனர். மருந்து மரமென் பது மருந்துக் குதவும் பொருளைத் தருமரமாம். பெருந்தன்மை யுடையான் கையிலுள்ள செல்வம் உயிர்களுக்கு அமிர்தம் போன்றுதவும். மருந்து-உணவு, அமிர்தம் (அமுதம்), அவிழ்

தம், ஒளஷதம், எப்பொருளும் பொருந்தும். 'மருந்தாகித் தப்பா மரத்தற்றற் செல்வம் பெருந்தகை யான்கட் படின்'?

மரத்தின் கிளை, கொம்பு எதற்குவமை? 'நுனிக்கொம்பர் ஏறினார் அஃதிறந்து ஊக்கின், உயிர்க்கிறுதி யாகி விடும்' கொம்பின் நுனி முயற்சியின் மிகுதியைக் காட்டும். அதனையுங்கடந்து செல்ல முயலல் அளவின்மையான் வருங் கேட்டினை யுணர்த்தும்.

மரத்தில் காய், கனி, விளையும். காய் புளிக்கும், துவர்க்கும், கனி இனிக்கும். காய் பழுத்தால் பழமாகும். பழம் முதிர்ந்தால் கனியாகும். ஒருவன் கனிகிடைக்கும் பொழுது காயை யருந்துதல் மடமையாமென்பர். காமத்திற்குரியன துனி (சினம்: புலவி : நீட்டம்), புலவி (கூடியும் கூட்டமின்மை) யாம். இவ்விரண்டும் முறையே கருக்காய்க்கும் கனிக்கும் உவமிக்கப்பட்டுள. சில கனிகளில் விதைகளுள. சிலவற்றில் அவையில. வலியவந்தவள் கிழவி என்றாற்போன்று தாமே தம் விருப்பத்தைக் காட்டின் அது விதையில்லாக் கனிபோலாம். நல்ல சொற்களிருக்கத் தீச்சொற்களைப் பேசுபவர் கனியைத் தள்ளிவிட்டுக் காயைக் கவர்ந்தவராவர். 'இனிய வுளவாக இன்னாத கூறல் கனியிருப்பக் காய்கவர்ந் தற்று' 'துனியும் புலவியு மில்லாயின் காமம் கனியும் கருக்காயு மற்று' 'தாம் வீழ்வார் தம்வீழப் பெற்றவர் பெற்றாரே காமத்துக் காழில் கனி.'

தனிமரப் பெயர்களில் முள் மரமும், 'பனை மரமும் மிகுந்துள. முண்மரம் இளமரநிலைமையில் வெட்டுதல் எளிது. முற்றினால் வெட்டுங் கையைப் புண்படுத்தும். அதுபோன்று தீய வொழுக்கத்தை முதலிலே களைதல் எளிது. முற்றினால் களைய முடியாது. இவ்வுண்மையை விளக்குங் குறள் இஃதாகும். இளைதாக முண்மரங் கொல்க, களையுநர் கைகொல்லுங் காழ்த்த விடத்து.' முண்மரங்கள் பலவுள. கருவேல மரம், உடை மரம், (நாரத்து, எலுமிச்சு), கொடுக்காய்ப் புளி முதலியன. ஆகவே இதுவும் பொதுப் பெயரன்றித் தனிப்பெயராகாது.

தனிப்பெயராலெடுத்தாளப்பட்ட மரம் பனையேயாம். பனை உயர்ந்து வளரும் மரம். பனைத்துணை (அளவு) யாகக் கொள்ளப்படுவன சிறு நன்றியும், சிறு குற்றமும், சிறிதும் ஊடாமையுமாம். எவர் மாட்டு? பயன் தெரிவார் மாட்டும், பழி நாணுவார் மாட்டும், விழைவு மிகுந்தவர் மாட்டுமேயாம். பனையின் சாறு கள் ஆம். அதனை மிகுதியாக வுட்கொள்பவர் வெறி பிடித்தலைவர். அதற்குக் களி, களியாட்டு என்று கூறுவர். சுடவைத்த கள் அடுநறா எனப்படும். கள்ளுண்டவருக்கே

களியுண்டாம். காமமானது காமப் பொருளைக் கண்டவுடனே மகிழச் செய்யும். கண்டவுடன் மகிழ்தலும் உள்ளத்திற் களித்தலும் காமத்திற்கே உள. களியாட்டு ஈன்ற தாயாலும் வெறுக்கத் தக்கது. களி கொண்டதற்கு ஏது அருவிப்பார்த்தாலும் அகப்படாது. கள்ளாசையுள்ளவர் சான்றோர்முன் உள்குவர். நாணமென்ற திருமகள் நீங்குவாள். இவ்வாறு கள் குடித்தலின் தீமையைத் திருவள்ளுவ நாயனார் நன்றாக விளக்கியுள்ளார்.

மரம் போன்ற மக்களுமுளர்! 'நீட்டோலை வாசியா நின்றான் குறிப்பறிய மாட்டா தவனே மரம்' என்றார் முதிய புலவரும். கல்வி, கேள்வி, குறிப்பறிதல் மக்கட்கு இன்றியமையாப் பொருள்களாம். பண்பிலாத மக்களே மரத்துக் கொப்பாவர். இதனை 'அரம்போலுங் கூர்மைய ரேனும் மரம்போல்வர், மக்கட்பண் பில்லா தவர்' என்ற குறள்விளக்கும். உரம்(தைரியம்) இல்லாத மக்களும் மரம் போல்வர், மரமக்களாவர். 'உரம் ஒருவற்கு உள்ள (த்து) வெறுக்கை, (செல்வம்) அஃதிலார் மரமக்களாதலே வேறு.'' மரத்தினால் பாவை செய்யுந்தொழில் அந்நாளிலிருந்ததென்பது குறளால் தெரிய வருகின்றது. உலகத்தில் இரப்பாரில்லாரெனின் உலகிற்குப் பெருமையில்லை. அனைவரும் செயலற்று மரப்பாவைபோன் றிருப்பர். 'இரப்பாரை இல்லாயின் ஈர்ங்கண்மா ஞாலம் மரப்பாவை சென்றுவந் தற்று' அன்றியும், நாணில்லாத நெஞ்சமுடையா ரியக்கம் மரப்பாவையின் இயக்கத்தை ஒத்ததாகும்.'நாணகத்தில்லா ரியக்கம் மரப்பாவை நாணால் (கயிற்றால்) உயிர் மருட்டி யற்று'. மரப்பாவை யன்றி மண்ணாற் பாவை செய்யும் வழக்கமு மிருந்தது என்பதை மற்றொரு குறள் புலப்படுத்துகின்றது. அறிவில்லாத, கல்வி கேள்வியில்லாத மக்களே அதற்கிணையாவர் 'நுண்மாண் நுழைபுலமில்லா னெழில்நலம் மண்மாண் புனைபாவை யற்று'.

இதுகாறுங் கூறியது ஓரறி வுயிர்ப்பொருள்களேயாம்.

இனி ஈரறிவு முதல் ஐயறிவு உள்ள உயிர்களை எங்ஙனமாண்டுளார் என்பதை ஆராய்வாம். இவை ஊர்வன, நீர்வாழ்வன, பறப்பன, ஓடுவன முதலான உயிர்களேயாம். நாகம், பாம்பு, முதலே இவை ஊர்வனவாம். மீன், கயல், பாம்பு, முதலை ஆமை நீரில் வாழ்வன. அன்னம், கொக்கு, காக்கை, மயில் புள் வகையைச் சேர்ந்தவை. ஆ, ஏறு, குதிரை, கவரிமா, புலி, யானை, களிறு, பகடு, நரி, மான், பிணை, தகர், எலி, முயல், முதலியன ஓடித்திரிவன. இவற்றிற் பெரியன விலங்குகளாம்.

நாகம்—நஞ்சுடைய பாம்பு. 'நாகங்கரந்துறையும்', 'எலிப்பகை நாகம் உயிர்ப்பக் கெடும்'. பாம்பு பொதுப்பெயர். நீர்ப்

பாம்பு, மண்ணுணிப்பாம்பு எனப் பாம்பு பல வகைப்படும். பாம்பெனிற் படையும் விலகும் என்பது முதுமொழி. 'அரவமாட்டேல்' 'பாம்பொடு பழகேல்' என்பவைகளும் பழமொழிகளாம். ஒத்து நடாதவருடன் வாழ்தல் தொல்லையாம். 'உடம்பாடிலாதவர் வாழ்க்கை குடங்கருள் (குடிசையுள்) பாம்போடுடன் உறைந் தற்று' ஊரார் கூறும் வசை மொழி ஒருவரின் நற்பெயரைக்கெடுக்கும். 'அலர்மன்னும் திங்களைப் பாம்பு (இராகு) கொண்டற்று'.

நீரிலிருக்கும் பொழுது முதலைக்கு மிகுந்த வலியுளது, நீரை விட்டுத் தரைக்குவரின் அது வலியற்றதாகின்றது. 'கருடா, நலமா' என்ற வினவிற்கு 'இருக்குமிட மிருந்தால் நலமே' என்ற விடை நினைவிற்கு வரத்தக்கது. 'நெடும்புனலுள் வெல்லு முதலை, அடும்புனலி னீங்கின் அதனைப் பிற'.

ஆமை அடக்கத்திற்குச் சான்றும். அடக்க முடைமை மக்கட்குச் சிறந்த தன்மை. 'ஒருமையுள் ஆமைபோல் ஐந்தடக்கலாற்றின், எழுமையு மேமாப் புடைத்து.' சூதினுல் வெற்றிவரினும் அது வேண்டத் தகுவதன்று. மீன்தூண்டிலினுள்ள பொன்னை மீன்விழுங்குவதாற் பயனென்னை? 'வேண்டற்க வென்றிடினும் சூதினை வென்றதூஉம் தூண்டிற்பொன் மீன்விழுங்கியற்று'. 'கயலுண்கண்' என்பது பொதுவான உவமை. வானத்திலுள்ள உடுக்களும் மீனெனப்படும். உடுவானது அதனுக்குத் தலைவனுகிய கலை நிறைந்துவருந் திங்களைக் கண்டு ஐயுறுதபோதினும் காதலன் காதலித்த காதலியின் முகத்தைக் கண்ணுற்ற பொழுது காதலனோ வென்று கலங்கிற்கும் என்பது புலவர் நெஞ்சப்பாங்கு. 'மதியும் மடந்தை முகனும் அறியா பதியிற் கலங்கிய மீன்.'

முயல்-இலகுவாய்க் கவரத்தக்க உயிர். அதைக்கொல்ல எய்யும் அம்பு வீரனுக் கடுத்ததன்று. யானையைக் கொல்ல விடுத்த வேலாயுதந் தவறிப்போயினும் அதைக் கையாற் பிடித்தல் வீரமாம்.

"கான முயலெய்த அம்பினில் யானை பிழைத்தவேல் ஏந்தல் இனிது".

யானை-என்பது பொதுச்சொல். ஆண்யானை களிறெனவும், பெண்யானை பிடியெனவுங் கூறுதல் வழக்கம். பழகிய ஒரு யானையைக்கொண்டு காட்டிற்றிரியு மற்றொரு யானையைப் பிடிப்பார்கள். ஒன்றைச் செய்து அதனுல் மற்றொரு வினையை முடித்துக்கொள்ளல் உலகவழக்கு. 'வினையால் வினையாக்கிக்

கோடல் நனைகவுள் (மதம் பிடித்த) யானையால் யானையாத் தற்று.' பாகர்க்கு அடங்காமல் வேல்தாங்கிய ஆட்களைக் குத்திக் கோத்த கொம்புடைய களிறு சேற்று நிலத்தில் அகப்பட்டுக் கொண்டால் அதனை நரிகள் கொன்றுவிடும். இதனால் எவ்வளவு வலிமையுடையவரும் செல்லத் தகாத இடஞ் சென்றால் எளியராலுங் கொல்லப்படுவர். 'காலாழ் களரில் நரியடும், கண்ணஞ்சா வேலாண் முகத்த களிறு'. வீரருளுயர்ந்த வீரன் யாரெனில் பகைவனுடைய வேல் தன்மார்பில் பதிந்திருப்பதை யுணராமல் எதிர்த்து வரும் யானையை வெல்ல வேல் தேடுபவனும். 'கைவேல் களிற்றொடு போக்கி வருபவன் மெய்வேல் பறியா நகும்.' தளராதிருப்பின் முயற்சி கைகூடும். தளரின் முயற்சி பயனடையாது. பாணமுடம்பில் தைக்க அதை உணராமல் யானை தன் வலிமையை நிலைநிறுத்தும். நெஞ்ச வெழுச்சியுடையாரும் அங்ஙனமே செய்வர். 'சிதைவிடத் தொல்கா ருரவோர், புதையம்பிற் பட்டுப்பா டூன்றுங் களிறு'. யானை முகபடாத்துக் கிணையென்றார் மாதர் நெஞ்சின் மேலிட்ட ஆடை. இரண்டும் கொல்லா நிலைமையில் ஒக்கும்.

பிணை-மான். பெண்ணின் நோக்கம் மான் நோக்கத்திற்கு ஒப்பாகும். இதனைப் பின் இரு குறள்களும் விளக்கும். 'கூற்றமோ, கண்ணோ, பிணையோ, மடவரல் நோக்கம் இம்மூன்றுமுடைத்து'. 'பிணையேர் மடநோக்கு, நாணு முடையாட்கு அணியெவனோ ஏதில தந்து'

பசு-பெற்றம், ஏறு, பகடு. இவை இனச் சொற்களாம். மன்னன் காவலொழியின் அக்காவலால் உண்டாகும் பயன்கெடும். தொழில் முறை நடவாது. 'ஆபயன் குன்றும் அறுதொழிலோர் நூன்மறப்பர், காவலன் காவா னெனின்'. 'இரப்பதிகழ்ச்சி' என்றாள் மூதாட்டியும். 'ஆவிற்கு நீரென் றிரப்பினும் நாவிற்கு இரவின் இளிவந்த தில்'. ஏறு-காளை, சிங்கம். புகழும்படியான இல்லறம் நடைபெறாவிடின் காளை, சிங்கம் போன்ற பெருமையான நடை ஆண்மகனுக்கில்லை யென்றனர். 'புகழ்புரிந் தில்லிலோர்க் கில்லை, இகழ்வார்முன் ஏறுபோற் பீடு நடை' பெற்றம்-காளை. காளையானது புலியின் தோலைப் போர்த்துக் கொண்டால் எவரும் அச்சப்பட்டு அது மேய்ந்து கொண்டிருத்தலைத் தடுக்கமாட்டார். அதுபோன்று மக்களிற் சிலர் வலியிலராயினும் வலியுடையார் போன்று தோன்றித் தம் மெண்ணத்தை முடிப்பர். 'வலியி னிலைமையான் வல்லுருவம் பெற்றம் புலியின்தோல் போர்த்துமேய்ந் தற்று'. புலியைக் கண்டால் யானை வெருவும். உருவிற் சிறியராயினும் உருவிற் பெரியாரை வெல்ல வியலும். 'பரியது கூர்ங்கோட்ட தாயினும் யானை

வெரூஉம் புலிதாக் குறின்' மா-குதிரை. இடுக்கணுற்றபொழுது விட்டு நீங்கும் நட்பு நன்றாகாது. அத்தகைய நண்பனை யடுக்காமல் தனியே இருத்தல் நலமாகும். 'அமரகத்து ஆற்றறுக்குங் கல்லாமா (அறிவில்லாத குதிரை) வன்னார் தமரிற் றனிமை தலை' மானமுடைமை மக்கட்குப் பெருமை. மானம் இழக்கவரின் உயிர் விடல் இனிதாகும், 'மயிர் நீப்பின் வாழாக் கவரிமா வன்னார் உயிர்நீப்பர் மானம் வரின்.'

பகடு-யானை, எருமை. பசு இவற்றின் ஆண். எடுத்த வினையூழால் இடர்ப்படினும் முயற்சியால் முடித்தல் முறை. சேற்றிலகப்பட்ட பண்டியைக் கடாமாடு தளராமல் இழுத்துக் கரைசேர்க்குமன்றோ. 'மடுத்தவா யெல்லாம் பகடன்னா னுற்ற இடுக்கண் இடர்ப்பா டுடைத்து' 'பகடு நடந்தகூழ் பல்லாரோடுண்க' என்னும் நாலடியாரும்.

பறவை இனத்தைக் குறிக்குஞ் சொல் புள். தனிப்பறவையின் பெயரும் புள் என்பர். 'குடம்பை தனித்தொழியப் புட்பறந் தற்றே, உடம்போ டுயிரிடை நட்பு'. குடம்பை கூடா, முட்டையா வென்ற வினாவிற்குக் 'கூட்டைவிட் டுயிர்போவதன் முன்னமே' என்று அப்பர் பெருமான் அருளியிருப்பதை எடுத்துக்காட்டி அது கூடுதா னென்பாருமுளர். பரிமேலழகர் அது முட்டையே யென்பர். குஞ்சு பொறிக்க முட்டை உடைந்து அழிந்து போகின்றது. உவமையின் பொருத்தம் விளக்க முறவில்லை. குழந்தையைப் பெறுந் தாயுடம்பு அழிவதில்லை. அன்றியும், தாயின் கருவும் அழிவதில்லை.

காக்கை, கூகை.—காக்கை கா கா வென்று கூவி இனத்தையழைத்துண்ணு மென்பர். அது போன்றே மக்களுளும் மேன்மக்கள் இனத்துடனுண்பர். "காக்கை கரவா கரைந்துண்ணும் ஆக்கமு மன்னநீ ரார்க்கே யுள.' கூகையென்பது கோட்டான். இரண்டிற்கும் பகையுளது. பகலில் திரியும் காக்கை, இரவிற்றிரியும் கூகை. பகலில் காக்கை கூகையை வெல்லும், இரவில் கூகை காக்கையை வெல்லும். ஆதலால் ஒரு வினையைக் காலமறிந்தே செய்தல் தகுதி. பகல்வெல்லுங் கூகையைக் காக்கை இகல்வெல்லும் வேந்தர்க்கு வேண்டும் பொழுது' 'காக முறவு கலந்துண்ணும்' என்றார் தாயுமானாரும். 'ஆயிரங்காக்கைக் கோர்கல்' என்பது அதன் வலியின்மையைக் காட்டும். 'காகமுங் கழுகும்' என்றவிடத்தில் பிணந்தின்னுந் தொழிலை யுணர்த்தும். 'காக்கைக்கே இரையாகிக் கழிவரே' என்றனர் திருநாவுக்கரசரும்.

அன்னம்—இப்பறவையின் தூவி (சிறகு, இறகு) மிகமென்மையாக இருக்கும். மாதரடியின் மென்மையை யுணர்த்த இது

வழங்கப்படும். 'அனிச்சமும் அன்னத்தின் தூவியும் மாதரடிக்கு நெருஞ்சிப் பழம்' அன்னம் பாலினின்றும் நீரைப்பிரித்துப் பாலை யுண்ணும் என்பது அதன் மற்றோருயர்ந்ததன்மை. வேறு புலவர்கள் இதனை யாண்டுளர். பவணந்தி முனிவர் தலை மாணாக்கனை 'அன்னம் ஆவே' என்று உவமித்துளர்.

கொக்கு - மீன் பிடிபடுஞ் சமயம் வரும்வரை காத்திருந்து வந்தவுடன் பறந்து பாய்ந்து பிடிக்கும். 'மடைத்தலையில் ஓடுமீ னோட உறுமீன் வருமளவும் வாடி யிருக்குமாங் கோக்கு' என் பது வாக்குண்டாம் நூலிலுள்ள அடிகளாம். குறளாசிரியர் "கோக்கொக்கக் கூம்பும் பருவத்து மற்றதன் குத்தொக்க சீர்த்த விடத்து" என்றதனால் காலந்தெரிந்து செய்வதே அறி ஞர் செயலாகும்.

மயில்-பெண்ணைப்பற்றிய புனைவுரையில் (வருணனை) பெண் நடை மயில்நடை போன்றதென்பர். காதலனொருவன் தொலை விற் காணுங் காதலியை 'அணங்குகொல், ஆய்மயில் கொல்லோ, கனங்குழை மாதர்கொல், மாலுமென் னெஞ்சு' என்று ஐயுற்றுத் தெளிவன். மயிலிறகு அதன் சிறப்பு. அது கனமில்லாதது. அதனையும் மட்டுக்கு மிஞ்சிப் பளுவேற்றினால் பண்டியின் அச்சு ஒடிந்துவிடும். இப்பொருளைக் கொண்ட குற ளிதுவாம். "பீலி பெய் சாகாடு மச்சிறும் அப்பண்டஞ் சால மிகுத்துப் பெயின்'

மாக்கள். ஐயறிவுடைய உயிர்கள் மாக்கள் எனப்படுவர். பகுத்தறிவு உளதாயின் மக்களெனப்படுவார். நாயனார் 'கொலை வினையராகிய மாக்கள்', 'செவியிற் சுவையுணரா வாயுணர்வின் மாக்கள்' என்று கொலைத் தீவினையாளரையும் 'சாப்பாட்டு இராமரையும் மாக்களென் றழைத்துளார். கல்விகல்லாதார் உரு வத்தில் மக்கள்போன் றிருப்பினும் விலங்காக மதிக்கப்படுவர், 'விலங்கொடு மக்க ளனையர் இலங்குநூல் கற்றாரோ டேனை யவர்" ஆறறி வுயிர்களாகிய மக்களைப்பற்றி விரித்துரைத்தல் மிகையாம்.

சேந்தநாயனார் வரலாறு

[M. P. குமரநாயகம் பிள்ளையவர்கள்.]

பன்னிரு திருமுறைகளில் 9-ம் திருமுறையில் பல திருப் பதிகங்களையும் திருப்பல்லாண்டையும் ஓதியருளிய சேந்தனார், பட்டினத்தாரிடம் கணக்கெழுதுந் தொழில் பூண்டிருந் தனர். பட்டினத்தடிகள் மெய்த்துறவு பூண்ட ஞான்று, தமது பெரும்பெருஞ் செல்வத்தை எடுத்து எடுத்து யாவருக்கும்

வழங்குமாறு சேந்தனாரைப் பணித்தனர். கட்டளையைத் தலை மேற்கொண்டு கணக்குப் பிள்ளை அங்ஙனமே செய்ய, மன்னவன் சேந்தனைப் பொருள் கவர்ந்தனர் என்ற ஐயங்கொண்டு அன்னோரைத் தளையிட்டுச் சிறையிற் புகுத்தினன். மனைவி மக்கள் முதலிய உற்றோரைப் பிரிந்து சேந்தனார் சிறை வாழ்க்கை செய்து வந்த காலை அவருடைய புதல்வன் ஒருவைகல் திருவெண்காட்டடிகளைக் கண்ணுற்று அன்னோரின் திருவடித் தாமரைகளில் வீழ்ந்து வணங்கினன்.

வணங்கிய புதல்வனைச் சிவனடியார் அன்புடன் அணைத்து உச்சிமோந்து அருகிருத்தி அருள் நீறு நல்கி அவன் யார் என்றும், அவனது விருப்பம் யாதென்றும் கடாவினர். அம்மகவு "பெரியீர்; அடியேன் தங்கள் கணக்கெழுதிய சேந்தனாரின் புதல்வன். நான் என் தாய் வயிற்றில் இருக்கும்பொழுதே என்னுடைய தந்தை அரசனால் காவற் சாலைக்கு அனுப்பப்பட்டாராதலால் நான் அன்னோரை அறியேன். எனக்கு வேறு உற்ற உறவினர் இன்மையால் என் தாய் நெற்குற்ற நாங்கள் உயிர் வாழ்கின்றோம். தக்க காலங்களில் தாயார் நினைப் பூட்டும், "கடவுளை நம்பினோர் கனமடைவர்" என்ற மொழியை உன்னித் தங்களைப் புகலடைந்தனன். காப்பது நுங்கடமை என்று விடையிறுத்தான். கேட்ட பெரியோர் கண்களில் நீர்ததும்ப அகங்குழைந்து அக்குழவியுடனே சிறைச் சாலை எய்தி 'மத்தளை தயிர்' என்ற செய்யுளை யியம்பிச் சிவனை நினைதலும் அரசனால் இடப்பட்ட சேந்தனாரின் தளை நொறுங்கிப் போய்விட்டது. இதை அறிந்த அரசன் அச்ச மிகக்கொண்டு காவலினின்றும் அகற்றச் சேந்தனார் அடிகளின் தாமரைத் தாள்களில் வீழ்ந் திறைஞ்சினர்.

பணியும் அன்பனைப் பட்டினத்தார் பார்த்து "நின் வினைப் பயனால் சிறை வாழ்க்கை செய்தனை. இனி எதை இச்சிக்கினும் தருகின்றேன். இச்சேயை ஒப்புக்கொள்" என்று கூறித் திருநீறளித்தனர். மொழிந்தவை சேந்தனார் செவிகளில் அமிழ்தினும் இனிதாகச் செல்ல உவகை பூத்துச் 'சிவப்பேறு வாய்ந்த பெரியீர்! தேவர்களும் விரும்பாநின்ற வெறுக்கையை வெறுத்து, நாடவர் பழித்துரை பூணதுவாக் கொண்டு எதன் பொருட்டுத் திரிதருகின்றீரோ, அதனையே இச்சிறியனேனும் விழைந்தனன்' என்று செப்பக் குரவன் திருவைந்தெழுத்தை நெஞ்சமடங்கும் திறத்துடனே அறிவுறத்தகலச் சேந்தனார் தமதில்லிற் கேகினர். கணவனைக் கண்ணுற்ற காதலியின் களிபேருவகையானது காலன் பட்டினம் புகுந்த நெருங்கிய உற்றார் மீண்டும் வந்தால், ஒருவனடையும் மகிழ்ச்சியினும் மிக்கது. தக்க முகமன்கூறி

மணவாளனை அடிபணிந்து நல்வரவேற்றனர். வரவேற்ற இல்லாளை ஏதிலார்போல் நோக்கி நின் புதல்வனை ஏற்றுக்கொள். நான் தவம் புரிவான் ஏகவேண்டும் என்று மொழியக் கற்பு மிக்கார் தன் கேள்வனை மீண்டும் பணிந்து நும்கடவுளாகிய எட்டுத் தன்மையனை நோக்கி நீவிர் தவங்கிடப்பது எங்ஙனம் முறையோ அவ்வாறே இல்லாளுக்கு இல்லானையின்றிப் பிறிதொரு தெய்வமின்மையால், அடியாள் நுமக்குத் தொண்டு செய்ய உரிமைப்பாடு உள்ளேன் அல்லேனோ? என்னை விட்டுப் பிரிவீரெனில் யான் உயிர் வாழேன் என்று ஆணை கூறினர். கற்பிற் சிறந்த மாதரசியின் உறுதி மொழிகளைக் கேட்டு அவளையும் உடன் கொண்டு செல்ல நாயனார் திருவுளங் கொண்டு, மனைவியாருடனும் புதல்வனுடனும் காட்சியளவே வீடுபேறளிக்கும் பெரும்பற்றப் புலியூரைக் குறுகி அவண் விறகெடுத்து விற்றுக் கிடைக்கும் ஊதியத்தைக்கொண்டு வரகு, கேழ்வரகு முதலியவை விலைக்குக் கொண்டு பொது மடங்களிற் கூழ் காய்ச்சி "நினைப்பவர் மனம் கோயிலாக்கொண்டானை" நினைந்து பின் அதனை மாந்தி அவாக்கெட்ட நெஞ்சத்தினராய்த் திருநீறு புனைந்து ஐந்தெழுத்தை உச்சரிப்பார். ஆசிரியர் அறிவுறுத்தியவற்றிற் சிறிதும் வழுவாத சேந்தனாரின் மனைவியும் மகவும் அவருடைய ஆணையை அணுவளவும் அகலாது காத்துவந்தனர்.

இவர்களது செவ்விய ஒழுக்க சீலத்தைப், பொய்த்தவர்கள் நாணுமாறும் மெய்த்தவர்கள் கடைப்பிடித்து உய்யுமாறுஞ் சிவபெருமான் ஒரு திருவிளையாடலியற்றத் திருவுளங் கொண்டு நூறுகல அரிசி சோறு படைக்கும் சோழன் செவியில் கேட்கச் 'சேந்தன் கூழ் எதுக்களிக்கின்ற' தென்றருளிச் செய்தார். சோழன் வியப்புற்று அத்தகைய பெருந்தகையாரைத் தனக்குக் காட்டிக்கொடுப் போருக்குப் பெருநிதியும் அரிய நகைகளும் பட்டாடைகளும் வழங்குவதாய்ப் பறை அறைவித்தனன். மறுநாள் வழக்கம்போலச் சேந்தனார் விறகுக் கட்டுகளைச் சுமந்து சுங்கக் காசு கொடுப்பான் செல்கையில் சுங்கத்தில் பெரியதோர் கூட்டத்தைக் கண்டு மேற்செல்லாமல் மாதொரு பாகனை வழுத்திக் கூட்டங் கலைந்து நாம் சென்று கூழ் காய்ச்ச எத்தனை நேரம் செல்லுமோ, அதுவரை இப்பாலனும் இந்நல்லாளும் பசிப்பிணி எங்ஙனம் தாங்குவர் என்று துன்புற்றார். துன்புற்று நிற்கும் வேளையில் சுங்கக்கணக்கு எழுதுபவனாற் சேந்தனாரைத் தெளிந்த சோழன் அவர் முன் ஆசிரியனை மாணவன் தொழுதல் போல வீழ்ந்து பணிந்தனன். எவ்வுயிர்க்கும் தாய் என்றுந் திருமாலின் உருவாயும் மன்னர்க்கு மன்னனுமாகிய

செம்பியன் விறகெடுத்து விற்கும் ஏழைமைத் தொழில் செய்யுந் தன்னை வணங்கத் தாளாத பெரியார் பலபல இன்மொழிகளால் அவ்வாறு செய்யலாகாதென அறிவுறுத்தினர். அம்பலத்தாடுவான் உமது பெருமையை எனக்குப் புகன்றுளான் என்றும் இனி எளியனேன் கோயிலிலேயே தாங்கள் எழுந்தருள வேண்டிய ஏதுக்கள் செய்வேனென்றும் கூறினன். உமது உதவி ஒன்றும் நமக்கு ஆகாதென்று சேந்தனார் பகர்ந்த மொழிகளைச் செவியுற்ற வேந்தன் அலக்கணெய்தி எனது தொண்டு அவ்வளவு தீங்குளதாயின் அத்துடன் யான் உயிர் தாங்கேன் இதோ உயிர் துறக்கின்றேன் என்று புகன்றவராய்த் தனது கையிலுள்ள வாளால் ஊட்டியை அரியலுற்றான். கண்ட பெரியார் நெஞ்சு கலங்கி அச்செய்கையைப் பொறாராய்த் தடுத்தருளித் தாம் கொடுத்து வந்த சுங்கக்காசு மூன்றையும் கோமகனது கொடையாய்க் கொள்ள ஒப்பினர்.

நாட்கள் பல செல்ல, மன்றில் நடிப்பான் திருவருளால் ஒரு பகல் அவனது திருமேனி முழுவதும் கூழ்வடியக் கண்ட சிலர் தமது இறைவனிடஞ் சென்று சேந்தனே ஈசனது திருமேனி முழுவதிலும் கூழ்வடியும் அருவருப்பிற்கு ஏது ஆவனென்றும், அவனை அழைப்பித்து அதற்குத் தக்க தண்டனை செய்ய வேண்டுமென்றும் வேண்டி நிற்கச் செம்பியன் அஃது தன்னுடைய ஆணைக்கு மேம்பட்டதென்றும் அதற்குத்தண்டம் புரிய அருகனல்லனென்றும், விடையளித்தான். உடனே அவர்கள் திருநீலகண்டநாயனாரது புகழைப் பரவச்செய்வான் உருக்கொண்ட தவத்தவரைப் போலத் தில்லை மூவாயிரவரிடத்திற் சென்று முறையிட்டனர்கள். அத்தில்லைவாழ் அந்தணர்கள் சேந்தனாரது வாய் மொழியைக் கேட்டு அவர் அதனைச் செய்திலர் என்றுணர்ந்தும், நடராசர் திருவுருவைத் தேரில் அலங்கரித்து வைப்பதாகவும் அத்தேர் ஈர்ப்பார் இன்றித் தில்லை மூதூரைத் திருவலம் வந்து நிலையில் நிற்குமாயின் அன்னாரது கூற்றுவாய்மையே என்றும், இன்றேல் அவர் தண்டனைக்கு உரிய ராவரென்றும் உரைத்தனர். உரைத்தவர் உலகெலாம் உணர்ந்தோதற் கரியானை விரைவில் ஒப்புயர்வற்ற தேரில் அணிபெற வைத்திடுதலும் சேந்தனார் திருவருளை வழுத்தித் திருப்பல்லாண்டு என்னும் செந்தமிழ்த் தேனமுதத்தைத் திருவாய்மலர்ந்துகொண்டு தில்லைச்சிற்றம்பலத்துத் தெரு நான்குஞ் சூழ்ந்து தேர் நிலையின் முன்னர் வர, வேதங்களாகிய குதிரைகளால் ஈர்க்கப்பட்டுப் பிரமனாகிய சாரதியை உடைத்தாகிய அந்தத் தேர் தாய்ப்பின் செல்லும் சேயெனத் தானே சேந்தனாரைத்தொடர்ந்து பின்சென்று நிலை

யில் தங்கிற்று. இவ்விந்தையைக்கண்ணுற்ற பலரும் சேந்தனாின் திருவடிகளில் வீழ்ந்து வணங்கித் திருவருளை வழுத்தி அன்னோரது மாண்பு தோன்றிட அறுபான் மூவருக்கே உரித்தாகிய நாயனார் என்னும் மொழியை அவரது திருப்பெயரின் பின் இயைத்துச் சேந்த நாயனார் என அழைக்கத்தொடங்கினர்.

பின்பு சிலகாலங் கழிந்து திருவிசைப்பா முதலிய பதிகங்களும் புகன்று குறிஞ்சிநிலக் கடவுளாகிய குகவேளின் மீது சில கவிகள் தொகுத்து ஈசனுடன் இரண்டறக் கலந்தனர். இத்தகையாரின் மனைவி மலைமகள் நிலையிலெய்தியதும் மைந்தன் மயிலூரும் பெருமான் மாவடி சேர்ந்ததும் வியப்பல்லவாம்.

பெற்றோரும் மக்களும் *

[காழி. சிவ. கண்ணுசாமி B. A.]

நூல்

மக்களாற் பெற்றோ ரெய்தும் மகிழ்ச்சி மறை பொருளாகவே தானிருக்கும். அவரெய்துந் துன்பமு மச்சமும் அத்தன்மைத்தே: என்னை? முன்னதை இன்ன தென்றுரைத்தலோ வியலார், பின்னதைப் பிறர்க்கெடுத்துரைத்தலை விரும்பார். ஆக்க முறுங்காலத்தே வாழ்க்கை வான்சகட முய்க்கு மிடர்த்தொழிலை மக்கள் இனிப்பெய்துவிக்கின்றனர்; அல்லலுறுங் காலத்தோ அவ்வல்லலை ஆற்றொணுக் கழிதுன்பக் கடலாமாறு கைப்பூட்டுகின்றனர். வாழ்க்கைக்குரிய கவலைகளை அவர்கள் மிகுதியாக்குகின்றனர்; ஆனால் சாவு ஒன்றுண்டென்ற நினைவைக் குறைக்கின்றனர். இன விருத்தி செய்தல் மக்களுக்கும், மாக்களுக்கும் பொதுவானதே. ஆனால் அறிவும், ஆற்றலும், ஆன்ற நற்செயல்களும் மக்கட்கே சிறந்தன. தத்தம் யாக்கையின் சாயைகளை (மக்களை) யுண்டுபண்ணத் தவறியதால் நெஞ்சத்தின் சாயை (நற்கருத்து) களுக்கேனும் நல்லுருவந்தேட முன் வருவோராய மக்களற்ற பெரியோர்களிடத்திருந்தே புகழ் மன்னும் பெருஞ் செயல்களும், அறம் வளர்க்கும் பெருங் கொடைகளும் எழுவதை யியல்பாகக் காணலாம். "எச்சத்திற்கேமாப்பு" கருது மருங்கவலை எச்சமற்றோர்களிடத்தேதான் மிகுதியுங் காணக் கிடக்கின்றது. தங்குடியைத் தம்முழைப்பான் மேன்மையெய்துவித்த பெரியோர்கள் பெரும்பாலுந் தம்மக்களை அவர்கள் நெஞ்

---

*பேக்கன் பிரபுவின் அறிவுரைகளினின்றும் மொழி பெயர்க்கப்பட்டது.

சப்போக்கின்படி விட்டு வளர்க்கின்றனர். அஃதென்னையோ வெனின், அம்மக்களைத் தம்மினத்தையே யன்றித் தாமியற்றிய குலமேம்பாடாகும் பெருஞ்செயலையு நிலைநிறுத்த வந்தவர்களாகக் கருதுகின்றனர். எனவே அம்மக்கள் (அவர்களுக்குப்) பெற்ற மக்களும் (அவர்களாற்) படைத்த படைப்புகளுமாகின்றனர்

மக்களுள்ளேயே ஒருவர் மாட்டு மிகுத்தும் ஒருவர் மாட்டுக் குறைத்தும் பெற்றோர் காட்டு மன்பின் வேறுபாடு பெரிது மேற்றத்தாழ் வுடையதாக விருப்பது மன்றி அவர்களுடைய பெருங்கேடிக்கே இழிவைத் தருவதாயு மிருக்கின்றது. இது பெரிதுந் தாயர்க் குரியதே. "சான்றோனாகிய மகன் ஈன்றோனுக் குவப்பை யூட்டுகின்றான், சால்பிலா வொருவன் ஈன்றோனின் மானத்தை வீட்டுகின்றான்" எனச் சாலமன் கூறினது மதுகுறித்தே. பன் மக்களைப் பயந்த ஒரு குடும்பத்தில் ஆண்டில் முதிர்ந்த ஒன்றிரண்டு குழந்தைகட்கு மட்டும் அக்குடும்பத்திற் குரிய பெருமையைக் கொடுத்து வளர்ப்பதையும் இறுதியிற் பிறந்த இளைஞரை யெல்லாங் கட்டு திட்ட மற்ற கடாக்களன்ன விட்டுவிடுவதையுங் காணலாம். ஆயினும் முற்கூறிய ஆண்டின் முதிர்ந்த மக்கட்கும் பிற்கூறிய இளைஞர்கட்கு மிடையே தோன்றி ஓரோவிடத்துப் பெற்றோர்களால் மறந்து கைவிடப்பட்டவர்களாகவே கருதப்படும் ஒரு சில மக்களு மிருக்கின்றனர்; பெரும்பான்மை இவர்களே பின்னர்ச் சிறந்து திகழ்கின்றனர். பெற்ற மக்களிடத்துச் சிக்கனம் பிடித்தல் பெரியதோர் தீமை பயக்குந் தவறாகும்; என்னை? அது அவர்களது சால்பைக் குறைத்து, அவர்களைச் சூழ்ச்சிகள் கற்குமாறு செய்து, சிற்றினஞ் சேர்தலிலுய்த்துப் பின்னர்ச் செல்வம் வந்துற்ற காலை நெஞ்சம் போனவாறு நலந்திளைக்குமாறு கற்பிக்கின்றது. ஆகவே சிக்கனம் பிடித்தலல்ல, மக்கண் மிக்குழிக் கடிதலே நன்மை பயப்பது. (பெற்றோரும், ஆசிரியர்களும், ஏவற்காரர்களுமாகிய) மனிதர்களிடத்தே உடன் பிறந்தோராகிய இளஞ்சிறாரிடை ஒருவர்க் கொருவர் மீது பொறாமை யெழத்தூண்டி அதை வளர்த்து வரும் ஒரு மூடவழக்கமிருக்கின்றது. அதுவே பின்னர் வயது வந்துழி அவர்கள் விளைக்குங் கலாங்கட்கும் குடிகேட்டிற்கும் அடிப்படையாகின்றது. தம்மக்கட்கும், தம்முடன் பிறந்தார் மக்கட்கும், மற்று நெருங்கிய சுற்றத்தாரது மக்கட்கும் வேறுபாடு தோன்றாது ஒரு படித்தாய அன்பு காட்டி நடத்தல் இத்தாலிய நாட்டின ரியல்பாகும். அவர்களுக்குத் தாம்பெற்ற மக்களாயிருக்க வேண்டு மென்பதல்ல. தங்குடியில் வந்தவர்களாக விருந்தா லதுசாலும். உண்மை யுரைக்கப்புகின்

இயற்கையிலும் ஏறக்குறைய அவ்வாறேதான் காணப்படு கின்றது. உடன்பிறந்தார் மக்கள் அவர்தம் மாமனையோ சிற்றப்பனையோ உருவிலொத்திருப்பதையும், தன்னுடைய நெருங்கிய சுற்றத்தாரொருவன் அவன்றன் தந்தையையன்றித் தன்னையே யுருவிலொத்திருப்பதையுங் காணலாம்; இதுவுங்குடி யியல்பு போலும்!

தம்மக்கள் பிற்காலத்தில் எவ்வழியிற் பொருளீட்டல் வேண்டும் எத்தொழிலிற் பயிலல் வேண்டுமென்பதைப் பெற் றோர்கள் காலத்தானே தேர்ந்து தெளிவாராக. ஏனெனில் இள மையிற்றான் அவர்க ளேற்றவழித் திரும்புதற்குரியரா யிருக்கின் றனர்; இதை விட்டு அவர் தம்மறிவாற்றலுக்கேற்றவாறு தாமே தேர்ந்து கொள்வரென்று மக்கள் தம் நெஞ்சப்பான்மையை மிகுதியுங் கருதாதிருப்பாராக. ஒரு தொழிலில் இயற்கைக்கு மீறிய ஆர்வமும் வன்மையுங் காட்டுங்கால் அதன்வழி மக்களை விட்டு விடல் வேண்டும் என்பது முறையே. ஆயினும் பொது வாக "நல்ல தொன்றைத் தேர்ந்து அதைக் கடைப்பிடித்தால் அது பழக்கத்தால் நமக்கேற்றதாயு மெளிதாயு மாய்விடும்" என்ற கட்டளை நன்மை பயப்பதேயாகும்.

பெரும்பாலும் இளைய உடன்பிறந்தார்கள் ஆக்கமுற்று விளங்குபவர்களாகவே யிருக்கின்றனர்; ஆயினும் மூத்த உடன் பிறந்தார்களது உரிமையைக் கெடுத்து நின்றுழி அவ்வாறு ஆக்கமுற்றிருத்தல் அருமையினு மருமையே.

பொருளின் பிண்டக் கருத்துகள்

வருத்தத்தையுங் கவலையையும் மிகுத்திடினு மக்கள் மெய் யுழைப்பினு நெஞ்சவுழைப்பினுங் களிப்பை யூட்டுகின்றனர். ஆயினும் அரும்பெருஞ் செயல்களை யாற்றிவருவோர் பெரும் பாலு மக்களற்றோரே.

மக்களிடைக் காட்டு மன்பு ஒருவர்க்கொருவரிடை வேறு பாடுடைத்தாயிருப்பது பெற்றோர்களுக்குப் பெருமை பயப்ப தல்ல. ஆயினும் அன்பு காட்டப்படாது கைவிடப்பட்ட மக் களே பெரும்பாலும் பின்னர்ச் சிறந்து விளங்குகின்றனர்.

மக்கள்பாற் சிக்கனம் மாபெருந் தவறு. உடன்பிறந்தாருட் பொறாமை விளைத்தலை யறவே யொழித்தல் வேண்டும்.

உருவிலொப்புமை தந்தைக்கு மகனுக்குமட்டுமே யன்றிக் கிளையினர்க்கண்ணுங் காணப்படுகின்றது.

இளம் பருவத்திலேயே மக்கள் தம் பிற்காலத் தொழில் வழியைத் தேர்ந்து கற்றல் வேண்டும். ஏனெனில் அப்பருவத்தில் அவர்களது நெஞ்சத்திடை அது எளிதிற் பதிவதால் பழக்குவதற்கு எளிதாயிருக்கும். பெரும்பாலும் இளைய உடன்பிறந்தார்கள் ஆக்கமுற்று விளங்குபவர்களாகவே யிருக்கின்றனர்.

பழமொழிகள்

1 அடித்து வளர்க்காத பிள்ளையும்
முறுக்கிவளர்க்காத மீசையும் வாயிலேயக்கும்.

2 ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா?

3 தாயைப்போற் பிள்ளை நூலைப்போற் சேலை.

ஆத்திசூடி

இளமையிற்கல்.

குறள்

1 தம்பொரு ளென்ப தம்மக்க ளவர்பொரு
டந்தம் வினையான் வரும்.

2 தந்தை மகற்காற்று நன்றி யவையத்து
முந்தி யிருப்பச் செயல்.

3 ஈன்ற பொழுதிற் பெரிதுவக்குந் தன்மகனைச்
சான்றோ னெனக்கேட்ட தாய்.

தமிழ்மக்கள் நெஞ்சப்பாங்கும் இலக்கியப்போக்கும்

[திரு. கா. சுப்பிரமணிய பிள்ளையவர்கள் M. A., M. L.,]

இலக்கிய மென்பது மக்களுடைய விழுமிய கருத்துக்களைச் செவ்விய சொற்களால் விளக்குங் கருவியாம். இலங்கு இயம் என அச் சொற்றொடரைப் பிரித்துச் சொல்லாலும் பொருளாலும் செம்மைபெற் றொளிரு நூலெனப் பொருள் கொள்ளின் மேற் செப்பிய கருத்து வலியுறுதல் காண்க.

தலைச் சங்கத்திலே இயல் இசை நாடகமெனத் தமிழிலக்கியம் மூவகைப்பட்டதென்பது தொல்காப்பியத்துள் மூன்றையும்

பற்றிய குறிப்புகள் காணப்படுதலாற் றெளியப்படும். உள்ளக் கருத்தை அழகுபெறத் தெரிப்பது இயற்றமிழிலக்கியம். இயற் றமிழிலக்கியத்தைப் பற்றிய ஆராய்ச்சி ஈண்டுச் சிறப்பாக எடுத் துக் கொள்ளப்பட்டது. தொல்காப்பிய காலத்தே நல்லிசைப் புலவர் பலர் தோன்றினர்.

தலைச்சங்க காலத்து நூல்கள் யாவும் முழுமையுங் கிடையா மையின், அக்காலத்து மக்கள் நினைவின் போக்கையும் இலக்கிய முறைகளையும் ஆய்வதற்குப் போதிய கருவிகளில்லை. இடைச் சங்க நூலாகிய தொல்காப்பியத்தினாலே விளங்குவது யாதெ னின், உடலின் வேறாக உயிர் உண்டென்றும், உயிர் ஒரு தலை வனை உடையதென்றும், அத்தலைவன் உயிர் உலகம் என்னும் அவ்விரண்டிற்கும் அடிப்படையான பெருஞ் சார்பாய்ப் பிறப் பற்றவனாய் உலக நிலையாமை உணர்ந்து தன்னைப்பற்றி நின்றொ ழுகும் உயிர்கட்கு என்றூன்றும் நிலைத்ததோர் இன்பம் ஈய வல்லனென்றும், இருவினைப் பயனாய ஊழ் உண்டென்றும் அறிந் திருந்தார்கள் என்பதே. இறைவன் தன் அருள்பெற்ற பெரி யோர்கள் வாயிலாக உலகினர்க்கு, முதனூல்களை நல்கினான் என்பதும் பழந்தமிழரின் கொள்கை.

திங்களையும் ஞாயிற்றையும் இறைவன் இறைவியரின் திரு வடிவங்களாகக் கருதி வழிபட்டனர். நெருப்பினையும் அவ் வாறு வழிபட்டனரென்ப. அந்தணர் வானவர் ஆனினம் மழை வேந்தன் உலகம் என்னும் அறுவகையாரையும் வாழ்த்தும் மரபு அக்காலத் திருந்திருந்தது. அது, 'அமரர்கண் முடியும் அறுவகையானும்" என்பதனால் விளங்கும்.

வீடுபேறு கருதுவார்க்கு மெய்ந்நூற் பொருளையும் தவ நெறியையும் இனிதுணர்த்தும் திறமை சான்ற அருளாளர் பலர் திகழ்ந்தனர். அவர்கள் பெரும்பான்மையும் மலையிலும் காட்டி லும் அகத்துறவாதல் புறத்துறவாதல் பூண்டு வாழ்வர். அவர் கள் முக்காலமும் உணரவல்ல அறிவர் எனப்பட்டார். அவர்கள் கருதிய பயனைப் பயக்கவல்ல மறை மொழிகள் பல வகுத்தோதி னர். அவைகளே தமிழ் மந்திரங்கள். அவர் சொல்வழி நின்ற வர் எண்வகைத் தவத்தாராவர். அவர் நாட்டின்கண்ணே நூல்களைக் கற்பிக்கும் துறவிகள் அந்தணர் எனப்பட்டார். பொது வழிபாடு இயற்றும் இடங்களில் கடவுள் வழிபாடு புரி வோர் பார்ப்பார் எனப்பட்டனர். மூவேந்தரும் மூவேந்தரைச் சார்ந்த வேளிரும் ஒரு மரபினராகவும், வணிகம் உழவுமுதலியன கைக்கொண்டோர் பிறிதொரு மரபினராகவும் இருந்தனர். இது தொழில்பற்றிய பிரிவேயன்றிப் பிறப்புப் பற்றிய பிரிவு அன்று.

இப்பிரிவுகள் மருதநிலத்திலே அத்திணைக்குரிய வேளாண் பெருங் குழுவினின்றும் எழுந்தனவாகும். ஏனை நான்கு திணை நிலமக்களும் தத்தமக்குரிய தொழிலை ஆற்றி வாழ்ந்தனர். அவருள் எழுந்த பிரிவுகள் தெளிவுபட விளங்கவில்லை. பிற தொழில்களை மேற்கொண்டோரும் இவருள் அடங்குவர். தொல்காப்பிய மரபியலுட் கூறிய நாற்குலமுறை ஆரியரது வருண முறையைத் தழுவிப் பிற்காலத்தில் எழுந்ததாகும். நாற்குல முறையைப்பற்றித் திருவள்ளுவர் நூலில் யாதுங் காணப்படாமை தெளிக.

அறம் பொருள் இன்பம் வீடென்னும் நான்கினையும் எய்துதற்குரிய நெறிநிற்றலே அறவாழ்க்கை எனப்பட்டது. கருத்தொருமை உடைய தலைவனுந் தலைவியும் கூடி வாழ்ந்து இவ்வுலக இன்பம் துய்த்தபின் இருவரும் தூய உள்ளத்தொடு தவநெறி நிற்றலும் தொல்காப்பியத்துட் கூறப்பட்டது. நால்வகை 'ஆச்சிரமம்' தமிழர்க்குள் இருந்ததில்லை. இல்லறம் துறவறம் என்பன அறநூலாரால் கூறப்பட்டன. இதனால் இளமையிற் கல்வியும் தனித்துறவும் விலக்கப்படவில்லை. இல்லத்திற்குரிய தகுதியை அடைவதற்குரிய கல்வியும் ஒழுக்கமும் இருபாலார்க்குங் கூறப்பட்டது. பரத்தையிற் பிரிவும் அக்காலத்தில் இருந்தது. கள் ஊன்புசித்தல் சிறுபான்மை கேட்கப்படுகின்றன. இருமனப் பெண்டிரும் கள்ளும் கவறும் புலாலும் அறநூலாரால் கண்டித் தொதுக்கப்பட்டன. ஆடவர்க்குங் கற்பு கூறப்பட்டது. கல்விநலஞ் சான்ற பெண்டிர் பலர் அரசர்க்கும் உண்மை அறிவுறுத்தும் உறுதியுடையராய்த் திகழ்ந்தனர். அரசர்க்குள் அறப்போர் நிகழ்ந்தது. திரைகடலோடியும் பொருள் தேடுதல் அக்காலத்திய வழக்கு. மகளிரை மரக்கலத்தில் உடன் கொண்டு செல்லுதல் அக்காலத்தில் இல்லை. தமிழ்மக்கள் பிற நாட்டு மக்களையும் அன்புடன் வரவேற்கும் பெருந்தகையினராயிருந்தனர். இசையிலுங் கூத்திலும் மிகவும் ஈடுபட்டவர்கள். மருத்துவம் இவர்களுக்குள் தழைத்தோங்கியதுபோலப் பிற எந்நாட்டினரிடையிலும் அக்காலத்தில் இல்லை. நிமித்தம் பார்ப்பதும் தமிழருக்குள் இருந்ததாகத் தெரிகிறது. எழுத்துக்களின் வரிவடிவு தொல்காப்பிய காலத்திலேயே பழைமையாய்ப் பாராட்டப்பட்டது. ஒலிநூல் முதலிய நுண்ணூல்கள் பலவும் தமிழர் அறிந்திருந்தனர்.

தொல்காப்பிய நூற்பாக்களின் செய்யுள் நடை மிக்க பெருமிதமும் நுண்மையும் வனப்பும் வாய்ந்து பிற ஆசிரியர்களால் தழுவப்படுதற்கரிய உயர்நடையாகும். பயனில்லாத ஒரு சொல்லும் அவைகளில் இல்லை. அவைகளின் ஓசைநயம் பிற தமிழ்

லக்கண நூல்களுள் யாதொன்றினுங் காணப்படுமாறில்லை. இதனாலே இடைச்சங்க காலத்திற்றோன்றிய இலக்கணப் பெருநூல்களின் உயர்ந்த சொன்னடை பிற்காலத்தில் தளர்ச்சியுற்றதென்பது தெளிவு. தமிழ்ப்பெற்றி தொல்காப்பியர் காலம்வரை பெரியதோர் உயர்நிலை அடைந்து பிற்காலத்தே வரவரத் தாழ்ந்ததென்பது போதரும்.

கடைச்சங்க காலத்திலே தமிழ் மக்கள் வட நாட்டிலிருந்து ஆரியராற் கொண்டுவரப்பட்ட பிற தெய்வங்களின் வழிபாட்டையும் கைக்கொண்டார். புத்தம் முதலிய பிற சமயங்களுக்கும் தங்கள் நாட்டில் இடங்கொடுத்துச் சமயப் பொறுமையை மேற்கொண்டார். இராமாயண பாரத கதைகள் தென்னாட்டிற் பரவின. மூவேந்தரும் குறுநிலமன்னரும் தம்முட் போர்புரிந்து முரணுற்றனர் எனினும், புலவர்கள் அவர்களுக்குள் ஒற்றுமை வேண்டுமென்பதையே அறிவுறுத்து வந்தனர். யவனர் முதலிய மேலை நாட்டினரோடு கடல் வணிகம் நிகழ்ந்தது. பன்னாட்டு வணிக மக்களும் தென்னாட்டுத் துறைமுகங்களில் குழுமினர். அக்காலத்துக் கைத்தொழிற் சிறப்பு மிகவும் பாராட்டத்தக்கது. கடற்போருங் கலங்கரை விளக்கம் முதலியனவும் அக்காலத்திற் றிகழ்ந்தன. பல்வகை மக்களும் உண்டுடுத்துக் கவலையின்றிக் களிப்புடன் வாழ்ந்தனர். கற்புநிலை சிறந்தோங்கிற்று. வட நாட்டினர் கூட்டுறவால் நாற்குலப் பிரிவு தலைக்காட்டிற்று. தென்னாட்டு மன்னர் பயன் கருதிய வேள்வி முறைகளைக் கடைப்பிடித்தனர். சமய உணர்ச்சி குன்றி அற உணர்ச்சி ஒன்றே யாண்டும் நிலாவிற்று. இதனால் பிறசமயத்தார் தத்தங் கொள்கையைத் தமக்குத் தோன்றியவாறே பரவச்செய்ய இடம் பெற்றனர். ஆரியக் குருமார்கள் தங்கள் மறைகளைத் தமிழ் மக்கள் நம்பும்படி செய்து பார்ப்பனர் என்னும் பெயரையும் மேற்கொண்டனர். ஆரியரும் புத்தரும் தென்னாட்டிற் றிகழ்ந்த சிவநெறிக்குரிய சொற்றொடர்களால் தங்கள் கடவுளர்களையும் கொள்கைகளையும் வெளிப்படுத்தத் தொடங்கினர். சமயச்சார்பாய வடசொற்றொடர்கள் தென்னாட்டில் மிகுதியும் வழங்கலாயின. துன்புற்ற அரசரும் பிறரும் உணவின்றி நோன்பிருந்து உயிர்விடும் வழக்கத்தைக் கைக்கொண்டனர். இறந்த வீரரை வணங்கும் வழக்கமும் சிறந்திருந்தது. இசைப்பாடல்களும் கூத்துக்களும் அரசராலும் செல்வராலும் போற்றப்பட்டிருந்தன. அரசரும் வேளிரும் செந்தமிழ்ப் புலவர்களை மிக்க ஆர்வத்தோடு பாதுகாத்து வந்தனர். தமிழ் இலக்கியம் தனிப் பெருஞ் சிறப்புடையதாய் வடநாட்டினராலும் மதித்துப் போற்றப்பெற்றது. தக்க புலவர்கள் ஒற்றுமைப்பட்டு வாழ்ந்தனர்.

பரிசுபெற்றோர் பெறாதாரை ஆற்றுப்படுத்தனர். புரவலரைப் பாடிய தனிப்பாடல்களே பெரும்பான்மையும் கிடைத்துள்ளன. ஒருவரையுங் குறியாது கல்வி, ஊழ் முதலியவற்றைக் கூறுந் தனிப்பாடல்கள் மிகச் சிலவே. கிடைத்துள்ள தனிப்பாடல்களுள்ளும் பொருள்களின் இயற்கை நயங்களை உள்ளவாறு உணர்த்தும் திறமை சான்ற புலவர்களின் தனிப்பாடல்களே மிகுதியும் கிடைத்துள்ளன. விழுமியகருத்துக்கள் பொதிந்த நற்றமிழ்மொழிகளா லமைந்த அவர்கள் பாடல்களில் பிற்காலத்துச் சொல்லணிகளும் உயர்வு நவிற்சியும் இயற்கைக்கு மாறான செயற்கைப் பொலிவுங் காணப்படா. ஆறறிவு உயிர்களின் தன்மையையும் வனப்பினையும் நேரிற் கண்டு நுண்ணிதின் ஆய்ந்து அவற்றைத் தகைசான்ற செவ்விய மொழிகளால் கற்போர் உள்ளம் நினைதொறும் நினைதொறும் மகிழ்ந்தின்புறும் வண்ணம் செய்யுளியற்றும் வன்மை அக்காலத்துப் புலவர்களின் நூலுட் காணப்பெறுமாறொப்பப் பிற்காலத்துக் காப்பியங்களுட் காண்டலரிது. மக்கள் யாவரையும் ஒரு குடும்பமெனக் கருதும் விரிந்த நோக்கமும் அற ஒழுக்கம் ஒன்றுமேபற்றிக் கணிக்கப்படும் உயர்வு தாழ்வும் நம்பத்தக்க உண்மைகளை எல்லாருள்ளமுங் கொள்ளத்தக்க பொதுமுறையிற் கூறும் நடுநிலையும் அக்காலத்துச் சிறப்பியல்களாகும். அக்காலத் திறுதியி லேற்பட்ட புத்தப் பெருங் காப்பியங்களே முதன்முதல் சமயச் சார்பாய்க் கதைகளைத் தழுவி யெடுத்துரைக்கலாயின. அக்காலத்துச் சமயநூல்கள் இக்காலத்திற் கிடைக்கப்பெறவில்லை, கிடைத்துள்ளன பலவும் உலகியலைக் கவினுறத் தெரிக்கும் பொதுத்தன்மை வாய்ந்தனவே. திருமுருகாற்றுப்படையும் பரிபாடலும் சமயச் சார்பானவை யெனினும் பிற்கால நூல்களைப்போல அவற்றுள் சமயக் கொள்கைகள் விளக்கம் பெறவில்லை. உலகியல் கூறும் இலக்கியத்துள் சமயக் கொள்கைகளை விதந்தோதும் வழக்கம் புத்தராலும் சமணராலும் ஏற்பட்ட தென்பாருமுளர். விருத்தப்பாபோன்ற பாவகை சிலப்பதிகாரம் போன்றவற்றுள் காணப்படினும் அதுகாப்பியப் பெருங் கருவியாக அக்காலத்திற் கைக்கொள்ளப்படவில்லை. நாட்டுப்படலம் நகரப்படலம் என்னும் பிரிவுகள் அக்காலத்துக் காப்பியங்களுட் பயின்றில.

(தொடரும்)

கருவூர்த்தேவர்

[திரு. C. K. சுப்பிரமணிய முதலியாரவர்கள்]

(௫-ம் சிலம்பு, ௬௭-ம் பக்கத் தொடர்ச்சி)

"சிந்தையால் நினையிற் சிந்தையுங் காணேன்."

ஆதலின்,

"மைந்தனே யறியும் என் மனனே"

என்றருளினார். இதனாலேதான் கருவூர்த்தேவரும் தம சிந்தை காணாது சிவமாகி நின்று செயற்கரிய செயல் பல செய்தனராவர்.

இனி உலகவழக்கங்களையும், பழமொழிகளையுங் கூடத் தேவர் அங்கங்கே அழகாக வைத்துக் காட்டி யருளுவர்.

"நீரோங்கி வளர்கமல நீர்பொருந்தாத் தன்மையன்றே."
(திரிலோ-க)

என்பது, தாமரை யிலையிலே தண்ணீர்போல என்கிற பழமொழியை யுள்ளடக்கி நிற்கின்றது.

"விரிதிகழ் விழவின் பின்செல்வோர் பாடல்
வேட்கையின் வீழ்ந்தபோ தவிழ்ந்த
புரிசடை துகுக்கு மாவண வீதிப்
பூவணங் கோயில் கொண்டாயே. ௩

இத்திருப்பாட்டு இந் நாட்போலவே முன்னாளிலும் திருவிழாவிலே இறைவன் புகழ்களைப் பாடிக்கொண்டு செல்வோர் முன் செல்லாது பின்னால் நின்று ஓதிவரும் வழக்கமிருந்தது என்று தெரிக்கின்றது.

சைவத்தின் அடையாளங்களிலே ஒன்று சடைமுடியாம். இதனை மும்மையா லுலகாண்ட மூர்த்தி நாயனார் புராணத்திலே சேக்கிழாரடிகள்,

"வையம் முறைசெய் குவனாகில் வயங்கு நீறே
செய்யு மபிடேகமு மாகச் செழுங்கலன்கள்
ஐயன் னடையா ளமுமாக வணிந்து தாங்கும்
மொய்புன்சடை முடியே முடியாவ தென்றார்"

என்று விரித்தருளினார். மும்மையா லுலகாண்டதானது திருநீறு - அக்கமணி-சடைமுடி என்ற இம்மூன்றுமே அரசாங்க அடையாளமாகப் பூண்டு ஆண்டது என்று தெரிகின்றோம்.

புகழ்ச்சோழ நாயனார், மலையரணத்தினுள் உறைந்து தமக்கு அளந்த திறையை முறையாய்க் கொணராத அரசனாகிய அதிகனை வெல்லத் தம் படையை அனுப்பியபோது அப்படை சென்று அதிகன் அரணைத் தொலைத்து அவன் சேனைகளை முறியடித்து எண்ணிறந்த தலைக் குவியல்களைக் கருவூர்நகர் வாயிலுக்கு வெற்றி யடையாளமாகக் கொண்டு வந்தது. அந்தத் தலைக் குவியல்களிலே ஒரு தலையின் நடுவிலே ஒரு புன் சடை யிருந்ததுகண்டு புகழ்ச்சோழ நாயனார் மிகப் பரிந்தார்.

"தார்தாங்கிக் கடன்முடித்துச் சடைதாங்குந் திருமுடியார்
நீர்தாங்குஞ் சடைப்பெருமான் நெறிதாங்கண் டவராவர்
சீர்தாங்கு மிவர்வேணிச் சிரந்தாங்கி வரக்கண்டும்
பார்தாங்க விருந்தேனோ பழிதாங்கு வேனென்றார்"

அப்பழியைப் போக்கும் பொருட்டு அச் சடைமுடியைப் பொற் கலசத்திலே ஏந்திக்கொண்டு தீப்புகுந்து சிவபெருமான் திருவடியை யடைந்தனர் என்ற வரலாறு பெரிய புராணத்துட் கேட்கின்றோம்.

சிவனெனவே கண்டு வழிபடுதற்குரிய சிவவேடத்திலே சடைமுடி ஒன்று என்பது மெய்ப்பொருள் நாயனாரை வஞ்சனையால் வெல்லக் கருதிய முத்திநாதன்,

"மெய்யெலாம் நீறுபூசி வேணிகள் முடித்துக்காட்டி"ச்

சென்ற அதனாலேயுங் காண்கின்றோம்.

இக்கருத்தைத் தேவர் தமது திருவாக்கிலே பல இடங்களிலுங் காட்டியருளி யிருக்கின்றார்கள்.

"பாந்தள்பூ ணாரம் பரிகலம் கபாலம்
பட்டவர்த் தனமெருது அன்பர்
வார்ந்தகண் ணருவி மஞ்சன சாலை
மலைமகள் மகிழ்பெருந் தேவி
சாந்தமுந் திருநீறு அருமறை கீதஞ்
சடைமுடி சாட்டியக் குடியா
ரேந்தெழி லிதயங் கோயில்மா ளிகையே
ழிருக்கையி லிருந்த வீசனுக்கே." ௨

இத்திருப்பாட்டிலே இறைவனை அரசனாகவைத்து அவனது திருவடையாளங்கள் அரசனுக்குரிய அடையாளங்களாகப் பேசப் பெறுகின்றன. இதிலே அரச முடியாவது சிவபெருமானுக்குச் சடைமுடியேயாம் எனக் காண்கின்றோம்.

"ஐயபொட்டிட்ட வழகுவா ணுதலு
மழகிய விழியும்வெண் ணீறுஞ்
சைவம்விட்டிட்ட சடைகளுஞ் சடைமேற்
றரங்கமும் சதங்கையுஞ் சிலம்பும்
மொய்கொ ளெண்டிக்குங் கண்டநின் றொண்டர்
முகமலர்ந் திருகணீ ரரும்பக்
கைகள்மொட் டிக்கு மென்கொலோ கங்கை
கொண்டசோ ளேச்சரத் தானே. ௬

இப்பாட்டிற் சிவபெருமானது அழகிய மணவாளக் கோலத்தைக் குறிக்கும்போது **சைவம் விட்டிட்ட சடைகளும்** என்றதனாற் சடையானது சைவத் திறத்திற்கே சிறப்பாயுரிய அடையாளமா மென்பது பெறப்படுகின்றது. இக்கருத்துப் பற்றியே,

தனியனே னுள்ளங் கோயில்கொண்டருளுஞ் சைவனே (சாட். 6)

என்றுங் குறித்தருளினார்.

"ஐயா றதனிற் **சைவ** னாகியும்" என்ற திருவாசகமுங் காண்க. இறைவனை ஒரு அரசனாக வைத்துப் பாராட்டி அவனது அங்கங்களை அரச அங்கங்களாகக் காட்டிச் சொல்லிய சாட்டியக்குடி, (2) வது திருவிசைப்பாவின் அழகினை மேலே **சடை**யைப்பற்றிப் பேசும்போது கண்டோம். இறைவனது ஒக்கலாகிய குடும்ப முழுவதும் வேறொரு திருப்பாட்டில் அணி பெற அமைத்தருளுகின்ற அழகைக் காணலாம்.

"திருமகன் முருகன் தேவியே லுமையாள்
திருமகள் மருமகன் றாயாம்
மருமகன் மதனன் மாமனே லிமவான்
மலையுடை யரையர்தம் பாவை
தருமலி வளனுஞ் சிவபுரன் றோழன்
றனபதி சாட்டியக் குடியார்
இருமுகங் கழல்மூன் றேழுகைத் தலமே
யிருக்கையி லிருந்த வீசனுக்கே. ௫

இத்திருப்பாட்டை ஊன்றி நோக்கினால் அதன் அமைப்பினழகு நன்கு புலப்படும். இனிச் சிவபிரானது ஏனைச் சுற்றமுதலிய வேறுவேறு அங்கங்களை ஒருசேரத் திரட்டி வேறொரு திருப்பாட்டில் அமைத்திருக்கின்றார்.

"தொழுதுபின் செல்வ தயன்முதற் கூட்டம்
தொடர்வன மறைகணான் கெனினும்
கழுதுறு கரிகா டுறைவிடம் போர்வை
கவந்திகை கரியுரி திரிந்தண்

டழலுமி ழரவங் கோவணம் பளிங்கு
செபவடம் சாட்டியக் குடியா
ரிழுதுநெய் சொரிந்தோம் பழலொளி விளக்கே
ழிருக்கையு ளிருந்த வீசனுக்கே."

எம்பெருமானது இலக்கணங்களையும் தன்மைகளையும் ஒரு சேர வைத்துக் காணவேண்டுமானால் இம்மூன்று திருப்பாட்டுகளையுமே பார்க்கிற் போதுமானது என்று சொல்லும்படி சுருக்கியும் விரித்தும் தொகுத்தும் செம்பாகமாய் ஆற்றொழுக்கி னியல் வனவாய் அருளியிருக்கின்ற நலனமானது மிகப் பாராட்டி நுகரத் தக்கதாம்.

" அனலமே புனலே அனிலமே புவனி
அம்பரா அம்பரத் தளிக்கும்
கனகமே வெள்ளிக் குன்றமே யென்றன்
களைகணே களைகண்மற் றில்லாத்
தனியனே னுள்ளங் கோயில்கொண் டருளும்
சைவனே சாட்டியக் குடியார்க்
கினியதீங் கனியா யொழிவற நிறைந்தே
ழிருக்கையி லிருந்தவா றியம்பே" (௬)

"செம்பொனே பவளக் குன்றமே நின்ற
திசைமுகன் மான்முதற் கூட்டத்
தன்பரா னவர்கள் பருகுமா ரமுதே
யத்தனே பித்தனே னுடைய
சம்புவே யணுவே தாணுவே சிவனே
சங்கரா சாட்டியக் குடியார்க்
கின்பனே யெங்கு மொழிவற நிறைந்தே
ழிருக்கையி லிருந்தவா றியம்பே " (௭)

இத் திருப்பாட்டுகளிலே ஏகாரவீற்று விளியடுக்குகளை ஒன்றன்மே லொன்றாக அடுக்கி அவனதுவெவ்வேறு தன் மைகளினாலே வெவ்வேறாக அவனை அழைத்துப் பாட்டி னிறுதியில் "இத்தன்மைகளை யுடைய நீ ஏழிருக்கையா இத்தலத்திலே எழுந்தருளியிருக்கும் உனது தன்மை எனக்கறியச் சொல்லியருள்வாயாக" என்று வேல் றார். எங்கு மொழிவற நிறைந்த நீ, எல்லாமாயிரு பெரிய எங்கு நிறைந்த நிலையினின்றும் சுருங்கி எழுந்தருளிய நிலை எமக்கு வியப்பை விளைக்கி நீ விளக்கியருளினாலன்றி நாங்கள் தெளி லிற் காட்டுவாய் என்ற பொருளும் கிடை

“ திசைமுகன் மான்முதற் கூட்டத் தன்பரா
னவர்கள் பருகுமா ரமுதே—”

என்ற தொடரிலே அன்பர்களுடைய பெருமை மிக நுணுக்கமாகவும் அருமையாகவும் காட்டியிருத்தல் காண்க.

“ அளிபவ ருள்ளத் தமுதே போற்றி
கனவிலுந் தேவர்க் கரியாய் போற்றி
நனவிலு நாயேற் கருளினை போற்றி!”

என்பன முதலான பெரியோர் திருவாக்குக்களின் கருத்தும் இங்கே காணலாம்.

மேலே காட்டியவாறு எம்பெருமானைப் பற்பலவாறாக அடுத்தடுத்து விளித்து முடிவில் ஒரு வேண்டுதல் செய்து முடிக்கும் அழகினைத் திருவாசக முதலான திருவாக்குக்களிற் பற்பல இடங்களிலும் காணலாம்.

“அரசனே அன்பர்க் கடியனே னுடைய
அப்பனே யாவியோ டாக்கை
புரைபுரை கனியப் புகுந்துநின் றுருக்கிப்
பொய்யிருள் கடிந்தமெய்ச் சுடரே
திரைபொரா மன்னு மமுதத்தெண் கடலே
திருப்பெருந் துறையுறை சிவனே
உரையுணர் விறந்துநின் றுணர்வதோ ருணர்வே
யானுன்னை யுரைக்குமா றுணர்ந்தே”

(திருவாசகம், கோயிற்றிருப்பதிகம்—ங)

என்பது முதலான திருவாசகங்கள் இங்கே நினைவுக்கு வாராமற் போகா. இனி இவ்வாறு விளித்து எங்கும் ஒழிவற நிறைந்து ஏழிருக்கையி லிருந்தவாற்றினை அதாவது, அருவமாயும் அடியார்க் கருளும் பொருட்டு உருவமாயும் வீற்றிருக்கும் உனது தன்மையினை நீ காட்ட நான் காண்பேன். அப்படிக் காண்பேனாயின் என் சிறுமையும் உன்பெருமையுங் கண்டு போற்றி செய்து வந்திப்பேன். வந்தித்தபின் எனக்கருள் செய்யுமாறு வேண்டுவேன் என்பார்.

இவற்றிற்கு அடுத்த திருப்பாட்டில், “போற்றி போற்றி” ன்று அடுக்கிப் போற்றி செய்து அதற்கடுத்த திருப்பாட் “ அருளாய் அருளாய் ”—என்று வேண்டுகின்றார்.

ாறு வேண்டுதல் யாது கருதி எனின் துயர் கெடுவ அதாவது பிறப்பு, இறப்பாகிய துன்ப நீக்கத் ட என்பார். “ முன்னவா துயர்கெடுத் தேனக் ன்று முடித்துக் காட்டியருளினார்.

(தொடரும்)

திருவள்ளுவர், ஒரு மரநூற் பேராசிரியர்.

(Tiruvalluvar a great Botanist)

[திரு. அ. மா. முத்தைய நாட்டாரவர்கள்]

(௫-ம் சிலம்பு, ௬௱௧-ம் பக்கத் தொடர்ச்சி)

முன் கட்டுரையில் திருவள்ளுவர், கடல்போலும் பல்லுயிர்ப் பெருந் தொகுப்பை, இரண்டு பெரும் வகுப்புகளாக முறைசெய்து, அவற்றில் மரவுயிர் ஒரு பெரும் வகுப்பென்றும், விலங்குயிர் ஒரு பெரும் வகுப்பென்றும் கொண்டு, தான் எடுத்துக்கொண்ட விலங்குயிரின் சிறப்புடைய மக்களுயி ராராய்ச்சியில், மரவுயிரின் ஒற்றுமை, வேற்றுமை நிகழ்ச்சி யுணர்ச்சிகளை உவமையா லாராய்ந்துள்ளார் என்று கூறினன். இவர் முறைசெய்த இப்பெரும் வகுப்புகள், பிற்காலப் புராணக்கூற்றார், மற்றுள்ள உலகினர், மரவுயிருக்கும் (plants) விலங்குயிருக்கும் (animals) எளிதில் காணுறும் வேற்றுமைகள் கொண்டு செய்த முறைபோலன்று. என்னை? உலகில் எளிதில் காணுறும், மரங்களும், விலங்குகளும், முறைசெய்ய, பலவேறு வேற்றுமைகளுடையனவாய்க் காணுறினும், உயர்தர, மரம் விலங்கு இவைகளின் வகுப்புகளை, முறையே ஆராய்ந்து படிப் படியாய்க் கீழ் நோக்கின், இப் பல வேற்றுமைகள் ஒவ்வொன்றாய் நீங்க, சிலவுயிர்கள் மரமோ, அன்றி விலங்கோ, வென வுறுதிகொளு மாற்றலற்ற நிலையுறுகின்றா மாதலின், பின்னும் நுண்ணாராய்ச்சிகொண்டு, படிப்படியாய்க் கீழ்நோக்கி, ஆராயப் புகினும் சில வுயிர்களிடத்து ஒரு வேற்றுமையும் காணுறா நிலை யேற்படுகிறது. அந்த நிலையில் சிலவுயிரைச் சில காரணங்கள் கொண்டு விலங்கெனினு மமையும், சில காரணங்கள் கொண்டு மரமெனினுமமையும். காட்டாக, நடத்தலும் பறத்தலும் மூச்சுவிடுதலும் புலாலுண்ணலும் மரங்களிடத்துக் காணப்படுகின்றன. கிளைந்து தனியுறின் கிளைக்கும் விலங்குகளுமுள. இன்னும் காட்டுமுகத்தால் காண்பிக்கப் புகின் இக்கட்டுரை மிக விரியுமாதலால் விடுத்தனன். ஆங்கில உயிர்த்தொகுப்பு நூல்களில் (Books on Biology) கண்டுகொள்க. அந்நிலையில் நின்று ஆராய்ந்தால், மரவுயிரையும் விலங்குயிரையும் தனித்துக் காண்பிக்கும் உறுதிமுறைகள் யாவுமற்று, இப்பெரு மிரண்டு வகுப்புகளும், ஒரு தொகுப்பின் இரு கிளை வகுப்புகளாய் ஆவினிரு கொம்புகள்போல் தோன்றுகின்றன. ஆதலா லன்றோ, நம் திருவள்ளுவர்,

> "பிறப்பொக்கும் எல்லா வுயிர்க்குஞ் சிறப்பொவ்வா
> செய்தொழில் வேற்றுமை யான்"

என்னு முறுதிமொழி கூறினர். இங்ஙனம் கண்ணிற்காணப் படுமுயிர், சிறுமை விளக்கும் கண்ணாடியால் (Microscope) காணுறுமுயிர், இன்னும் கண்டறியாவுயிர் முதலிய எல்லா வுயிர்க்கும் பொதுவியலாய் கூறிய இக்குறளை, மக்கள் பெருமை கூறு மதிகாரத்தில் கூறுமாறென்னை யென்பது கூறுததுடன், 'எல்லாமக்க ளுயிர்க்கும்' என மக்களுக்கேயேற்றி, ஆர்வமுடைய மாணவர்கள், வளரும் கருத்தைத் தடைசெய்து குறுகிய நோக்கத்தில் செலுத்தியதுமன்றித் தன்னலம்கொண்ட பார்ப்பன மக்கள், கண்ட மனுவிதி முதலியதழுவி, 'வருணம் தோறும் யாக்கைதோறும் வேறுபடுதலிற் சிறப்பாகா வென்றும் கூறினார்' எனப் பரிமேலழகியார் முரண்பட்டு, திருவள்ளுவரைத் தம் மதம் தழுவி இழுக்கும் வகை, பரிமேலழகியார் நிலைக்குத் தகுதியற்றதுடன் நம் தமிழ் மக்கள் மிகவும் வருந்தத் தக்கதாகும்.

நிற்க, திருவள்ளுவர், உணர்ச்சி நுண்ணூ லாராய்ச்சியில் உயிர்த்தொகுப்பை முறைசெய்தும், விலங்கின் வகுப்பைப் பின்னும் முறைசெய்தும், மரவகுப்பில் காணுறும் ஒற்றுமை வேற்றுமை முதலியவைகளை வேண்டுமிடங்களில், உவமையால்மட்டும் காட்டிச் சென்றனர். என்னை? தான் எடுத்துக்கொண்ட நூலிற்கு மரவகுப்பின் முறை வேண்டற்பாற் றன்மையான். இப்பெரும் நோக்கங்கொண்டு திருவள்ளுவர் குறளில், மரம் மக்களை, ஆராய்ந்திருக்கின்று றென்பது (Comparative study from the life of plants and animals) அவர் காட்டியுறும் பல் குறிப்பால் நன்கு விளங்குறும். விலங்குகள்போல் மரங்களும் வித்தினின்றும் முளைத்து வளர்ந்து தளிர்த்துப் பூத்துக் கருக்கொண்டு காய்த்துப் பழுப்பதும் ஒருகால் பழுத்தவுடன் அழிவதும், பலகாலந்தோறும் பழுப்பனவாயும் காணப்படுகின்றன. உதாரணமாகத் தினை ஒருகால் பழுத்தவுடன் அழிகின்றது. புளியும், பனை, தென்னை, கமுகு முதலியனவும் காலந்தோறும் பழம் விளைவிக்கின்றன. விலங்குகளினும் நண்டு, தேள், பூச்சிகள் (Insects) கருவீந்தவுடன் அழிகின்றன. மற்றுத் தவளை, பாம்பு, பறவை, மாடு, நாய், கழுதை, குரங்கு, மக்கள் காலம் தோறும் கருக்கொண்டு குழவிகள் தோற்றுவிக்கின்றன. இக்காரணங்கள் கொண்டு பொதுவி லாராயுங்கால், ஒரு மரத்தின் வரலாறு வித்திற்றொடங்கிப் பழத்தில் முடிவதாகும்.

மரங்களும் மக்களும்.

இப் பெரும் முறை யுண்மைகளை யுணர்ந்தாராகித் திருவள்ளுவர் மக்கட்சிறப்பு நிகழ்ச்சி, உணர்ச்சிகளுக்கு மரத்தை உவ

மான வகையில் கூறுவான் தொடங்கி, ஐம்புலங்களைக் காப்பா னொருவனுக்கு, வித்தை உவமை கூறுகின்றார். இவ் வுவமை யைப் பாயிரமும், வான் சிறப்பும் நீக்கி, நூலினுதலிய பொரு ளின் கருப்பொருள் கூறும் வகையில் எடுத்துக்கொண்ட நீத் தார் பெருமை யதிகாரத்தில் நான்காவது குறளில்,

> ' உரனென்னுந் தோட்டியா னோரைந்துங் காப்பான்
> வரனென்னும் வைப்பிற்கோர் வித்து '

என்று வித்தில் தொடங்கிச் செல்லுமிடமெல்லாம் தான்கொண்ட பொருளுக்கேற்ப, மரத்திற்கும் மக்கட்குமுள்ள ஒற்றுமை, வேற்றுமை முதலியவைகளை உவமைகளால் எடுத்துக்காட்டிக் காமத்துப்பாலில் புலவி அதிகாரத்தில் ஆறுவது குறளில்,

> ' துனியும் புலவியு மில்லாயிற் காமங்
> கனியுங் கருக்காயு மற்று '

என்று பழத்தை உவமையாக எடுத்துக்காட்டி முடிக்கின்றார். இவைகளுக்கு முன்னும், பின்னும் மரத்தை மக்களுடன் எங்கும் சீர்தூக்கி ஆராய்ந்தாரில்லை. ஆகலின், மக்கள் வாழ்நாளில் காணுறும் சிறப்புகள் முதலியன கூறும் வகையில் மரத்தின் வாழ்வு முதலியவைகளை உவமை வகையில், வித்தில் தொடங் கிப் பழத்தில் முடிக்கு முறையை நோக்கின் முற்கூறிய கருத் துகளனைத்தும் பிறவும் கொண்டே கூறுகின்றாரென்பது தெள் ளிதி னுணரப்படும்.

பின்னும் இயலும் ஒவ்வொரு அதிகாரத்திலும் ஒன்று அல் லது இரண்டு குறள்கள் கொண்டு தான் கொண்ட பொருளை உவமை வகையில் விளக்குகின்றார். அங்ஙனங் கூறுங்கால் மிகுதியும் மரத்தையே உவமையாகக் காட்டுவர். எடுத்துக் காட்டாக;—

அன்புடைமையில், 'அன்பகத் தில்லா வுயிர்வாழ்க்கை வன்பாற்கண்
வற்றன் மரந்தளிர்த் தற்று'

விருந்தோம்பலில், 'மோப்பக் குழையு மனிச்ச முகந் திரிந்து
நோக்கக் குழையும் விருந்து'

என்றும் பிறவும் காட்டினார். ஆனால் மரத்தில் காணப்படாத நிகழ்ச்சி செயல் முதலியன கூறுமிடத்தும், மரத்தை உவமை யாகக்கூறக்கூடாவிடத்தும், மரவகுப்பு நீக்கி, விலங்கு வகுப்பி னின்றே உவமைகள் காட்டியுள்ளார். காட்டாக் :—

கல்லாமையில், 'விலங்கொடு மக்க ளனைய ரிலங்குநூல்
கற்றாரோ டேனை யவர்' என்றும்,

காலமறிதலில், 'பகல்வெல்லுங் கூகையைக் காக்கை யிகல்வெல்லும்
வேந்தர்க்கு வேண்டும் பொழுது' என்றும்,

மானத்தில், 'கொக்கொக்க கூம்பும் பருவத்து மற்றதன்
குத்தொக்க சீர்த்த விடத்து' என்றும்,

சுற்றந்தழாலில், 'காக்கை கரவா கரைந்துண்ணு மாக்கமும்
மன்னநீ ரார்க்கே யுள' என்றும்,

'மயிர்நீப்பின் வாழாக் கவரிமா வன்னா
ருயிர்நீப்பர் மானம் வரின்' என்றும்,

கூறியுள்ளார். காலமறிதல், கல்லாமை, சுற்றந்தழால், மானம் முதலியன விலங்குகளிடத்தே மிகவிளங்கிக் காணுறுவதும் மரங்களிடத்தில் அங்ஙனம் உவமை வகையால் கூறு மியல்புடன் விளங்கிக் காணப்பெறுமையும் (Specialised Stage) மரநூல் கற்றறிந்தோர் யார்க்கும் தெளிவாம். மக்களுக்கே சிறப்பாயுள்ள செயல் முதலியவைகளைக் கூறுமிடத்து, மற்றைய விலங்குகளிடத்தினின்றும், உவமைகள் கூறக்கூடாமையால், மக்கள் செயல் முதலியவைகளில் வெவ்வேறெடுத்துக் காட்டியுள்ளார் போலும். காட்டாக:—அவையஞ்சாமையில்,

பகையகத்துப் பேடிகை யொண்வா ளவையகத்
தஞ்சு மவன்கற்ற நூல்.

என்றும், பிறவுமாம். சிற்சில விடங்களிலே, கருவிகளையும், ஊர்திகளையும் உவமைகளாகக் காட்டியுள்ளார். காட்டாக;—இடனறிதலில்,

"கடலோடா கால்வ னெடுந்தேர் கடலோடு
நாவாயு மோடா நிலத்து" என்றும், பிறவுமாம்.

மேற்காட்டிய பல்வேறு உவமைகளை யாராயும்பொழுது, திருவள்ளுவர் மரமொன்றையே வித்தில் தொடங்கிப் பழத்தில் முடித்து உவமையால் காட்டினாரன்றி, மற்றைய விலங்குகள், மக்கள் செயல்கள், கருவிகள் முதலியவைகளிடமிருந்து எடுத்தாண்ட உவமைகளெல்லாம் ஆங்காங்கு பொருளுக்கேற்ப முறையின்றி எடுத்தாளப்பட்டவைகளாம். இப்பெற்றியானே, திருவள்ளுவர் மக்களுக்குச் சிறப்பாய் இயற்றிய குறளில் பொதுவகையில் மேற்காட்டிய இரண்டு பெரும் வகுப்புகளிலும், உயர்தரமக்களையும், மரத்தையும், சீர்தூக்கி யாராய்ந்திருக்கின்றாரென்பது (a Comparative study from the life of plants and animals) நன்கு விளங்குகின்றது. (தொடரும்)

வடசொற்றமிழகராதி

[திருவளர் செல்வி நாகை நீலாம்பிகை அம்மையார்.]

(கஉ-ம் பக்கத் தொடர்ச்சி)

வடசொற்கள்	தமிழ்ச்சொற்கள்
ஆராதனம்	வணக்கம்
ஆராதனை	வழிபாடு
ஆரியம்	வடமொழி
ஆரியர்	மிலேச்சர்
ஆரூடம்	முன்னறிதல், முன்னறிக்கை
ஆரோகணம்	எழும்புதல், எழுச்சி
ஆரோக்கியஸ்நானம்	நோய் தீர்ந்தபின் முழுகல்
ஆரோக்கியம்	நலம்
ஆரோபணம் ஆரோபம் ஆரோபித்தல்	ஏற்றுதல்
ஆர்ச்சிதம்	பொருள்தேடல், தேட்டை
ஆர்த்தி	விருப்பம்
ஆலகாலம்	நஞ்சு, பெருநஞ்சு
ஆலசியம்	சோம்பு, காலந்தாழ்ப்பு, பாணிப்பு
ஆலம்	நஞ்சு
ஆலயம்	கோயில்
ஆலாபம் ஆலாபனம்	அலப்பு, பேச்சு
ஆலாபித்தல்	வருந்திக்கூறல், புலம்பல்
ஆலிங்கனம்	தழுவல், புணர்ச்சி
ஆலோகம்	பார்வை
ஆலோசனை	சூழ்தல், ஓர்வு
ஆலோசித்தல்	ஆழ்ந்துநினைத்தல், ஓர்தல்
ஆவசியகம்	கட்டாயம், முதன்மை
ஆவத்து	இக்கட்டு, இடர், பொல்லாங்கு
ஆவரண சத்தி	மறைக்குமாற்றல், ஆணவமலமறைப்பு
ஆவரணம்	மறைவு
ஆவலாதி	புறங்கூற்று, புறந்தூற்றல்
ஆவாகனம்	உட்புகுத்தல்
ஆவிருத்தி	சுற்று, வழக்கம்
ஆவுதி	வேள்வி
ஆவேசம்	ஆவி, பேய், வெறி
ஆனந்த நித்திரை	இன்பத்துயில்
ஆனந்த பரவசம்	இன்பக்களிப்பு, பேரின்பக்களிப்பு
ஆனந்த பாஷ்பம் ஆனந்த பாட்பம்	இன்பக் கண்ணீர்

வடசொற்கள்	தமிழ்ச்சொற்கள்
ஆனந்தமயகோசம்	இன்ப உறை
ஆனந்தமயம்	இன்ப நிறைவு
ஆனந்தம்	இன்பம், பேரின்பம்
ஆனனம்	முகம்
ஆனி, ஹானி	கேடு
ஆன்மா	உயிர்
இகபரசாதனம்	இம்மைமறுமைப் பொருள்
இகபோக புத்திரார்த்த பரபோக விராகம்	இம்மை மறுமைக்குரிய மக்கட்பேறு, பொருள், துறக்க இன்பம் முதலியவற்றில் வெறுப்பு.
இக்ஷு	கரும்பு
இங்கிதம்	அடையாளம், கருத்து
இச்சகம்	முகமன்
இச்சாசத்தி	உயிர்க்கிரங்கல்
இச்சாநாசம்	அவாவின்மை
இச்சாபத்தியம்	பொருந்து முணவு, உணவுவரையறை
இச்சை	விரும்பல், விருப்பம்
இடங்கம்	உளி
இடபம், ரிஷபம்	எருது, காளை
இடபாருடன்	விடையேறி, சேவேறி
இடம்பம், டம்பம்	ஆரவாரம், வீண்பெருமை
இடாம்பீகன், டாம்பீகன்	வீணன், பெருமைக்காரன்
இஷ்டகாமியம், இட்டகாமியம்	விருப்பப்பேறு
இஷ்ட தேவதை, இட்டதேவதை	குலதெய்வம், தான் வழிபடுதெய்வம்
இட்டம், இஷ்டம்	அன்பு, விருப்பம்
இஷ்டி, இட்டி	வேள்வி
இதமித்தல்	ஒருமித்தல், ஒன்றித்தல்
இதம், ஹிதம்	இனிமை, நன்மை
இதயம்	நெஞ்சம், உள்ளம்
இதரபதார்த்தம்	வேறு பொருள்கள்
இதரம்	அழிவு, அயல், வேறு
இதரர்	அயலார்
இதாகிதம்	நன்மைதீமை, விருப்புவெறுப்பு
இதி	இப்படி
இதிகாசம்	பழங்கதை

வடசொற்கள்	தமிழ்ச்சொற்கள்
இத்தியாதி	இது முதலானவை
இந்திரகோபம்	தம்பலப்பூச்சி
இந்திரசாலம்	எத்து, கண்கட்டுமாயம்
இந்திரதநு	வானவில்
இந்திரதிசை	கிழக்கு
இந்திரபதம்	வானுலகு
இந்திரிய கோசரம்	ஐம்புலனுணர்ச்சி
இந்திரியத்துவாரம்	பொறிவாயில்
இந்திரிய நிக்கிரகம்	பொறியடக்கல்
இந்திரிய போகம்	ஐம்புலநுகர்ச்சி
இந்திரிய பிரத்தியட்சம்	ஐம்புலக்காட்சி
இந்திரிய வருக்கம்	ஐம்புலன்
இந்துகாந்தம்	நிலாமணி
இபம் ஹிபம்	யானை
இமகிரி } இமயம் }	பனிமலை
இமவான்	பனிமலையரசன்
இமிசை	கடுந்துன்பம்
இரகசியஸ்தானம்	மறைவிடம்
இரகசியம்	மறைபொருள்
இரசம் } ரசம் }	சாறு, மிளகுநீர்
இரசவாதம் } ரசவாதம் }	பொன்னாக்கல்
இரசாபாசம் } ரசாபாசம் }	அருவருப்பு, ஒழுங்கின்மை
இரசிகன்	இன்பம்
இரசிதம்	வெள்ளி
இரசித்தல்	சுவைத்தல்
இரச்சு } ரஜ்ஜு }	கயிறு
இரஞ்சிதம் ரஞ்சிதம்	இன்பம்
இரட்ச கர்த்தா ரட்ச கர்த்தா	காவற் கடவுள்
இரட்சகம் } ரட்சகம் }	பாதுகாப்பு, மீட்பு

(தொடரும்)

திருநெல்வேலித் திருக்கோயில்

சைவாகம முறைப்படியும் யாவரும் நன்கு அறியும் முறைப்படியும் திருக்கோயில்களில் சிவபெருமானுக்கு வழிபாடு முற்றிய பின்பே அவருடைய அருட்குறியாகிய திருநீறு அடியார்களுக்கு அளிக்கத்தக்கது. பார்ப்பன மக்களது செல்வாக்கினால் இடைக்காலத்தில் இம்முறை பிறழ்ந்து தேவார முதலிய தமிழ்மறை ஓதுதலாகிய வழிபாடுதொடங்குதலுக்கு முன் பார்ப்பனமக்களுக்கும் அது முற்றிய பின் ஏனைய மக்களுக்கும் திருநீறு வழங்கப்பட்டு வந்தது. இந்த முறைப்பிறழ்ச்சி வழக்கமானது தேவார முதலிய தமிழ்மறை ஓதுதலில் பார்ப்பன மக்களுக்குப் பொதுவாயிருந்த இகழ்வுணர்ச்சியையும் கடவுள் வழிபாடு செய்து திருநீறு பெறுதலிலும் கூடி இருவேறு மக்களுக்கும் வேறுபாடு உள்ளது என்னும் வேற்றுமை யுணர்ச்சியையும் குறிப்பினால் காட்டி வந்தது. இந்தக் கோணலான முறையானது சைவத் திருக்கோயில்களில் செம்மைப்படுத்த வேண்டுமென்று இந்து சமய அறநிலையப் பாதுகாப்புக் கழகத்தாரிடமிருந்து (Hindu Religious Endowments Board.) ஏறக்குறைய ஒரு ஆண்டுக்கு முன் திருநெல்வேலி அறவினையாளர்கள் (தர்மகர்த்தாக்கள்) ஆணைபெற்றிருந்தும் அந்த ஆணையை வழக்குக்குக் கொண்டுவரும் ஆற்றலில்லாதவர்களா யிருந்தார்கள். இப்பொழுது சில நாளைக்குமுன் திருநெல்வேலித் திருக்கோயில் அறவினைத் தொண்டுக்கு ஏற்படுத்தப்பெற்ற திருவாளர் டாக்டர் P. K. சுப்பிரமணிய பிள்ளையவர்கள் நிகழும் மாசித்திங்கள் 12-ம் நாள் வெள்ளிக்கிழமையன்று முன் நடைபெற்று வந்த தப்பான கோணல் முறையைத் திருத்திச் செம்மை முறையாக வழக்குக்குக் கொண்டு வந்தார்கள். அன்று முதல் திருக்கோயிலில் அச் செம்மை முறையே நடைபெற்று வருகின்றது. இந்த நன்முயற்சியில் அவர்கள் அஞ்சாமை என்னும் துணைகொண்டு ஈடுபட்டு நடந்து கொண்டதற்குத் தமிழ்ச்செல்வமக்கள் நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளார்கள். இறைவனருளால் அவர்கள் உடல் நலமும் உடையவர்களாய் நீண்டகாலம் இத்திருப்பணியைத் திருநெல்வேலியிலுள்ள எல்லா மக்களுக்கும் நலம்பெறும்படி செய்து வருவார்களாக.

சைவசித்தாந்த சங்கத்தார், திருநெல்வேலி.

திரிகடுகம்

சுக்கு, திப்பிலி, மிளகு என்பன முக்கடுகம், மூன்று கார்ப்பு மருந்துகள் (திரிகடுகு)

1. சுக்கு-சுண்டி என்ற சொற்கள் நீர் சுருங்கிய, அல்லது சுண்டிய இஞ்சிக்குப் பெயர்கள். சுப்பி, சுப்பல், சுள்ளி (நீர் சுருங்கிய சிறுகிளை)முதலியவற்றிற்போலச் சுருங்கு என்பது ருகரம் கெட்டு வலித்தல் விகாரம் பெற்றுச் சுக்கு என்று நின்றது. சுண்டு + இ = சுண்டி = இகரம் வினைமுதற்பொருளை யுணர்த்தும் விகுதி. வடமொழியார் சுடீ (Suthee) சோஷணேரசுடீ என்ற பகுதி உலர்தற்பொருளில் என்கின்றனர்.

2. திப்பிலி—திப்பி + இல்லி = திப்பி = சக்கை—இல்லி இல்லாதது, சக்கையின்றி விதைகள் ஒருவகைப் பசையால் ஒட்டியிருக்கிறது. ஆதலால் திப்பிலி எனப்படுகின்றது. வடமொழியார் பிப்பலி=ப்ருபால நபூர்ணயோ; ப்ரு என்ற பகுதி காத்தல் நிறைத்தல் என்ற பொருளில் வரும் ஆதலால் ப்ரு என்ற பகுதி பிபர்த்தி என்றாகி காத்தற் பொருளில் பிப்பலி என்றாயதாய்ப் பொருந்தாவிகாரங் கூறுகின்றனர்.

மிளகு—மிள = கார்ப்பு, கு = பண்புப்பெயர் விகுதி, மிள = காரம்.

மிளகாய்—மிளப்பு (கிராம்பு) மிளகரணை (கார்க்கின்ற அரணைப் பூண்டு).

வடமொழியார் — ம்ருங்பிராணத்யாகே, ம்ருங், என்ற பகுதி உயிர்விடுதல் (சாதல்) பொருளில் வரும் = நாவின் நுனி இதனாற் பாதிக்கப்படுகிறது என்று (மிரியதே) சாதல் என்ற பொருளுடைய ம்ருங், பகுதியினின்றும் மரீச என்ற சொல் தோன்றியது என்கின்றனர். பொருந்தாப் பகுதியிற் றோன்றியதா யிதுவுங் கூறப்படுகின்றது. உயிரைக் காக்கும் மிளகுக்கு உயிரைப்போக்கும் ம்ருங் பகுதியினின்று வந்ததாய்க் கூறுவது கொள்ளத்தக்கதன்று.

இம்மூச் சொற்களும் தமிழ்க்கிளைமொழி (திராவிடமொழி) களாகிய, தெலுங்கு, கன்னடம், மராட்டி, குஜராதி, மொழிகளிலும்—ஆரிய மொழியாகிய சமஸ்கிருதம், சமஸ்கிருதக் கிளைமொழிகளிலும் சிதைந்து விகாரப்பட்டு வரும் வகையைக் காட்டுதும்.

சுக்கு

சமஸ்கிருதம்	—சுண்டீ	கர்நாடகம்	—சுண்டி
ஹிந்தீ	—சுண்டீ	தெலுங்கு	—சொண்டீ
வங்காளி	—சுண்ட்ட	ஆங்கிலம்	—Dry ginger
மராட்டி	—சுண்ட்ட	பார்சி	—ஜஞ்ஜபீல
குஜராதி	—சுண்ட்ய		

திப்பிலி

சமஸ்கிருதம்	—பிப்பலீ	தெலுங்கு	—பிப்பலு
ஹிந்தி	—பீபல, பீபர	ஆங்கிலம்	—Long pepper
வங்காளி	—பிபுல	லாட்டின்	—Piper Langue
மராட்டி	—பிம்பலீ	பார்சி	—பிலபில, தராஜ
குஜராதி	—லிண்டிபீபல	அரபி	—பிலுடாரபில
கர்நாடகம்	—ஹிப்பலி		

மிளகு

சமஸ்கிருத	—மரீச, சிதமரிச	கன்னடகம்	—மெணசு-விலேய மெணசு
ஹிந்தி	—காலீமிரச, தட்சிணீ [மிரச	தெலுங்கு	—மரியா, மிரியங்
வங்கம்	—மரீச, கௌலமரீச	ஆங்கிலம்	—Black pepper
மராட்டி	—மிரேம் பாண்டரேம்	லாட்டின்	-Piper Nigram
குஜராதி	—மரீ [மிரீம்	பார்சி	—பிலபிலே அஸ்வத்
		அரபி	—பிலபிலே அஸீத்

(தமிழ்வைத்தியம்).

பாங்கற் கூட்டம்

[இளவழகனார்]

எலுவ ! சிறாஅர் ஏமம்உறு நண்ப !
புலவர் தோழ ! கேளாய் அத்தை
மாக்கடல் நடுவண் எண்நாள் பக்கத்துப்
பசுவெண் திங்கள் தோன்றி யாங்குக்
கதுப்புஅயல் விளங்கும் சிறுநுதல்
புதுக்கோள் யானையின் பிணித்தற்றால் எம்மே.

(குறுந்தொகை—கஉகூ).

இயற்கைப் புணர்ச்சி புணர்ந்த தலைமகன் தன் தலைவியைப் பிரிந்த பிறகு தன்னை எதிர்ப்பட்டு உற்றது கேட்ட பாங்கனுக்குத்,

> 'தோழ! சிறுவர்கட்குப் பாதுகாவலாய் உள்ள அன்ப! புலவர் பெருமக்களின் நண்ப! அதனைக்கேள்: கரிய கடலின் நடுவிலே, வளர்பிறைப் பக்கத்து எட்டா நாளின் கொழுந்தனைய வெள்ளைத் திங்கள் தோன்றினாற்போலக், கூந்தலின் பக்கத்தே விளங்குகின்ற ஒருத்தியின் சிறிய நெற்றி, புதிதாகப் பிணிக்கப்படுகின்ற யானையைப்போல என்னைப் பிணித்திட்டது'

என்று கூறியதாக உள்ளது இப்பாட்டு.

அறிவுரை கூறிச் சிறுவர்களை நல்வழிப்படுத்து அவர்கட்குப் பாதுகாவலாய் இருப்பவன் என்பது புலப்படச் 'சிறாஅர் ஏமம் உறு நண்ப' என்றான். அத்தை - முன்னிலை யசையுமாம். மா - கருமைப் பொருளில் வருதலை 'இரும்பு திரித்தன்ன மா இரு மருப்பின்'* என்பதிற் காண்க. கரிய கடல் கூந்தலுக்கும், அரைவட்டம்போன்ற எட்டாம்பிறைத் திங்கள் நெற்றிக்கும் உவமைகள். சிறுநுதல் ஆகு பெயராய் அதனையுடைய பெண்ணை யுணர்த்திற்று. சிறுநுதலைச் சுட்டினான், இதற்கே இத்துணைத் துன்பமுண்டாமானால், இன்னும் பெருந்தோள் பெருங்கண் முதலியவற்றா லெல்லாம் எத்துணைத் துன்பம் உண்டாயிருத்தல் வேண்டுமென்று தான் படுந் துன்பத்தின் பேரளவைப் பாங்கன் உணர்ந்துகொள்ளுதற் பொருட்டு. புதிதாகக் கொள்ளப்படுகின்ற யானை எழுந்து தன் வழிச் செல்லமாட்டாதவாறு ஒரு குழியினுள் அகப்பட்டுக்கொள்ளுதல் போல 'நானும் உணர்ச்சி தெளிந்து அறிவு நிறை ஓர்ப்பு கடைப்பிடி என்னும் தன் அறிவு ஒழுக்கங்களிற் செல்லமாட்டாதபடி அவள் சூழலில் அகப்பட்டுக் கொண்டேனென்பான், 'புதுக்கோள் யானையின் பிணித்தற்றால் எம்மே' என்றான். கண்டவுடன் அறிவு மயங்குதல் பெரிதன்று; மற்றுப் புணர்ந்து நீங்கிய பின்னரும் அறிவு தெளிதலின்றித் தன்வழிப்பட்டுக் கிடக்குமாறு அவ்வியற்கைக் காதலன்பு பிணித்திடுதலின் இங்ஙனங் கூறினானென்பது.

இவ்வாறு காமப் புணர்ச்சி புணர்ந்த தலைமகன் உடனே அப் பெண்ணினல்லாளைத் திருமணம் செய்துகொள்ளுதல் சிறப்பு. அஃதியலாதானால் அவனும் அவளும் திரும்பவும் ஒருவரை யொருவர் கண்டு கூடுதலையே விரும்புவார்களாதலின், மீண்டும் மீண்டும் அவர்கள் இயற்கைப் புணர்ச்சியிற்போன்ற களவொழுக்கத்திலேயே கண்ணுங் கருத்துமாய் நிற்பார்கள். உடனே திருமணம் செய்து கொள்வார் கற்பொழுக்கத்தில் நிற்பவராமாதலால், அவர்தம் கற்பொழுக்கத்தைக் கூறுதற்கு முன்பு அவரொழிந்த ஏனைய திருமணம் ஏலா மக்கள் நிற்குங் களவொழுக்கப் பகுதிகளை யெல்லாங் கூறிவிடுதல் அகப்பொருள் நூல்கட்கு மரபு. அங்ஙனங் கூறப்படும் அக்களவுப் பகுதிகளில் இப்பாங்கற்கூட்டமும் ஒன்றாய், இயற்கைப் புணர்ச்சியை அடுத்து நிகழ்வதாயும் உள்ளது.

பாங்கற் கூட்டமென்பது, தலைமகன் தன்தலைவியோடு முதற்கூட்டம் பெற்றுப் பிரிந்த மறுநாள், மீண்டும் அவளைக் காண்பதற்கு விழைந்து

---

* அகநானூறு. ௪.

அதற்குத் துணையாய் நிற்கும்படி வேண்டிக்கொள்ளுதற்காகத் தன் பாங்கனொடு கூடுதலாகும். அக்கூட்டம் ஆமாறு: பள்ளத்துவழி வெள்ளம் போல முதற்புணர்ச்சியால் உள்ளம் ஒழுகிப்பிரிந்த தலைமகனுந் தலைமகளும் பிரிந்ததன் பின்னர் மிகவும் உள் உளைந்து வருந்துவார்கள். புணர்ந்து பிரிந்த இவர்தம் உள்ள நிலைமையை ஆசிரியர் தொல்காப்பியனார்.

> வேட்கை ஒருதலை, உள்ளுதல், மெலிதல்,
> ஆக்கம் செப்பல், நாணுவரை இறத்தல்,
> நோக்குவ எல்லாம் அவையே போறல்,
> மறத்தல், மயக்கம், சாக்காடு என்றுஅச்
> சிறப்புடை மரபினவை களவுஎன மொழிப.*

என்னும் நூற்பாவால், 'புணர்தற்கு முன்னிருந்த வேட்கையே அதன் பின்னுமிருத்தல், இடைவிடாது ஒருவரை யொருவர் நினைத்துக் கொண்டிருத்தல், அங்ஙனம் நினைத்து ஒரே ஏக்கமாய் இருத்தலால் உடம்பு இளைத்திடுமாறு உள்ளம் மெலிதல், தங்கள் காதற்களவொழுக்கத்துக்கு ஏதேனும் இடையூறுகள் தோன்றுமானால் அவைகளும் நன்மைக்காகத்தான் தோன்றினபோலுமென்று தமக்கு ஆக்கமாகச் சொல்லிக்கொள்ளுதல், தம் அவாவைப் பொறுக்குமளவும் பொறுத்து நாணத்தோடிருந்து பொறுக்கமாட்டாத பொழுது அந்நாணத்தைக் கடந்து விடுதல், பிறர் தம்மைப் பார்த்த காலங்களிலெல்லாம் தாமொழுகுங் களவொழுக்கத்தைத் தெரிந்துகொண்டுதான் இவர்கள் இவ்வாறு பார்க்கிறார்கள்போலு மென்று அவர்கள் பார்வையைத் தங்கருத்துக் கேற்பத் திரியக்கொள்ளுதல், இடைவிடாத இக்காதல் நினைவினால் வருந்தி விளையாட்டு முதலியவைகளையெல்லாம் மறந்து விடுதல், செய்வது இன்னதென்றறியாமலே தம் அன்பினையும் அதன் வழியவான அவா ஆற்றாமைகளையும் எதிர்மொழிதானுங் கூறுதல் ஏலாத பறவை விலங்கு முதலியவற்றோடெல்லாம் கூறிக்கொள்ளுதல், ஆற்றமுடியாமையினாலும் தம் எண்ணம் விரும்பியவாறு நிறைவேறாமையினாலும் இதனிலும் இறத்தலே நன்றென்று கூறிக்கொள்ளுதல் முதலியவைகளா மென்பர். இவற்றுள் இக்காதன் மக்கட்குத் தோன்றும் இடையூறுகளாவன பிரிவு முதலாயினவா மாதலின் அப்பிரிவும் அன்பினாலல்லவா நிகழ்ந்தது என்றிங்ஙனங் கூறிக்கொள்ளுதல் ஆக்கஞ்செப்பலா மென்றும், தலைவனும் தலைவியும் தன் பாங்கனுக்கும் தோழிக்கும் தங்கள் ஒழுக்கத்தைக் கூறி உதவிசெய்யுமாறு வேண்டுதலே நாணத்தைக் கடத்தலா மென்றும், 'தலைவன் வேட்டைமேலிட்டுக் காட்டுத்திரிதல் முதலியன செய்யானாதலும் தலைவி கிளியும் பந்தும் முதலியன கொண்டு விளையாடுதலைத் தவிர்ந்தாளாதலும் விளையாட்டு மறத்தலா மென்றும், தலைவன் மலைபாய்வேனென்பது முதலாகக் கூறுதலும் தலைவி இப்பிறப்பை யொழித்து மறுபிறப்பி லாயினும் என் கணவனை யடைவேனென்று கூறுதலும் அவர்கட்குச்சாக்காடா மென்றும் அறிதல் வேண்டும்.

இங்ஙனமெல்லாம் வருந்திக்கிடக்கும் இவர்தம்முள் தலைமகன் எண்ணுமாறு: 'நாம் தம் நலைவியை இயற்கைப்புணர்ச்சி யுற்றுப் பிரிந்த

---

* தொல், கள, கூ

போது நின்னிற் பிரியேன்; பிரியின் ஆற்றேன்' என்று அவட்குச் சொன்னேமல்லவா! மீண்டு நாம் அவளைக் காணாமையால் அக் காதல்நோயை அவள் பொறுத்துக் கொள்வளோ, அல்லது பொறுக்க மாட்டாமல் உள் உளைந்து வருந்துவளோ? ஒருகால் பொறுக்க முடியாதாயின் அதனைப் பிறர்க்குத் தெரியவொட்டாதவாறு மறைத்தல் அவட்குக்கூடுமோ அல்லது கூடாது போகுமோ? கூடாதாயின், அவள் அதன் பொருட்டு எவ்வாறெல்லாம் வருந்துகின்றனளோ; ஆ! என்னே, நாம் நம் தலைவிக்குச் செய்திட்ட பொறுக்கலாகாத் துன்பங்கள்' என்றிவ்வாறெல்லாம் முன்பு பிரிந்தஞான்றில் தான் கூறிய சொற்களை நினைந்து நினைந்து உருகுவான். ஆகவே மீண்டுங் கூடுவது எவ்வாறென்று எண்ணுவான். முன்பு முதற் கூட்டம் பெற்றபொழுது நமக்கு யாரும் துணை செய்யாதுபோகத் திருவருளுதவியால் வினையன்றோ நம்மை அவளொடு கூட்டிற்று; அங்ஙனமே அருள் வழிப்பட்ட அவ்வினை இன்றுங் கூட்டுவிக்குமென்று நினைத்து அவ்வினைவழியே சென்று அப்பொழிலிடத்தைச் சேர்ந்து அவட்கண்டு கூடி மகிழ்ந்திடுவன். அவ்விடத்தில் அவனும் அவளும் வினையினால் தலைப்படுதலால், இங்ஙனங் கூடியது **இடந்தலைப்பாடு** எனப்படும்.

இவ்வாறு நினைத்து இடந்தலைப்படுவோர் பெரும்பாலும் பாங்கனை இல்லாதாரும், பாங்கனை உடையராஞலும் நாணத்தைக்கடவாமல் அதன்கண் நிற்கும் நிறையுடையாரும், அல்லது அப்பாங்கனிடத்துக் கூறினால் அவன் மறுத்துக் கூறுவானே என்றெண்ணும் அச்சமுடையாரும், பாங்கனுமிருந்து நாணமுமில்லாரானவிடத்து வினை வழியே நிற்றல் வேண்டுமென்று நினைக்கு நீரருமாவே இருப்பரென்க. இவரல்லாத ஏனையோரே பாங்கற் கூட்டம் பெறுவர். இயற்கைப்புணர்ச்சியின் இறுதியில் தனக்குத் தலைவியாவாள் தன்னைப் பிரிந்து தன்தோழியரோடு சேர்ந்து அளாவிய போழ்து அவட்குச் சிறந்தாளென்று தன்னாலறியப்பட்ட அவள் உயிர்த்தோழி ஏதேனும் உதவி செய்வளாவென்று நினைந்துபார்த்து அத்தோழியாவாள் அவட்கன்றே சிறந்ததுணையாம், நமக்கு அங்ஙனம் ஆகாதன்றே; ஆதலால் நம் தலைவியை மீண்டுங்கூடுதற்கு நமக்குச் சிறந்த துணையுள்ள நம் பாங்கனுக்கு இதுகாறும் நிகழ்ந்தவைகளை யெல்லாம் எடுத்துக்கூறினாற் பின்பு இவளைச் சென்றெய்தக் குறையில்லை என்று உன்னித் தன் பாங்கன்பாற் கூற விரும்பித் தலைமகன் அவனை நினைப்பான். இது **திருச்சிற்றம்பலக்கோவையாருள்** 'பாங்கனை நினைதல்' என்னுந் துறையாகக் கூறப்படும். பின்னர் இவன் நினைந்தவாறே பாங்கனொடு கூடி அவன் துணைபற்றி அப்பொழிலகத்தில் அவட்கண்டு கூடி அளாய் மகிழ்வனென்ப.

இனி இவ்விரண்டனுள் பெரும்பாலாய் நிகழ்வது பாங்கற் கூட்டமோ அல்லது இடந்தலைப்பாடோவெனின், 'உலகத்தோர் இடுக்கணுற்றால் விதியானே தீருமென்று இரார்; முன்னம் தீர்த்தற்குச் சுற்றத்தாரையும் நட்டாரையும் நினைப்ப' ராதலாலும், பாங்கனையுடையவரும் நிறையழிந்தவருமே பெரும்பாலராதலாலும், இடந்தலைப்பாட்டைவிடப் பாங்கற் கூட்டமே பெரும்பாலதாய் நிகழுமென்க. ஆதலாலன்றோ,

ஆங்ஙனம் புணர்ந்த கிழவோன் தன்வயின்
பாங்க னோரின் குறிதலைப் பெய்தலும்
பாங்கிலன் தமியோள் இடந்தலைப் படலும்என்று
ஆங்குஅவ் விரண்டே தலைப்பெயல் மரபே*

என்று இறையனாரகப்பொருள் முதலிற் பாங்கற் கூட்டத்தையும் பின்னர் இடந்தலைப் பாட்டையுங் கூறி நிறுத்திற்றென்பது. அதற்கு நுண்ணுரை கூறிய நக்கீரனாரும் 'பெரும்பான்மையும் பாங்கனானென்பது சிந்திக்கும்: சிறுபான்மை விதியினானென்பது சிந்திக்கும்: அதனால் அவன் சிந்திக்குமாற்றாலே சூத்திரஞ் செய்யப்பட்டது' என்று உண்மை கிளத்தியதூஉங் காண்க. ஆங்ஙனமானால் ஆசிரியர் தொல்காப்பியனார், 'மெய்தொட்டுப் பயிறல்' முதலாகப் 'பேராச் சிறப்பின் இரு நான்கு கிளவியும்' என்பதீறாக வரும் இடந்தலைப்பாட்டுத் துறைகளை முதலிற் கூறி நிறுத்து அதன் பின்னரே 'பெற்ற வழி மகிழ்ச்சியும்' என்பது முதலாக 'வாயில் பெட்பினும்' என்பது ஈறாகவரும் பாங்கற் கூட்டத்தின் துறைப்பொருள்களைக் கூறிடுதல் என்னையோவெனின், இறையனார், ஆசிரியர் தொல்காப்பியனார் என்னும் இவ்விருபேராசியன்மாரும் இவ்வாறு முற்றும் நேர்முரணாகக் கூறும் பொருண்முறை யுண்மையை இனிது இணக்கி உண்மைப்பொருள் கிளந்து மயங்கத் தெளிவிப்பார் ஆசிரியர் பேராசிரியரொருவரராவே காணப்படுதலின் மற்று அவருரை கொண்டு அதனைத் தெளிதல் வேண்டும். ஆசிரியர் தொல்காப்பியனார் ஈங்குக் களவியலில் நிறுத்திட்டது போலவே, மேற் செய்யுளியலிலும் செய்யுளிற் கூறப்படும் பொருள் வகைகளைப்பற்றிக் கூறல் வேண்டி வந்த விடத்து, இடந்தலைப்பாட்டை முன்னும் பாங்கற் கூட்டத்தைப் பின்னுமாக நிறுத்திக்

காமப் புணர்ச்சியும் இடந்தலைப் படலும்
பாங்கொடு தழாலும் தோழியிற் புணர்வுமென்று
ஆங்கநால் வகையினும் அடைந்த சார்பொடு
மறையென மொழிதல் மறையோர் ஆறே†

என்றொரு நூற்பா இயற்றுவர். இதனுரையிலே அவ்விறையனார் நூற்பாவையும் எடுத்துக்கொண்டு ஒப்ப நிறுத்தி இணக்கிப் பொருளெழுதும் ஆசிரியர் பேராசிரியர்,

'காமப் புணர்ச்சி நிகழ்ந்தன்றி இடந்தலைப்பாடு நிகழாதெனவும், அவ்விடந் தலைப்பாடு பிறர் பயத்தல் அரிதென்பது அவள் ஆயத்தொடுங் கூடிய கூட்டத்தான் அறிந்த தலைமகன் பாங்கனை உணர்த்தி அவனாற் குறைமுடித்துக் கோடலும், தன்வயிற் பாங்கன் அவள்வயின் பாங்குசெய்யா னாகலின் அதன் பின்னர்த் தோழியாற் குறைமுடித்துக் கோடலுமென இந்நான்கும் முறையான் நிகழுங் களவொழுக்க மென்றவாறு'

என்று உரை கூறினார்.

இதனுள், காமப் புணர்ச்சி நிகழ்ந்தன்றி இடந்தலைப்பாடு நிகழாது என்றொன்று காணப்படுமாறுபோல, அதன் பின்பு இடந்தலைப்பாடு

---

* இறைய, ௩. † தொல், செய்யுளியல், கஅ௬.

நிகழ்ந்தன்றிப் பாங்கற் கூட்டம் நிகழாது என்பதொன்று காணப்பட்டிலது. ஆகவே இடந்தலைப்பாடு நிகழாமலே பாங்கற் கூட்டம் நிகழ்தலும் ஆம் என்பது பெறப்படுமன்றோ? மேலும் காமப் புணர்ச்சியை அடுத்து நிகழ்வதென்று கூறப்பட்ட அவ்விடந் தலைப்பாட்டினைத் தலைவன் தன் பாங்கனைக்கொண்டு குறைமுடித்துக்கொள்வான் என்றொன்று அதன்கட் காணப்படுதலால், பாங்கன் என்பவன் அவ்விடந்தலைப் பாட்டுக்கு வாயிலாவானென்பது தெளிவாகின்றது. பாங்கன் வாயிலாகவே, அவ்வாற்றான் அவன் கூட்டமாகிய பாங்கற் கூட்டமும் அதற்கு வாயிலாயிற்றென்பது உடன் தெளிவாகின்றது. தெளிவாகவே, பாங்கற் கூட்டம் நிகழ்ந்தாலும் அக்கூட்டம் ஒரு கருவியின் அளவாவே நிற்ப, ஆண்டும் நிகழ்வது இடந்தலைப்பாடேயாமென்பது விளங்கா நிற்கும். ஆகவே இப்பொழுது 'காமப் புணர்ச்சியை அடுத்து இடந்தலைப்பாடு நிகழும்: அவ்விடந் தலைப்பாடு பாங்கன் துணையின்றி விதியே துணையாக நிகழ்ந்தாலும் நிகழும்; அல்லது அங்ஙனம் நிகழாதானால் அவ்விடந் தலைப்பாடு என்பது விதித்துணையோடு பாங்கன் துணையும் பற்றி நிகழும்' என்பது பெறப்படுகின்றது.

பாங்கன் துணையே இல்லாமல் விதியே துணையாக நிகழ்வதும், விதித்துணையோடு பாங்கன் துணையும் பற்றி நிகழ்வதும் என்னும் இரண்டு வகையுமே இடந்தலைப்பாடாமாயினும், அவ்விரண்டனுக்கும் வேற்றுமை விளங்குமாறு முன்னதை மட்டும் இடந்தலைப்பாடு என்றும், பின்னதைப் பாங்கற் கூட்டமென்றும் அகப்பொருளாசிரியன்மார் வரைந்து கூறுவாராயினர். இங்ஙனம் வேறு வேறு பிரித்து ஒரேதுப் பொருட்டு அவை தாம் வரைந்து கூறப்பட்டனவானாலும், உண்மையான் சற்று நுணித்து நோக்குவார்க்கு அவ்விரண்டுமே இடந்தலைப்பாடாமென்பது விளங்கும். 'எனவே இடந்தலைப்பாடு இரண்டாயிற்று'* என்று ஆசிரியர் நச்சினார்க்கினியர் கூறியதும் இங்கு நினைவுகூரற்பாலது.

ஆகவே இயற்கைப் புணர்ச்சி புணர்ந்ததன்பின் இடந்தலைப்படுவான் வேண்டுந் தலைமகன், தானாகவேனும் இடந்தலைப்படுவான்: இல்லையானால் பாங்கனோடு கூடியேனும் இடந்தலைப்படுவானே யல்லது இவ்வகை யொழுக்கங்கள் இரண்டையுமே அவன் மேற்கொள்ளமாட்டானென்று அறிந்து கொள்க. ஈது அறிவித்தற்கே, இவ்வுரையாசிரியர் ஆசிரியர் பேராசிரியர் திருச்சிற்றம்பலக்கோவையாருரையுள்,

'பாங்கற் கூட்டம் நிகழாதாயின் இடந்தலைப்பாடு நிகழும்
இடந்தலைப்பாடு நிகழாதாயின் பாங்கற் கூட்டம் நிகழும்'†

என்று கூறுவர். இவரோடொப்பவே ஆசிரியர் தெய்வப் புலமை நக்கீரரும் இறையனார் களவியலுரையுள்

'பாங்கற் கூட்டம் நிகழின் இடந் தலைப்பாடு நிகழாது
இடந்தலைப்பாடு நிகழின் பாங்கற் கூட்டம் நிகழாது'‡

என்று கூறுதலுங்காண்க. ஆனால் ஆசிரியர் நச்சினார்க்கினியர்மட்டும் இவ்விருபேருரையாசிரியர்களின் கருத்தொடு முரணி இடந்தலைப்பாடும்

* திருச்சிற், இடந்தலைப்பாடு. † இறைய, ௩.

பாங்கற்கூட்டமும் என்னும் இரண்டு வகையுமே ஒருவற்கு நிகழுமென்னுங் கருத்துடையராய்த் தொல்காப்பியக் களவியலுரையுள்,

‘இரண்டாங்கூட்டத்தினும், மூன்றாவதாய் மேல் நிகழும்
பாங்கற் கூட்டத்தின் பின் நிகழும் இடந்தலைப்பாட்டினும்’*

என்பது போன்ற உரைமொழிகளை அங்கங்குங் கூறுகின்றார். தொல்காப்பியர்கருத்து அஃதன்மையாதல் முன்னும் பின்னுமாக இங்குந் தெளியப்படுதலின், மற்று அவருரை ஈங்குக் கொள்ளற்பால தன்றென்க. அவ்வாறானால், ‘காமப்புணர்ச்சியும்’ என்னும் அச் செய்யுளியல் நூற்பாவில், ‘என்று ஆங்கு நால்வகையினும்’ என்று இத்தனை யென்னுந் தொகுப்பெண் கொடுத்துக் கூறியதற்கு வழிவிடுமாறியாதோவெனின், ஆங்குக் களவொழுக்க வகைகள் நான்கென்று ஆசிரியன் கூறியதே யன்றி மற்று அந்நான்குமே அஃது ஒழுகினானுக்கு நிகழுமென்று கூறியதன்மையால், அதனால் ஆவதோர் இழுக்கிங்கு இல்லை யென்று கொள்க வென்பது.

இனிக் ‘காமப் புணர்ச்சியும்’ என்னும் தொல்காப்பியச் செய்யுளியல் நூற்பாப்பொருளையும் ‘ஆங்ஙனம் புணர்ந்த’ என்னுங்களவியல் நூற்பாப் பொருளையும் ஒத்திட்டுப் பார்ப்போமாயின், அவற்றுள் தினைத்தனையும் முரண்பாடு காணப்படாது போகத் தொல்காப்பியர் காமப் புணர்ச்சியையும் அதனை அடுத்து நிகழும் இடந்தலைப்பாட்டினையுங் கூறி அவ்விடந்தலைப்பாடு விதித்துணைபற்றியே நிகழாதாயின் பாங்கற் கூட்டத்தால் நிகழ்ந்திடுமென்றும், அதன் பின்னர் இன்னுந் தன் குறைகளையெல்லாம் முடித்துக்கொள்ளுதற் பொருட்டுத் தோழியிற் கூட்டமும் நிகழுமென்றும் இங்ஙனம் ஒன்றன்பின் ஒன்றாய்க் கூறுமிடத்துப் பாங்கற் கூட்டத்துக்குமுன் இடந்தலைப்பாட்டினை வைத்துக் களவொழுக்கத்தை நான்கு வகையாக்கி நூற்பா இயற்றினார். ஆசிரியர் இறையனாரோவெனின், காமப்புணர்ச்சி புணர்ந்த தலைமகனுக்கு அதையடுத்து நிகழவேண்டுவதான இடந்தலைப்பாடுதானும் பெரும்பான்மையும் உலகத்தில் பாங்கன் துணைபற்றியே நிகழ்தலன்றி, விதித்துணையேபற்றி நிகழ்தல் அங்ஙனம் பெரும்பான்மையதாகாமற் சிறுபான்மையதேயாய் முடிதலின், அப்பெருபான்மை சிறுபான்மை வேற்றுமைகள் தெரித்தற் பொருட்டுப் பாங்கற்கூட்டத்தை முன்நிறுத்தி, அது நிகழாதாயின் விதித்துணையே பற்றிய இடந்தலைப்பாடேனும் நிகழுமென்னுங் கருத்துடன் அச்சிறுபான்மையதாகிய இடந்தலைப்பாட்டினைப் பின் நிறுத்தி நூற்பாயாத்திட்டார். ஆதலால் காமப்புணர்ச்சியின் பின் இடந்தலைப்பாட்டினை நிறுத்திய தொல்காப்பியர் நூற்பாவால் அக்காமப் புணர்ச்சியை அடுத்து இடந்தலைப்பாடே நிகழ்வதாம் என்பதும், காமப்புணர்ச்சியின் பின் பாங்கற் கூட்டத்தை நிறுத்தி அதன் பின்னர் இடந்தலைப்பாட்டினையெடுத்துக்கூறிய இறையனார் நூற்பாவால் காமப்புணர்ச்சியை அடுத்து நிகழும் இடந்தலைப்பாடு பெரும்பான்மையும் பாங்கற் கூட்டத்தினுதவியினாலேயே நிகழ்வதாமென்பதும் புலப்படுகின்றனவன்றி மற்றவற்றுள் தினையளவேனும் முரண்பாடு புலப்படாமையின், இவ்விருபேராசிரியன்மாரின் நூற்பாக்களும் ஒரே முகமான கருத்துடையனவா

* தொல். கள, கக.

மென்று உணர்ந்து கொள்க. ஏனைப் பிறவற்றையும் இங்ஙனமே இணக்கிப் பொருளுரைத்துக்கொள்ளுதல் அவை நோக்குவார் கடனாம்.

இடந்தலைப்பாடு பாங்கற்கூட்டம் என்னும் இரண்டனுள் ஏதேனும் ஒன்று மட்டுமே தலைவனொருவனுக்கு நிகழுமாதலால், இவற்றுள் எது முன் நிகழ்வது, எது பின் நிகழ்வது' என்னும் இவ்வையப்பாடு எழுதற்கே இனிச்சிறிதும் இடமில்லை யென்பதும் ஈங்கே அறிந்துகொள்ளற் பாலது.

இனி, இடந்தலைப்பா டென்பது பாங்கற்கூட்டத்தின்கண் அடங்கி அதனொரு பகுதியாய் நிகழ்தலால், அப்பாங்கற்கூட்டத்தைக் கூறவே இடந்தலைப்பாடும் விளங்கிவிடுமாதலின், அப்பாங்கற்கூட்டமே இறையனாரகப்பொருள், திருச்சிற்றம்பலக்கோவையார் முதலான அகப் பொருணூல்களில் விரிவாகக் கூறப்பட்டதென்க.

இங்குப் பாங்கன் என்பவன் பார்ப்பனனாவான். நச்சினார்க்கினியர் 'இவன் பெரும்பான்மை பார்ப்பானா'* மென்றலின் சிறுபான்மை மற்றை யோரும் பாங்கனாதல் உண்டென்று கொள்க.

மெய்யுணர்வு

[திரு. M. P. S. வேலாயுதம் பிள்ளையவர்கள்]

“நட்புக்கு இருவர் வேண்டும். இருவரும் ஒருமித்து அவரவருடைய நல்லுணர்ச்சியை வெளிப்படுத்திக்கொள்ள வேண்டும். இரு சார்பிலும் அபிமானம் மேலிட்டு, அவரவர்களுடைய நன்மை தீமைகளிலும் ஈடுபட வேண்டும். இத்தகைய உணர்ச்சியும், அபிமானமும் இயற்கையாகவே ஒருவருக்கொருவர் உதவியாயிருக்கத் தூண்டுகின்றன. இதற்கெல்லாம் அடிப்படையாய் மெய்யன்பு இருக்கவேண்டும். மெய்யன்பில்லாமல் எந்த இரு நாட்டினர்களும் நட்பினராயிருக்க முடியாது”.

என்று ஓர் பெரியார் எழுதியிருக்கிறார். தனிப்பட்ட மக்களுக்கும் இவ்வரிய மொழிகள் பொருந்துமல்லவா?

“நட்புக்கழகு நட்புரிமை பூண்டு இருபேரும் தியாகஞ் செய்ய வேண்டும். இருபேருக்கும் நலங் கிடைக்கவேண்டும். இருபேரும் பரந்த மனமுடையவர்களாய்ப், பின்னால் வருவதை முன்னதாகவே அறிந்து கொள்பவர்களாய் விரிந்த நெஞ்சத்தினராய்த் தாராளமுள்ளவர்க ளாய்ச், சகிப்புத்தன்மை யுடையவர்களாய் இருக்கவேண்டும்”

என்றும் அவர் கூறியுள்ளதில் சற்றேனும் தவறுண்டா? நட்பினர் கள் இத்தகையோரா யிருப்பின் நட்பினர்க்குள் பிளவேற்படும் நாளும் உண்டோ?

* * * * *

துர்ப்பாக்கியம் தனிமையாய் வருவதில்லை. அவமானம் குவிக்கப் படுகிறது. அநீதியாய்த் தப்பெண்ணங்கள் சுமத்தப்படுகின்றன. கோபம் மூட்டப்படுகிறது. இன்னும் என்னவேண்டும்? அவசியமாயின் பதிலிறு: பகைவனுக்கு அடிபணியாதே. ஆனால் கௌரவத்துடன் நடந்துகொள்.

அவனினும் நீ உயர்ந்தவனென்பதைக் காட்டு. உன் சுயமரியாதைக்கும் பங்கமில்லாமல் கலவரத்தைத் தடுக்க முடியுமானால் பொறுமையாயும், மௌனமாயுமிருந்துவிடு.

* * * * *

எவரையும் அன்னியரென்று கருதவேண்டாம். உலகமனைத்தும் ஒரே குடும்பம். நாமெல்லாரும் சகோதர சகோதரிகளே! கடவுள் முன்னிலையில் எவ்வித்தியாசமுங் கிடையாது. மற்ற பாகுபாடுகள் மனிதர்களால் ஏற்பட்டவையே. உற்றாராயினும், உறவினராயினும், பிறராயினும், வெள்ளையராயினும், கருமைநிறமுடையவராயினும், பிறநிறம் பூண்டவராயினும், எல்லோரும் மானிடவர்க்கத்தைச் சேர்ந்தவரே யாவர். ஆகவே அனைவரும் ஒன்றுபட்டிருந்தால்தான் சுகம். அன்றேல், தாழ்வு தான்.

* * * *

உன்னுடைய கொடிய பகைவனிடத்திலும், கெட்ட எண்ணங் கொள்ளாதே. மனக்கசப்பு வேண்டாம். நேர்நின்று போர்புரி. வெற்றி பெறு. அல்லது தோல்வியை ஏற்றுக்கொள். ஆனால் நயவஞ்சகம் பண்ணாதே.

நினைப்புத் திரட்டு

[திரு. M. P. S. வேலாயுதம் பிள்ளையவர்கள்]

உன்னுடைய நிலையான நண்பர்கள் எவரென்றால், வறுமைக்காலத்திலும் பிரியாதிருப்பவர்களே. நிலையான நண்பர்கள் கிடைத்த பின் என்றைக்குமவர்களை விடாதே,

கேடுகளையும் துன்பங்களையும் போக்குவது துறவே.

ஒரு நண்பன் தன்னை யடுத்த நண்பனது குறைகளைப் பொறுத்துக்கொள்ளவே வேண்டும்.

உன்னை ஒருவர் அண்டிக் கேட்குமளவும் எதிலும் தலையிடாதே. ஏனெனில் பிறர் மிகையாய் நினைந்துவிடக்கூடும்.

வீட்டுக்கு வழி அன்பே.

உனது முழு நம்பிக்கையும் ஆண்டவனிடத் திருக்கட்டும். நீ என்றுங் கைவிடப்படமாட்டாய்.

அவதூறுகளும், எதிர்பார்த்தவைகை கூடாமற் போதலும் அடிக்கடி நம்மை யணுகுவது வாழ்நாளின் இயற்கையே. உடன் பிறப்பாளர் இதற்காக வருந்தவேண்டாம். நெஞ்சத்தை அமைதி செய்துகொள். வெயிலைக்கண்ட பனிபோல் நாளடைவில் மறைந்து போம்.

யாராவது உன் முன்னிலையிலாவது, பின்பாகவாவது உன்னைத் தூற்றினால், உள்ளபடியே வணக்கம் செய், ஏனெனில், நீ இன்னும் உயர்த்தப் படுகிறாய் அவனே தன் வாயாலேயே தான் தாழ்வானவனென்று காட்டிக் கொள்கிறான்.

துன்பங்களினால் நெஞ்சமுடைந்து போவது தற்கொலை செய்தலையே ஒக்கும். ஆகவே, என்ன துன்பமேற்பட்டாலும், எதுவும் நன்மைக்கென்று நம்பி, உறுதியான நெஞ்சத்துடனிருக்க வேண்டும்.

சிந்தனைத் திரட்டு

நீ பிறருக்கு நல்வழி காட்டப் புகுமுன், உன்னைத் தூயனாக்கிக் கொள்.

கடவுள் ஒருவருளரென்ற நம்பிக்கை கொண்டாயானால், நீ துன்பத்தைக் கடந்துவிடலாம்.

உன் பிறவியினாலும், செல்வத்தினாலும், உயர்ந்த வேலையினாலும், நீ பெரியோனாய்விட முடியாது. நீ செல்கிற வழியும், செய்கிற வேலைகளுமே உன்னை மேன்மைப்படுத்தும்.

நன்னடத்தையே உன்னை முன்னுக்குக் கொண்டுவரும், தீய அழித்துவிடும்.

அகங்காரியா யிராதே. அழிந்துவிடுவாய்.

தாராள நெஞ்சினனாயிரு. கன்னெஞ்சனை உயர்ந்தோர் அணுகுவதில்லை.

உன் வாழ்நாளாகிய கட்டிடத்துக்கு உண்மையே அடிப்படையாய் இருக்கட்டும்.

துறவும், உறுதியும், அன்பும் உன் கொள்கைகளா யிருப்பின் அவையே உனக்கு வெற்றியை அளிக்கும்.

நீ பணக்காரனா யிருந்தால் அக்கரையில்லை. நீ எவ்வளவிலிருக்கிறாயென்பதை யறிந்தே அறிஞர் உன்னை நாடுவர்.

ஒருநாளும் அடிமையாயிராதே, உறுதியான நெஞ்சமுடையவனாயும், அறிவாளியாயும், உரிமை யுள்ளவனாயு மிரு.

வருத்தம் நிலையற்றதே. அவ் வருத்தம் உனது அணிகலனாக விருக்கட்டும். உன் வாழ்க்கையை அதுவே புனிதப்படுத்தும்.

பேராசைக்காரனாயிராதே. உனக்குக் கடவுள் கொடுத்ததைக் கொண்டு அமைதியடைக.

மதிப்புரைகள்

திருச்சிராப்பள்ளி பிஷப் ஹீபர் காலேஜ் தலைமைத் தமிழாசிரியராகிய நடுக்காவேரி திருவாளர். மு. வேங்கடசாமி நாட்டாரவர்கள் எழுதிய 'சோழர் சரித்திரம், முதற்பாகம்' என்னும் உரைநடை நூலொன்று எமது பார்வைக்கு வந்தது. அதன்கண் மனு, முசுகுந்தன், சிபி, காந்தன், தூங்கெயிலெறிந்த தொடித்தோட் செம்பியன், கரிகாலன், கிள்ளிவளவன், நலங்கிள்ளி, சித்தன், பெருங்கிள்ளி, நல்லுத்தரன், கோப்பெருஞ்சோழர், கோச்செங்கட்சோழர் என்னும் சோழ மன்னர்கள் பதின்மூவர் வரலாறுகளும் பழந்தமிழ்நூற் சான்றுகளோடு வரலாற்று முறை பிறழாது மிகத் தெளிவான ஆராய்ச்சிக் குறிப்புகளுடன் காணப்படுகின்றன. அம்மட்டுமன்றித் தமிழகத்தின்பழமை, சோழநாட்டின் பழமை, சோழர்குடி என்பவைகளோடு கைத்தொழில் வாணிகம், கல்வி, சமயம், என்பனவும், பழந்தமிழ்நாட்டின் பழக்க

வழக்கங்களும் முன்னும் பின்னும் ஆங்காங்குமாக இட்டும் விளக்கியும் தெளித்தும் எழுதப்பட்டிருக்கின்றன.

உயர்தரப்பள்ளி மாணவர்களும் படிக்கத்தகுந்த எளிதான தமிழ் நடையுடையது. உரைநடையிலும் மேற்கோட்பாட்டுகளிலும் உள்ள அருஞ்சொற்களின் விளக்கத்துக்காகக் குறிப்புரை யொன்றும் இறுதியிற் கொண்டுள்ளது. கல்லூரிகளிலும் உயர்தரப் பள்ளிகளிலும் பாடமாக வைத்தற்குரியது. விலை அ. 12. இந்நூலில் ஆசிரியரிடத்திலும் எம்மிடத்திலுங் கிடைக்கும்.

காஞ்சி நாகலிங்க முனிவரவர்களால் அச்சிற் பதிக்கப்பட்ட **காஞ்சிப் புராணக் கலித்துறை** யென்னுஞ் செய்யுணூ லொன்று நம் பார்வைக்கு வந்தது. நூலாசிரியர் பெயர் முதலியன தெரியவில்லை. காஞ்சிப் புராணத்தை நன்கு பதிப்பித்த முனிவரவர்களே இதனையும் பதிப்பித்தவர்களாதலால் இந்நூலின் செவ்வியும் பதிப்பின் செவ்வியும் கூறாமலே விளங்கும். இது காஞ்சிப் புராணத்தின் சுருக்கம். உகஉ-கலித்துறைச் செய்யுட்களால் யாக்கப்பட் டிருக்கின்றது. நடை எளிது. விலை ச-அணா. வேண்டுவோர் காஞ்சி. நாகலிங்க முனிவர், காமாட்சி விலாசம், கீழ்ப்பாக்கம், சென்னை என்பார்க்கு எழுதுக.

ஆறுநாட்டு வேளாளர்களுக்கெனத் திருச்சியினின்றும் வெளிவரும் **துலாபிமானி** என்னுந் திங்கள் வெளியீட்டின் முதலிதழ் அதன் ஆசிரியர் திருவாளர் A. M. முத்துசாமிப்பிள்ளை யவர்களால் எமக்கு அனுப்பப்பட்டது. அது வேளாளர்களுக்கென வெளிவருவதாலும் மற்றையோர்க்கும் பயன்படக்கூடிய பொதுக் கட்டுரைகளையும் பெற்றிருக்கிறது. கருத்துடைய கட்டுரைகளே அறிஞர் பலரால் எழுதப்பட்டிருக்கின்றன. திறமான வேடிக்கைக் கூற்றுகளும் செய்தித்திரட்டும் அதன்கண் காணப்படுகின்றன. ஆண்டுக் கையொப்பம் ரூ. ௩. இதனைச் சின்னகடைத் தெரு, திருச்சி என்று இதழாசிரியருக்கு எழுதிப் பெறறுக்கொள்ளலாம்.

திருவாளர் R. P. சேதுப்பிள்ளையவர்கள் B. A; B. L; இயற்றிய **பன்னிருகட்டுரை** என்னும் கட்டுரைத்தொகுதி, நூலொன்றைப் பார்த்தேம். அதன்கண் அடங்கியுள்ள கட்டுரைகள் 'ஆண்மையும், அருளும்' 'ஒருசடையும் திரிசடையும்' 'கர்ணனும் கும்பகர்ணனும்' 'செவிச்சுவையும் கவிச்சுவையும்' செஞ்சொற் சதங்கை' 'செந்தமிழ்நாடு' 'தவமும் புகழ்' 'நல்மரமும் நச்சுமரமும்' 'பந்துவிளையாட்டு' 'பயிர்வண்டும் படர்கொடியும்' 'வண்மையும் வறுமையும்' 'வீணைக் கொடியோன்' என்பன. கம்பராமாயண ஆராய்ச்சி, பழங்காலப்பழக்க வழக்கங்கள், சில ஒழுக்க முடிபுகள், இயற்கைவனப்புகள் முதலியன அவைதம்மில் அமைந்து கிடக்கின்றன. கட்டுரைகள் நல்லதமிழில் அழகிய நடையில் பொருள் துறுத்து எளிதாய் எழுதப்பட்டிருக்கின்றன. இந்நூல் கல்லூரி மாணவர்கட்குப் பாடமாக வைக்கத்தகுந்தது. விலை. 12. அணா. வேண்டுவோர் ஆசிரியர்க்கும் எமக்கும் எழுதுக.



சென்னை அரசாங்க அமைச்சர்

உயர்திரு S. முத்தைய முதலியாரவர்கள்

Photo by A, Ratna & Co., Madras.